உ

சிவமயம்

சிவபோக சிந்தாமணி

என்னும்

ஸ்ரீ ரமணாநுபூதி

(முதற் பாகம்)

பாரத்வாஜி
முகவைக் கண்ண முருகனர்
இயற்றியது

ஸ்ரீ ரமணபாதானந்தரால்
வெளியிடப்பெற்றது

1960
அக்டோபர்

 [விலை ரூ. 2-0-0

சென்னை, தர்மாலயத்தின் ஆதரவில் வெளியீடு-1.
முதற் பதிப்பு, அக்டோபர், 1960 : 1000 பிரதிகள்

Printed at The Liberty Press, Madras—1

உ

ஓம்

நமோரமணய

முன்னுரை

'ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே'

என்னும் விதி மருட்பாவுக்கே யன்றி *அருட்பாவுக் கன்று. ஏனெனின்

'பன்மாலைத் திரளிருக்கத் தமையுணர்ந்தோர்
பாமாலைக் கேநீதான் பட்ச மென்று
நன்மாலை யாவெடுத்துச் சொன்னார் நல்லோர்'

என்பவாதிய ஆப்தவாக்கியங்கட் கேற்ப, அருட்பாக்கள் இறைவன் திருவுளத்தையே கவரும் பெற்றியவாகலின் என்க. எனவே, முற்றறிவனாற் சிறப்பிக்கப்பெறும் அருட்பாக்களுக்குச் சிற்றறிஞர் தம் †முன்னுரையாதியவால் அணி செய்தல் அழகுக்கு அழகு செய்வதாம். இனி,

அதைநினைத்தும் அதையுரைத்தும் இருப்பதன்றோ
ஞானிகளுக் கான நீதி—கைவல்யம்.
ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மாகநின்னைத்
தேடுவதும் நின்னடியார் செய்கை—தாயுமானார்

---

*தமையுணர்ந்தோர் பாட்டே அருட்பா; மற்றைப் பாடல் மருட்பா—திருவருட்பிரகாசர்.

† முன்னுரை, முகவுரை, அணிந்துரை, தகவுரை, சிறப்புப்பாயிரம் என்றற்றொடக்கத்தனவும் பாயிரத்துள் அடங்கினவே.

பாடும் பணியே பணியா வருள்வாய்—அருணகிரியார் என்றற் றொடக்கத்தனவாய செவ்வியர்தம் தெய்விகப் பண்பின்படி, ஜீவன்முத்தர் விதேக ஸ்திதி எய்துமளவும், குருஸ்துதி, அநுக்ரஹஸ்மரணம் ஆதிய ஞானசாரங்களையே மேற்கொண்டொழுகுவரென்பதும், அங்ஙனமே இந்நூலாசிரியரும்,

1. "நானோர் மதுகரமாய் நல்லசிவ ஞானவருள்
வானேங்கு மோன மலர்ப்பதத்தே வாழ்தலால்
ஊனே யுயிரே யுணர்வே புலன்களே
தேனேங்கு சாந்த சிவமயமாச் சேர்ந்தனவே"

—ஸ்ரீரமணாநுபூதி, பக்கம் 9, செய்யுள் 33.

2. வழுவிலா மெய்யன் புழுவலே வடிவாய்
வளர்மணி வாசகப் பெருமான்
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ வெனக்கோர்
துணையென நினைவனோ சொல்லென்
றிழுமெனு மொழியா லீசனைத் துதித்த
வினிமைசே ரேகசற் பத்திக்
கெழுமலென் னுள்ளங் கிளர்தர நின்பாற்
கிடைத்ததுன் னருள்குரு மணியே.

—ஸ்ரீ ரமணாநுபூதி, பக்கம் 4, செய்யுள் 4.

என்றதால் தலைவன்றாளே தலைப்பட்டனரென்பதும் தெளிவு. இவ்வாற்றால், அநுபூதியே உருவாகவும் நிராகாரமே பொரு

ளாகவுமுடைய *இவ்வருள் நூலுக்கு மேலே கூறியவாறு பாயிரமாதிய மிகையாகலான், இதிலுள்ள 'முன்னுரை', 'சிறப்புப்பாயிரம்' என்னும் பெயரிய சிற்றுரைகள் இந்நூல் இவ்வகையதெனற்கேயாம்.

திருவருணை
1—8—1960

இங்ஙனம்
நடனானந்தன்

---

*அருள் நூல் என்றதில் கற்பனை எத்துணையுமில்லை. உள்ளது ஒரே அறிவு. அவ்வொன்றேதான், அஞ்ஞான நிலையில் மருள் அல்லது ஜீவனென்றும், மெய்ஞ்ஞான நிலையில் அருள் அல்லது ஆன்மாவென்றும் வியவகரிக்கப் படுகின்றது. ஸ்வபாவ ஸ்திதியிலுதிக்கும் வாக்குகளை அருள்வாக்கென்பது ஆன்றோர் மரபு. சுவாநுபவ விளக்கங்களாய மறைமொழிகளை ஈசுவர வாக்காகப் போற்றலின் தாற்பரியமும் இதுவே.

அணிந்துரை

கனம் தங்கிய ஸ்ரீ மா. அனந்தநாராயணன், I.C.S.,
உயர் நீதிமன்ற நீதிபதி, சென்னை.

1. ஸ்ரீ முருகனர் இயற்றிய 'ஸ்ரீ ரமணனுபூதி' என்ற இந்த நூலுக்கு நான் முன்னுரை எழுதுவது அவ்வளவு பொருத்தமல்ல. உலக மரபை ஒட்டித்தான் அது நிகழ்கிறது என்று சொல்லவேண்டும். ஏனெனில், ஸ்ரீரமண பகவான் தம்மைத் தடுத்தாட்கொண்ட கருணைத் திறனல் ஸ்ரீ முருகனரின் உள்ளத்தில் "சிறைபெரு நீர்போல் சிந்தை வாய்ப் பாயும்" என்று மணிவாசகர் கூறிய வண்ணம் இடையருத "ஆறு நெய் வீழ்ச்சி" யாக நடைபெறும் மவுன அநுபூதியை, அவர் வாக்கே விளக்க வேண்டும் அன்றிப் பிறர் வாக்கு அல்ல. இருந்த போதிலும் இதில் உள்கிடையான சில நுட்பங்களை எனக்குப் புலனகும் அளவில் கூற முன் வந்துள்ளேன்.

2. எந்தக் கலையிலும் புதிய அற்புத சிருட்டிகள் ஏற்படுத்தக் கூடியவரைக் கற்பனைக் கடவுளர் (Genius) என்று போற்றுகிறேம். ஆனல் கலைக்கற்பனைகள் உண்மையில் ஓர் உலகில் நிகழ்வதில்லை; வேறுபட்ட பல உலகங்களில் நிகழ்கின்றன. அவைகளை ஒப்பிடக் கூடிய இலக்கிய ஆராய்ச்சி இன்றுவரை மேல்நாட்டு இலக்கிய மரபில் கூட அமையவில்லை என்பது என் தாழ்ந்த அபிப்பிராயம். விளக்கமாக, ஹெமிங்க்வே (Hemingvay) என்ற ஆசிரியரின் கற்பனைகள் உணவின்பம், சுவை இன்பம், பால் (Sex) உணர்ச்சி இன்பம் போன்ற [ராஜஸ] உடல் உணர்ச்சி உலகத்தை முற்றிலும் சார்ந்தவை. புரூஸ்ட்

(Proust) என்ற பிரான்ஸ் தேசப் பெருங் கலைஞரின் சிருட்டிகளும் அத்தன்மையனவாம். டால்ஸ்டாய் (Tolstoy) என்ற கதாசாரியர் இதற்கு மேற்படிகளில் உள்ள மக்கள் உறவு மனோதத்துவ உலகத்தில் சஞ்சரிக்கிறார். உலகப்பிர சித்தி பெற்ற ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்ற நாடகா சிரியரும் மக்களின் உணர்ச்சி முரண்பாடுகளையே ஆய்ந்து கற்பனை புரிகிறார். ஆனால் திருவாசகம், ஸ்ரீதியாகராஜரின் 'எந்தரோ மகானுபாவுலு' போன்ற தெய்வ இயல்பான கிருதிகள், அருணகிரியாரின் 'திருப்புகழ்'ப் பாக்கள், ஸ்ரீ முருக னாரின் நூல்களில் சில பகுதிகள், ஆத்ம சாந்நித்ய உலகில் கலைக்கற்பனைகளாக விளங்குகின்றன. இவர் யாவரும் கற்பனைக் கடவுளரே; ஆனால் வெவ்வேறு உலகங்களில் சஞ்சரிப்பவர்; இவர்களை எவ்வாறு ஒப்புக்கூறுவது?

3. எனினும், ஆத்ம சாந்நித்ய உலகம் தனிமைப் பட்டது. மவுனம், சாந்தி இவை தழைக்கும் செழிப்புள்ளது. அதைப் பகுத்தறிவாலும் நினைவாலும் அறிய இயலாது; சற்போதம் (Intuition) ஒன்றினால்தான் அறியலாம். என்றாலும், தெய்வப்புலமை வாய்ந்த ஸ்ரீ முருகனாரின் வாக்கில் அங்கும் எங்கும் அந்தச்சாயல் ஒளிப்பிரபையாக வீசுகிறது. உருகும் இயல்பு (Sensitivity) உள்ள மனத்தினர் யாவரும் கண்டு களித்துப் பேறு பெறலாம்.

"எதுவே அருளாய் எதுவே பொருளாய்
எதுவே தவமாய் எதுவே சிவமாய்
எதுசா தனமாய் எது சாத்தியமாம்
அதுவா லறிவா அவிர்மெய் அகமே;"

என்றும்,

"பாசா டவியாப் படர்கற் பனையின்
மாசா னமயக் கமனம் தெளிவுற்(று)
ஆசான் அருளால் அகவா தனைதிர்
பேசா அனுபூ திபிறங் கியதே"

என்றும் அவர் பிறர்க்கும் இன்பம் வேண்டும் விழைவினல் அந்தச் சாந்நித்யத்தைச் சொல்லில் விளக்கியுள்ளார்.

4. அதனல், ஸ்ரீ முருகனரின் கற்பனையில் உலகத் தொடர்பான சுவைகள் கூடவில்லை, அவர் கற்பனைக் கடவுளரிலும் தெய்வப் புலமை வாய்ந்தவரிலும் சார்ந்தவரல்லர் என்று கூறுபவர், தம் அறிவின் வறுமையையே புலப்படுத்துகிருர்கள். அவ்வகை இலக்கிய ஆராய்ச்சியின் பயனுகத் "திருவாசகம்", "கந்தரனுபூதி" போன்ற நூல்களும் இலக்கிய சிருட்டிகளிலிருந்து புறம்பாகிவிடும்.

5. நிதம்நிதம், நாம் நினைவுமயமான வாழ்க்கையை அறிகிருேம். அதன் ஏற்றத் தாழ்வுகளில் சிக்குண்டு துன்புறுகிருேம். துயிலும் போதிலும், கனவிலும் மனம்சோர்ந்த இருளான சுழுத்தியிலுமே அடைபடுகிருேம். நினைவின் இடைவெளியான மவுனப் பிரவாகத்தை, நினைப்பவன் அற்ற சொரூபத்தை நாம் அறியவில்லை. உண்மையில் அதை அறி பொருளாக அறிய முடியாது. அந்த முயற்சி வீணுக முடிய விதிப்பட்டது. அது, இது என்ற பாவனையும் பந்தமாதலின், என்ன செய்வது? என்ற மயக்கமும் சோர்ந்த விழிப்பில் சொரூபம் இயல்பாகப் பிரகாசிக்கின்றது. இந்த அனுபவத்தை நீட்டிக்க முயல்வதும் நினைப்பவன் செயலின் ஏமாற்றம்; இதுதான் உள்கிடை.

6. தமிழின் பெரும் பெருமை சிவத்தை விளக்குவதாகும். சிவம் என்பது மங்கள சொரூபம்; ஓர் மதக் கொள்கை அல்ல. இந்நூல் தமிழ்நாடு எங்கும் பரவி—"அப் பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த" என்ற மணிவாசகர் வாக்கின் வண்ணம்—தெய்வ இயல்பை மக்களுள் இனிது விளக்குவதாக.

ஸ்ரீ ரமணஜெயம்

பதிப்புரை

"அவனருளன்றி அணுவும் அசையாது", "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்ற சான்றோர் அருள்வாக்குகளின்படி இந்நூலின் பதிப்பில் அடியேனை இம்முதிர்ந்த வயதில் திருஅருள் ஈடுபடுத்தியுள்ளது. ஆசிரியரது மேலைச்சிவபுரி அன்பர்கள் பிரார்த்தனையின் பயனாகச் சென்னை ஸ்ரீ ரமணபக்த சபாஸ்தாபகர் பேராசிரியர் ஸ்ரீ கி. ஸ்வாமிநாதையர் M.A. அவர்கள் ஸ்ரீ முருகனாரின் நூல்களை அச்சிட வேண்டும் என்று எனக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதி அச்சுச் செலவுக்கும் பொருளுதவி செய்தார்கள். இதற்கு முன்பாக வேந்தன்பட்டி ஸ்ரீ பழ. நடராஜன் செட்டியார் அவர்கள் இந்நூல் விரைவில் அச்சாக வேண்டிப் பொருளுதவி உவந்து அளித்திருந்தார்கள். இவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியும். வந்தனமும். இந்நூலைச் செவ்வே உருவாக்குவதில் ஈடுபட்டு உதவிய அடியிற்கண்ட அன்பர்களுக்கும் எனது நன்றி:—

(1) திருஅருணை ஸ்ரீ நடனானந்த ஸ்வாமிகள்

(2) சென்னை ஸ்ரீ தணிகைமணி ராவ் பஹதூர் வ.சு. செங்கல்வராய பிள்ளை M.A. அவர்கள்

(3) ,, தமிழ் ஆசிரியர் வித்வான் ஸ்ரீ. H. வைத்தியநாதையர் அவர்கள்

(4) ,, கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதையர் M.A. அவர்கள்

(5) „ தமிழ் ஆசிரியர் வித்வான்
ஸ்ரீ வி. மு. சுப்பிரமணிய ஐயர் M.A. அவர்கள்

(6) „ தமிழ் ஆசிரியர் வித்வான் ஸ்ரீ சாம்பசிவ
சர்மா அவர்கள்

(7) திருஅருணையில் ஆசிரியருடன் கூட இருந்து
உதவிய பக்தர்கள்.

தவிர லிபர்ட்டி அச்சுக்கூட உரிமையாளர், ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியார் பள்ளிக்கூடப் புத்தக வெளியீட்டின் அதிகவேலைப் பளுவிலும்கூட, இந்நூலுக்கே தலையிடம் தந்ததும், Messrs. B. G. பால் கம்பெனி உரிமையாளர் ஸ்ரீ K. நீலகண்ட ஐயர் B. A. அவர்கள் பேபர் முதலிய பல உதவிகளை உடனுக்குடன் அளித்ததும், ஆண்டவன் திரு அருளேயாகும்.

திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமம் மானேஜரும், பிரஸிடெண்டுமான ஸ்ரீமான் T. N. வேங்கடராமன் அவர்கள் ஸ்ரீ முருகனார் அவர்கள் இயற்றிய நூல்கள் வெளிவர வேண்டும், பரவவும் வேண்டும் என்ற நல்லாசிகளை அருளியுள்ளார்கள்.

எல்லாம் வல்ல இறை ஸ்ரீ ரமணேசரின் திரு அருளால் இந்நூலின் இரண்டாம் பாகமும், ஆசிரியருடைய மற்ற நூல்களும் விரைவில் வெளிவரப் பிரார்த்திப்போமாக.

292, லிங்க செட்டி தெரு,
சென்னை-1
1—10—1960

அடியார்க்கடியேன்
ரமணபாதானந்தா

சிவபோகசிந்தாமணி என்னும்

ஸ்ரீ ரமணநுபூதி

சிறப்புப்பாயிரம்

சுவாமி ஸ்ரீ நடனனந்தர் உதவியது

வெண்பா

1. சோதனையிற் சாதனையிற் றெருந்தத் தசியென்னும்
போதனையிற் போக்கிலறப் போகாநான்–ஆதவன்முன்
துன்னிருட்பேய் தானே தொலைந்தாங் கிறைரமணன்
சன்னிதியிற் சாயுந் தலை.

கலிவிருத்தம்

2. குரவன் ரமணன் குளிர்தா ளிலகச்
சிரமொன் றுபடத் தெருளார்ந் திதயப்
புரமின் றியல்பிற் பொலிமா முருகன்
பரமன் னனுபூ திபகர்ந் தனனே.

3. பரமன் னனுபூ திபகர் முருகன்
நரனென் றுருவா நடமா டினுமுள்
ளுரனென் றியதா வொளிர்வால் மறையின்
சிரமென் றமிரா கரசிந் மயனே.

4. இருணா டுகிலா வியல்வாழ் வருளல்
கருணா கரவேங் கடவன் கடனேல்
பொருணா டுமவன் புகழ்பா டியகத்
தருணா டியிருப் படியார் கடனே.

5. கருமா மயல்வெங் கனலைத் தவிர்தண்
ணருளா ரனுபூ தியினா ரமுதம்
பருகார் வமிகின் பரமுத் தியினுந்
தெருளா ருபசாந் திதலைப் படுமே.

வெண்பா

6. ஐவகைவன் கோசவிரு ளந்தகரா யெய்த்துழல்வார்க்
குய்வகைநல் குள்ளொளிகூ ரோகையாம்—தெய்வ
ரமணு ரியன்ருள் ரமிமுருகன் கண்ட
ரமணுனு பூதி ரசம்.

7. பவரோக மெய்துபுலப் பாழடவி தப்பித்
தவயோக ராயிதயஞ் சார்வார்—சிவபோக
சிந்தா மணியாத் திகழ்சொருபக் காட்சிதரு
நந்தா விளக்கால் நமர்.

8. இருள்சே ருயிரா யிடருழக்குஞ் சீவற்
றெருள்சேர் பரமாத் திகழ்த்தும்—மருள்சே
ரவபோக வாசை யகற்றிடுமெய்ஞ் ஞானச்
சிவபோக சிந்தா மணி.

9. தெய்வரம ணேசரருட் செம்மலர்த்தாள் சேர்ந்தொருமை
கைவரநோன் ருர்முருகக் கள்ளளியால்—உய்ய
[வெர்ரோர்
பிந்தாய்த் திரட்டியமெய்ப் பேரும் சிவபோக
சிந்தா மணியறிவுத் தேன்.

குறள் வெண்பா

10. கண்டாலே போதுங் கலிதீரற் கென்னினுளங்
கொண்டாலாங் கொல்லோ குறை.

11. தன்னேர்வோர் தம்மைச் சதானந்த ராக்குமிதைப்
பொன்னேபோற் போற்றும் புவி.

ஸ்ரீதண்டபாணிதுணை

வித்வான் தண்டமிழ்ச் செல்வர்

திரு. வி. மு. சுப்பிரமணியன், M. A.

1. அருண்மலி அன்று மலைக்குரு ரமணர்
அடியிணைக் கன்புசால் மேலோன்
தெருண்மலி கண்ண முருகனு ரென்னும்
திருப்பெயர் சிறந்தமெய்ஞ் ஞானி
மருண்மலி யெமக்கோ ரெய்ப்பினில் வைப்பா
வழங்கிய ரமணாநு பூதிப்
பொருண்மலி பாடற் கிணையொரு பாட
லுண்டெனப் புகல்வரோ புலவோர்.

2. அன்பின் பெருக்கென் றுரைப்பேனோ
அருளின் கனிவென் றறைவேனோ
இன்பம் பெருக்கு மின்னமுதி
னூற்று மென்ன இசைப்பேனோ
துன்பம் பெருக்கும் பவப்பிணியைத்
துடைக்கும் மருந்தென் றுரைப்பேனோ
என்பு முருக்க முருகனு
ரிசைக்கும் தமிழ்ப்பா மாலையையே.

3. ஆண்டா னருளெழுப தாகு மருநூலை
ஈண்டா தரிக்கயா னெத்தவமுன்—பூண்டேனோ
என்றென்றே நெஞ்ச மிரங்குமால் நல்லாவின்
கன்றன்றே தாய்க்குருகுங் காண்.

4. ஆண்டான் கழற்க ணகமுருகிக் கண்ணனார்
தூண்டா மணிவிளக்கிற் சூட்டிய—ஏண்டாங்கு
பாடல் எழுபதையும் பத்தியுடன் வாசிப்போர்
வாடலறி யார்பிறப்பில் வந்து.

5. தித்திக்கும் சொல்லால்தான் பெற்ற திருவருளை
எத்திக்கும் போற்ற வினிதிசைத்தான்—முத்திக்கு
வித்தாகு மாறு விழுமியோர் போற்றுபுகழ்க்
கத்தனுங் கண்ணமுரு கன்.

6. சென்னிமேல் வைத்துச் சிறப்படைவோம் நிதகலப்
பன்னுவோம் ஞானப் பழமுருகன்—சொன்ன
சிவபோக சிந்தா மணியென்னும் நூலைப்
பவரோகம் நீங்கப் படித்து.

வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜகந்நாதன் M., A.
('கலைமகள்' ஆசிரியர்)

ஆனந்த மயமேதன் உருவமதா நண்ணி
அனைத்துயிர்க்கும் கருணையினை அள்ளிமிகப் பெய்து
வானந்த வாதமழை பொழிந்ததுபோல் இன்ப
வாரிதனில் பக்குவரை ஆழ்த்திவைத்த வள்ளல்
மோனந்தன் மொழியாகப் புன்முறுவல் தீக்கை
முறையாக ஆண்டருளும் திருவருணை நாதன்
ஊன்நந்த நிரதிசய இன்பமெனுங் காணி
உதவுரம ணேசனிரு பதமலரைப் பணிவோம்.

இரும்புருளை பலகால முடனிருந்துஞ் சிறிதும்
இதன்சுவைமற் றின்னதென அறியாமல் நின்ற
கரும்பிலுள தீஞ்சுவையை யவ்விரும்பு சுவைத்துக்
கனிந்ததுபோல் அருளேற்ற மாதவரை யாக்கி
விரும்புசுக அநுபூதி வழங்குரம ணேசன்
மென்மலர்ச்சே வடிக்கடிமை யாகியமெய்ப் புலவோன்
அரும்பென்னும் முனைப்பின்றி மலராக அறிவின்
அலர்ந்தவன்பேர் முருகனென அன்பர்சொலும்
[பெரியோன்.

ரமணகுரு வெனுங்கதிரோற் கணிமையினிற் சுடர்ந்த
ஈடில்லா அருட்புலவன் அவன்புறத்தே ஒளிப்ப
பமரமென நின்றவன்றன் அருட்டேனை உள்ளே
பதித்தரிய அநுபூதி வெள்ளத்தி லாழ்ந்தே
தமிழில்மிக இனிமைதவழ் பாமாலை சூட்டித்
தண்மைமனந் தவழவைக்கும் சாந்தசுத்த மூர்த்தி
அமிழ்தனைய ரமணநு பூதியெனும் நூலை
அருள்செய்தான் மருள்செய்யும் இருளோடு மாறே.

நல்லசிவ போகசிந்தா மணியென்னும் பெயரும்
நாட்டிரம ணேசனருள் நேசமெனும் கனிவு
ஒல்லும்வகை யோதுபவர் உள்ளத்தே குலவ
உரைத்தருளி னுன்இதன்கண் உள்ளபொருட் பெருமை
சொல்லும்வகை யறிவார்யார் சொல்லிறந்த மோனச்
சுகவுணர்வை உணர்த்துகின்ற தூயமொழி என்கோ
அல்லெனுமஞ் ஞானவிருள் அகலஅமு தேற
ஆனந்த நிலவுபொழி முழுத்திங்கள் என்கோ.

இந்திரிய வயமயங்கித் திரிகின்ற நெஞ்சுக்
கிதமாக உண்மைசொலும் மெய்ஞ்ஞானக் கவிதை
பந்தமறக் குருநாதன் திருவருளே நாடிப்
பக்குவமுற் றகந்தையறும் பேறுரைக்கும் பனுவல்
சிந்தையினிற் பலகாலும் போற்றியா ராய்வார்
தெளிவுபெறக் குருமகிமை தெரியவைக்கும் பெருநூல்
இந்தவுடற் குள்ளிருந்தும் இதனைமறந் தின்பத்
திழிந்தமிழும் வழிகாட்டி நலஞ்செய்யும் பாவே.

குருவருளாம் பிரசாதக் குளிர்ச்சியுள தோர்சார்
குருவருளால் வந்தகுதூ கலம்இருக்கும் ஓர்சார்
குருவினடி புகழ்பாத மாலையுள தோர்பால்
கொழியருளாண் டான்கழலுக் கெழுபதுபா ஓர்பால்
மருவுமவன் அருள்வியந்த எழுபதுபா ஓர்பால்
வைப்பெனவே தொகுத்தமைந்த மறையனைய இந்நூல்
வருபரம சுகமவுன வெளிக்குவழி காட்டும்
வண்ணமறிந் தார்ஞானத் திண்ணமறிந் தாரே.

உ

திருத்தணிகேசர் துணை

தணிகைமணி ராவ் பஹதூர்

ஸ்ரீ. வ. சு. செங்கல்வராயபிள்ளை, M. A.,

ஆண்டான் அருளை அலகில் வகைதம்முட்
பூண்டாசை கொண்டு புகன்றனரே—நீண்ட
தவநிறைவால் எங்கள் தயாள முருகர்
சிவரமண சிந்தா மணி.

நூலின் சிறப்பும் பயனும்

1. அமனன சூனியத்தை
எமனுக வெற்றியொளிர்
சமனன சாந்தசுகம்
ரமணுனு பூதிரசம்.

2. சித்தமல மான செருக்கழிவித் துள்ளுமன்பர்
சித்தஞ் சிவமாத் திகழ்த்தியே—சுத்த
சிவபோக வாழ்வு சிறக்க வளிக்கும்
சிவபோக சிந்தா மணி.

ஸமர்ப்பணம்

அகமாம் பொருளே யனுபூதி யாக
இகமே பரங்கண்ட வின் நூல்—அகமகமா
வேதத் தலையில் விளங்குங் குருவருட்செம்
பாதத்தி லேயர்ப் பணம்.

பொருளடக்கம்

சிவமயம்

மாதுருபூதேசுவரர் துதி

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)


1. கருத்தாயா மன்புசெயக்
கல்லாதே மாகவுந்தன்
கருணையா லாண்டவருட்
கல்யாண ரமணனையுட்

பொருத்தாயார் தன்கழலைப்
புந்திசெய்வா ரன்னவர்தம்
புத்திமயல் போக்குறுசற்
போதகுரு மூர்த்தியைநங்

கருத்தாயா வாறுமனக்
கற்பனா சூனியமெய்க்
கண்மணியாம் விண்மணியைக்
கண்காணக் காசினிக்குத்

திருத்தாயா வீன்றளித்த
தெய்வதரு வானசிவ
தேவதையா மாதுருபூ
தேசரையாஞ் சிந்தைசெய்வாம்.

இந்தத் துதி, பகவான் ஸ்ரீ ரமணசற்குரு மூர்த்தியை உலகுக் களித்து, ஆசிரமத்தின்கண் இப்பொழுது அருவுருவாகத் திகழும் அருளன்னையாம் ஸ்ரீ மாதுருபூதேசுவரர் மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டுத் திருவருட் பிரேரணையாற்றோன்றியதாம்.



ஸ்ரீ ரமணபகவான்

உ

சிவமயம்

சிவபோக சிந்தாமணி

என்னும்

ஸ்ரீ ரமணாநுபூதி

1. நாண்மங்கலம்

(நேரிசை வெண்பா)

2. பொருளான போதம் புலர்த்தி யுளத்தின்
மருளான கங்குலற மாற்றி—அருளால்
அழகுக் கழகாவென் னுருயிரை யாண்டான்
கழலுக்கு நாண்மங் கலம். க

3. கனைப்புறுபுன் மேதிபோற் கத்துமகங் கார
முனைப்பறநன் றுள்ளே முடக்கி—நினைப்பின்
சுழலைக் கெடுத்துமனச் சோர்வுதீர்த் தாண்டான்
கழலுக்கு நாண்மங் கலம். உ

2. குருபத்திப் பேறு

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

4. வழுவிலா மெய்யன் புழுவலே வடிவாய்
வளர்மணி வாசகப் பெருமான்
*தொழுவனே பிறரைத் துதிப்பனே வெனக்கோர்
துணையென நினைவனே சொல்லென்
றிழுமெனு மொழியா லீசனைத் துதித்த
வினிமைசே ரேகசற் பத்திக்
கெழுமலென் னுள்ளங் கிளர்தர நின்பாற்
கிடைத்ததுன் னருள்குரு மணியே. ௬

---

3. குருவருட் பிரசாதம்

மங்கலம்

துங்கவறி வான துரியசொரு பானுபவ
மங்கலமே மிக்கசுப மங்கலமாப் பேறுவாம்.

(கொச்சகக் கலிப்பா)

5. பண்பான மங்களசற் பத்தியால் வெய்துயிர்த்துப்
பெண்பா லொருத்திமடப் பிச்சியாப் பேதுற்றேன்
விண்பாவு(ம்) ஞான விசுத்த சொருபமுறக்
கண்பாவு(ம்) நெற்றிக் கடவுளே காட்டாயே. ௬

---

* திருவாசகம் - வாழாப்பத்து - 10.

6. எங்குமொளி வீசி யிதயச்சிங் காதனத்தே
தங்கியமெய்ஞ் ஞானவருட் சக்கரவர்த் திப்பெருமான்
பங்கமிலா மோனவருட் பார்ப்பான் குருரமணச்
சிங்கமென் கன்னிமையின் சீர்மையற வாட்டிற்றே. உ

7. வாட்டியகங் கார மயக்க வுணர்ச்சியற
ஊட்டிஞ னுள்ளத் தொளிர்சொரு பானுபவம்
வீட்டியலா மென்சொருப வித்தகமாஞ் சித்துருவைக்
காட்டியவென் கண்மணியென் கண்ணின் றகலானே. ௩

8. மாழாந்து நொந்த மனக்கலக்கம் மாற்றினேன்
ஆழாந் தடிநாயே னுண்டா னருட்பதத்தே
பாழார்ந்த மோகப் படராழி எம்பெருமான்
கேழார்ந்த ஞானக் கிளரொளியிற் கெட்டதே. ௪

9. பாட்பட் டொழியமனப் பாசக் கலக்கவிருள்
ஆட்பட் டமுத வருள்வெளியில் வாழ்தலுற்றேன்
தாட்பட்ட வென்சிச் சடக்கிரந்தி ஆண்டவன்கண்
வாட்பட் டிரண்டா வகிர்பட்டு மாண்டதே. ௫

10. காணதே காண்சொருபக் கண்ணுளன் காதலாற்
பேணு தொழிந்தேன் பிறபோகம் பிச்சியாய்
வேணுசை முற்றிலுந்தன் வேட்கையாய் நானவனுக்
கூணு வொழிந்தே னுலகோர் பழிக்கவே. ௬

11. பழிக்கிற் பழிக்க பராற்பரமா மோன
விழிக்குநா னுளாய் விளைத்தேன் சிவபோகம்
செழிக்கலுற்ற வாண்டான் சிவசொருப ஞான
வொழுக்கமுற்றே னவ்வலரை யோரக் கடவேனே. ௭

12. சுற்றறியா மூடக் கசட்டுமனப் பேதையா
உற்றடைந்தே னுள்ளத் துணர்வொளியா நோக்கினன்
பெற்றறியா மோனவருட் பெற்றிசேர் சாந்தியால்
அற்றமற வுண்மைஞா னனுபவங் கூடியதே. அ

13. கோசத் தகம்புத்திக் குற்றமா மற்றமற
மாசற்ற சோதி மலர்த்தினன் சிற்பதத்தே
நேசத் தொளிபெருகி நெஞ்சத் தகமகமென்
றூசற்ற ஞானசொரு பானுபவ மாயிற்றே. கூ

14. ஓத்துமுடி பான வுபநிடதத் தூர்பதத்தான்
மாத்தம்ப மானபரஞ் சோதியாய் வானவர்க்கும்
மூத்தபிரா னன முழுமுதல்வன் முன்வினேற்
காத்தனே யன்றுண்மை யாருயிரே யானனே. க0

15. ஆருயிரே யானன் அகிலங் களுக்குமோரே
பேருயிராஞ் சுத்தப் பிரம்மமா வுள்ளபிரான்
காருயிரை வெள்ளுயிராக் காணுங் கனஞான
சூரியனு மிக்க சொருபச் சுடர்மணியே. கக

16. கண்ணின் கலக்கமறக் கற்பனைதீர் சுத்தவருள்
விண்மணிவந் துட்கலந்து வேற்றுமையை மாற்றுதலும்
வண்மைசே ரத்துவித வாழ்வான மோனவொளி
யுண்மையிலே நான்முதலா யாவு மொருங்கினவே. க உ

17. துள்ளு மகந்தைச் சுழற்சியுறு(ம்) மோகமனக்
கள்ளமறத் தெள்ளுங் கடவுட் பரசிவத்து
வெள்ளவருட் பார வியோம சொருபத்தை
உள்ளலற வுள்ளுசிவ யோகவுணர் வுற்றதே. கங

18. இங்குமங்கு மோடி இதுவதுவென் றேநாடி
மங்குகனு வான மனேமயத்தே மாழ்கியநான்
பொங்குசிவ போகவருட் போதவொளிப் பூரணமென்
னங்கங் கலந்தகமா வார்ந்தமைதி யானேனே. கஅ

19. நிட்டையே தன்னியல்பா நீடுங் குருரமணன்
திட்டியே சிட்டியாத் தேற்றலா லென்னுளத்திற்
சுட்டறிவா(ம்) முப்புடியின் சூது வெளிப்படலாய்ப்
பட்டிமனந் தன்சொருபப் பார்வையிலே நின்றதே. கரு

20. போற்றியோ போற்றியெனப் போற்றலன்றிப்
[புண்ணியமொன்
ருற்றிலே னுண்ட வடிகளருட் செம்பதத்தே
*நோற்றநான் போற்குளிர நோக்கித்தன் சிற்சொருபந்
தேற்றினுன் மெய்ஞ்ஞான சித்த குருமணியே. கசு

21. தவத்தரா லன்றித் தலைப்படவொண் ணுத
சிவத்துவமா(ம்) மோனவருட் சித்தோப சாந்தி
சுவத்தமா வாழத் துலக்கியவென் னுண்டான்
கவித்தகுடை நீழலருட் கற்பகப்பூங் காநிழலே. கஎ

22. கடையான வென்னையருட் கண்ணேக்கிக் கனிவித்துத்
தொடையான தோத்திரங்கள் சொல்வித்த பரஞ்சோதீ
தடையான மும்மலமுந் தகர்த்தெறிந்தென் றனையாளா
உடையானே யுனையல்லா துறுதுணைமற் றறியேனே. கஅ

23. மற்றுன வைம்புலமும் மாசுபடத் தேசுபெறும்
பற்றுன நின்சொருபப் பார்வையிலே யார்வமுறப்
பெற்றுலே பிறவிசிவப் பேறுடைத்தாம் பெய்கழற்கே
கற்றுவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. கசு

---

*நோற்ற நான்போல் - நான் நோற்றவன் போல, நான் பூர்வஜன்ம புண்ணியத்தேன் போல.

24. ஓங்குசிவக் கேவலமா வுள்ளுறைமெய்ப்பொருளோனே
எங்குமனப் புன்கவல்செற் றின்பவருட்
[பொங்கொளியாய்
யாங்களுனைக் கண்டுகொள்ள வியல்வித்த
[வருளோய்நின்
பூங்கழல்க ளவையல்லா தெவையாதும் புகமோமே. உ௦

25. அணையாத ஞான வருள்விளக்காம் பாதப்
புணையாளன் பூத்தவருட் புன்முறுவ லாலே
துணையான சுற்றந் துறந்தொழியத் துன்றும்
பிணையாக வென்னைத்தன் பெய்கழற்கீழ்
[வைத்தேனே. உக

26. ஒட்டுப்பற் றும்பொய் யுறவொழியப் போதலால்
மட்டுப் படாதசிவ மாண்பதமே வாழ்வாக
விட்டுப்பற் றுத விடாப்பிடியாய் உள்ளொளிர்மெய்ச்
சிட்டப் பிரானடியே செம்பொருளாத் தேர்ந்தேனே. உஉ

27. எங்குஞ் செறிந்தொளிர்பே ரின்பவருட் பூரணமெய்
பொங்கவென் னுள்ளம் புகட்டியசற் போதகுரு
அங்கமகம் புத்தி யகன்றொழியக் காண்டலால்
தங்குசிவ போத சதாமௌனஞ் சார்ந்ததே. உ௩

28. மத்தவகங் கார மதக்களிற்றின் மத்தகத்தில்
வித்தகமா வேற்றிவைத்த வீரசிங்கன் பார்வையெனக்
கத்தகநிற் கின்றஞா னனுபவ வாழ்வாகப்
புத்தமுத மானசிவ போகமாப் பொங்கிற்றே. உ௪

29. வெங்கலியாம் பாசமயல் வேட்கையாற் பாழ்க்கலுற்றேன்
பொங்குசிவா னந்தவருட் போகமுறப் புந்தியிலே
அங்கணனு வாண்டா னருட்பார்வை தானேயோர்
பங்கமிலா மோனப் பரவியல்வாழ் வாயிற்றே. உ௫

30. **பா**வனையாஞ் சித்தப் பதைப்பற்ற சாந்தியால்
ஓர்வினையு மற்ற வுணர்வொளியாந் தன்மையால்
மூவினையு(ம்) முற்ற முரிந்தகுரு மூர்த்தியெனக்
காவனியல் பாமெய் யனுபூதிச் செல்வமே. உசு

31. **ம**ன்னுயிருக் கான்ற மகிழ்தருமெய் யன்புதொட்ட
நன்னயமெல் லாமொருங்கு தன்னியல்பா நண்ணுமிறை
உன்னலரு மொன்று வொளிர்சொருப மாட்சிசேர்
அன்னபெருந் தன்மையா *லாண்டவனென் னுருயிரே.

32. **மெ**ய்த்தவமா(ம்) ஞான விசாரவொளி யாலுயிர்க்கு
முத்திமுத லானகுரு மோனவருட் செம்மொழியால்
அத்துவித மான வனந்த சிவானுபவப்
புத்தமுத வாழ்வாப் புணர்ந்ததருட் பூரணமே. உஅ

33. **நா**னோர் †மதுகரமாய் நல்லசிவ ஞானவருள்
வானோங்கு மோன மலர்ப்பதத்தே வாழ்தலால்
ஊனே யுயிரே யுணர்வே புலன்களே
தேனோங்கு சாந்த சிவமயமாச் சேர்ந்தனவே. உகூ

34. **வ**ம்பனு மென்னை வலிந்துவந் தாண்டவருட்
செம்பொனூர் மேனிச் சிவரமணன் பார்வையிற்பே
ரின்பவடி வான வியற்செம் பொருட்பொலிவால்
அன்புமய மாமெய் யறிவுவெளி யாயிற்றே. ௩௦

---

*ஆண்டவனே என்னுடைய ஆருயிர் என ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டுக.

†மதுகரம் - தேன்வண்டு; நல்ல சிவஞான அருள் வானமாக ஓங்குகின்ற மவுன மலர்ப்பதம் என்க.

35. தஞ்ச மடைந்தேன் சதாசா ரியாமனைன்
கஞ்ச மலர்ப்பதத்திற் காந்த வசிகரத்தால்
வஞ்சப் புலவுலக மாயமாஞ் சாயம்வெயில்
மஞ்சளே போலமிக மங்கி வெளுத்ததே. ௩௧

36. ஏழ்பிறப்போ வேழா யிரம்பிறப்போ வெய்துகமற்
றாழ்வகையா லென்னு ருயிர்க்கெவ் வுலகத்தும்
வாழ்வொளியாவென்னகத்தில் வாய்த்தவருட்பாதவியற்
சூழலிலே வாழ்வேற்குத் தோன்றுமவை
[சொப்பனமே. ௩௨

37. மின்மினியா மென்னையருள் விண்மணியாப்
[பொங்குவித்தான்
தன்மயமா யாவுந் தழைத்தொளிர்சிற் சத்தியான்
துன்மதியா(ம்) மோகமனச் சுட்டறிவாங் கற்பனையற்
றுன்மனிவாழ் வோங்கவுளத் தொப்பமுற்ற
[தென்னுணர்வே. ௩௩

38. குறைவிலா வுண்மைக் குலாவான மோனச்
செறிவிலே யத்துவிதச் சீர்மை துலங்க
அறிவிலே யென்னையனைந் தாண்டவனே டொன்றிப்
பிறிவில்பே ரின்பவருட் பேறுபெற்று வாழ்ந்தேனே. ௩௪

39. முயற்சிசேர் மோக முனைப்பற் றொழிய
இயற்செம் பொருளே யெனுதுமெய் யான
உயர்ச்சிசே ருண்மையொளி யோங்கலால் உள்ளத்
தயர்ச்சிதீர் மோன வருள்வாழ் வடைந்ததே. ௩௫

40. குறிகுணங்க ளோடே குலாவிச் சுலாவிக்
குறைபுன் மனத்திற் குதிக்கு மகப்பே
யறிவின் றிறங்குலைந் தான்றமைந்த மோனத்
திறைவன் பெருமை யிதயத் திலகுமே. ௩௬

41. எங்குமுள வாண்டா னியற்பதத்தை யின்னினிதா
இங்கிருந்தே மோன வியல்வழிபா டாற்றுகின்றேன்
அங்கமகம் புத்தி யகன்ற வருள்வெளியாம்
எங்குமோ ரிங்கன்றி யங்கென்ப தெங்ஙனே. ௩௭

42. இருள்சேர் மயக்க விளிவரல் போகத்
தெருள்சே ரனுபூதித் தேற்ற மளித்தான்
அருள்சேர் குருமூர்த்தி யானவென் னாண்டான்
பொருள்சேர் புகழ்போற்றிப் புந்தி பொலிந்ததே. ௩௮

43. இத்திக்க வென்னைத் தெவிட்டாப்பே ரின்பவருட்
பத்திக் கடலுட் பதித்தபரஞ் சோதிபதம்
புத்திக்கு மூலமாப் பொங்குறுசற் போதவொளி
எத்திக்கும் பாயவுளத் தென்னியல்பா
[வொன்றியதே. ௩௯

44. அணையாத ஞான வருள்விளக்காம் பாதத்
துணையாலே பாழைத் துளைத்தூ டுருவி
இணையாது மற்றபே ரின்பவியல் வாழ்வாப்
பணையாநின் றேங்குசிவப் பார்வை படர்ந்ததே. ௪0

45. கவலா தெனக்குத்தன் காட்சியளித் தாண்ட
சிவலோக நாதனருட் சேவடிக்கே யன்பாய்
விவகார மற்றனைத்தும் விட்டேன் அவற்றுக்
கவகாச மின்றி யடியே னகத்திலே. ௪௧

46. மதிநுட்ப மாக மடுத்தலால் உள்ளத்
ததிநுட்ப மான வருள்வெளியே தானாய்க்
கதியொட்ப மாகக் கதிர்விட் டொளிர
முதிர்வுற் றதுசொருப மோனானு பூதியே. ௪௨

47. உண்ணா ரமுத வொளிப்பிழம்பா வோங்குதிரு
வண்ணா மலையி லருட்கொலுவா வீற்றிருந்த
கண்ணா ரமுதக் கடவுட் குருபதத்தை
எண்ணாம லெண்ணிப்பே ரின்பவெளி யானேனே. சசு

48. இன்பவெளி யாக வியல்சொருபக் காட்சியெனக்
கன்புமய மானவருள் வாழ்வா வகம்பொங்க
இன்பமே யன்பே யிரண்டுமொரே போதவருட்
செம்பொருளா(ம்) மோன சிவானுபவஞ் சேர்ந்ததே. சச

49. கள்ளமற்ற மோனக் கழலே சொரூபமா
உள்ளலற வுள்ளு முணர்வா முளம்படைத்தேன்
கள்ள முற்ற மோகமனக் கண்கலக்கம் பொய்த்தொழியத்
தெள்ளமுத வெள்ளவருட் சிற்பரவாழ் வொன்றியதே.

50. புத்தக(ம்)நா னேதிமனப் புண்படா தாண்டகுரு
வித்தகனென் னுள்ளே விளைத்த வருட்செயலால்
அத்தகநிற் கின்றநிஷ் டானுபவம் பேராது
நித்தசித்த மானநிலை நெஞ்சுருவப் பற்றியதே. சசு

51. தாபரமா வுள்ளான் சதாபத்தி யானபெரு
ஞாபகமா வென்னுளத்து நல்லறிவு கூட்டினுன்
சோபனமா(ம்) மோனத் துரிய சொரூபசிவத்
தாபதன்வாய் சாற்றுமொழி சாதுஜனத் தாரகமே. சஎ

52. ஆண்டவனே மிக்க வருட்பரமாச் சேர்ந்தவெனக்
காண்டவன்பால் வேண்டும்பே ராசையொன்றுண்
[டென்னிலோ
ஈண்டுபல வாம்பிறவி யெய்தினுமென் னுருயிர்க்கவ்
வாண்டவனைச் சற்று மயர்க்கிலா ஞாபகமே. சஅ

53. தெள்ளத் தெளிந்தவருட் சிற்பதமாம் பூரணவாழ்
வுள்ளத்தி னுள்ளே யொளிசேர் வெளியாகக்
கள்ளமறக் காட்டினுன் கர்த்தனடி யோங்களுக்குக்
கொள்ளல் கொடுத்தலின்றிக் கூட்டுணவா
[வேட்டுணவே. ௫௩

54. அன்புமய மா(ம்)மெய் யறிவொளியா வாண்டவற்கவ்
வன்புமய மா(ம்)மெய் யறிவே வழிபாடா
அன்பே யறிவே யபேதமா(ம்) மோனவுணர்
வென்பா லியல்பா விதயத் தெழுந்ததே. ௫௦

55. யானுன வென்னியலே யானறிந்து கொள்ளமற்
றேனேதான் வேண்டி யிருந்ததுமற் றோர்குருவென்
ருனுத வுண்மை யறிவா லறிமவுனத்
தேனே *விதயத் திறந்ததந்தக் கேள்வியே. ௫௧

56. தானே தனக்குரிய சற்சங்கச் சார்பாக
நானே யெனக்குரிய நல்லுறவா நண்ணினேன்
மோனுனு பூதிசேர் முத்திப் பெருஞ்சிறப்பு
நானேதா னுவெனக்கு நல்கியதந் நல்லுறவே. ௫௨

57. ஓரிம்மியுந்தேர் வின்றிமலத் தாழ்த்தலுற்ற வென்னைப்
பிரம்மமே யாக வெளிப்படுத்த பெம்மான்
இரம்மியமா(ம்) மோனப்பே ரின்பவருட் பாதம்
சிரம்மனம்வாக் கெங்குஞ் சிறக்கவொளிர் கின்றதே. ௫௩

---

*'இத்துவித பாஷையி லேயே வினுவிடைகள், அத்துவிதத் தின்றே யவை'—பகவான்.

58. சித்த மலத்தின் செறிவாற் சமுசார
பெத்தனுப் பாழ்த்தமடப் பேயனு மென்னுளத்தில்
முத்த சொருபமா முக்காலு முள்ளவுண்மை
அத்தனருட் பார்வையா லாயிற் றனுபவமே. ருச

59. தாழ்வாம் பசுபாச தைலியச்சிந் தாகுலந்தீர்
வாழ்வாக வுள்ளவருள் வைப்பா மிதயத்தே
*பாழ்வா தனையெரிமுற் பஞ்சாக வாண்டவன்றுள்
வாழ்வே பரமசுக வாழ்வாமென் னுருயிர்க்கே. ருரு

60. குருமணி யாண்டவன் கூரருள் கொண்டு
பரம சிவத்திற் படிந்த மனத்தால்
கருமசம் பந்தக் கறையற் றொழியப்
பரம சிவானு பவந்திளைத் தேனே. ருசா

61. அற்றமற்ற சுத்த வருட்சிற் பரவெளியே
முற்றமுற்ற வென்னுருவா மூண்டதா லென்னுளத்தில்
பெற்றபெற்றி யான பிரம்மசொரு பானுபவ
வெற்றியிலே தோற்றதுயிர் வெம்பிறவித் துன்பமே. ருஎ

62. ஆனபல் பேத வறிவுகளும் பொய்ம்மயல்சேர்
நானெனுமவ் வூனகந்தை நாட்டமே தேர்ந்திடிலவ்
வூனமற வுள்ளத் தொளிர்சொருப வாழ்வான
மோனமே நான்கண்ட முத்திப் பரவியலே. ருஅ

---

*பாழ்....பஞ்சாக-அருள்வடிவான அனுபூதி ஞானக்கினியின்முன், பாழ்வாதனைத் திரள் பஞ்சுப் பொதிபோல் எரிந்தொழிய, இதயத்தே ஆண்டவன் எனக் கூட்டுக.

63. வெம்பந்த மாச்சேர் வியாமோகக் கற்பனையிற்
பம்பிந் திரியசுகப் பாழாசை பாழ்படவிவ்
வம்பற்கு ஞானசுக வாழ்வளித்த சீரமணன்
சம்பந்த வாழ்வுசிவ சாயுச் சியந்தானே. ௬௯

64. பரமண் டலத்திற் படர்கற் பனையாத்
தெரிமண் டலசகலந் தீரப்பொய் யாகக்
குருமந் திரமாங் குறிகாட்டி யாண்ட
சொருபம் பரமாத் துலங்கிற் றகமே. ௭0

65. இகமே பரமே யெலாங்கற் பனையா
உகமாய மாக வொளிர்பரந் தானு
நிகழ்மோன ஞான நிஜானுபவங் கூர்மெய்
யகமே யகமா வகந்துலங் கிற்றே. ௭௧

66. பந்தபா சக்கற் பனுஜாலம் பாழ்படவென்
சொந்தஞா னுனுபவ ஜோதியாத் தோய்ந்தவிறை
சிந்தனு மோகமறச் செற்றெளிர்சற் போதவருட்
சந்தமார் பாதவொளி தங்கியதெங் கெங்குமே. ௭௨

67. கற்பனைசேர் மோகக் கருத்தாற் பலதிறங்காண்
சொப்பனம்போற் சூழுமனச் சுட்டறிவின் சூதொழிய
அற்புதமெய் யான வதீதத் துரியவெளிச்
சிற்பரவாழ் வான சிவானுபவங் கூடியதே. ௭௩

68. சுத்தவறி வான சொருபவருட் செம்பதத்தைச்
செத்தமனத் தாலியல்பாச் சிந்திக்கின் றேனடியேன்
புத்தமுத மோனு பூதிப்பே ரின்பநிலை
நித்தமுத்தி யாக நிலைத்ததென் னெஞ்சகமே. ௭௪

69\. சுத்தநனு வானவருட் சூழலெனக் குள்வெளியா
நித்தமியல் பாக நிறைந்தொளிரக் காண்டலால்
பொய்த்தகலா வுண்மையாப் பொங்குவதென்
[னெஞ்சகத்தில்
வித்தகமா வாண்டவருள் வெற்றிசேர் மெய்ப்பதமே.

70\. மெய்யான போத விழுப்பொருளே யன்றியுயிர்
மெய்யாக வென்றுமுய்ய வேறுவழி யொன்றுமில்லை
எய்யா தடியே னிதயத் திருப்புணர்வாய்
ஐயா வகமகமென் றஃதென்னை யாண்டதுவே. ௬௬

71\. தாழ்வாம் பசுபாச தைனியங்கூர் மோகவகப்
பாழ்வாதனையாற் படர்பிறவித் துன்பமறச்
சூழ்வான போத சொருபப்பே ரின்பவருள்
வாழ்வா லிதயத்து மாட்சிவெளி யாயிற்றே. ௬௭

72\. காயமே கோயிலாக் கண்டவருட் கர்த்தனடி
நேயமெய் யன்பு நிரம்பலினென் னெஞ்சகத்து
மாயமோ கப்பாழ் வலையா வியன்றபுலச்
சாயமா மஞ்சளறத் தான்வெளுத்த திவ்வுலகே. ௬அ

73\. மத்தமனக் கற்பனையின் மாணுபி மானமறச்
சித்தமலங் கெட்டுத் தெளிந்தமைந்த சாந்தியிலே
சுத்தவருட் பார்வைச் சுடரொளிசேர் சூழலே
முக்தியா யீண்டெனக்கு முற்றிற் றனுபவமே. ௬௯

74\. நாற்றிசையும் போற்றிசெய்மெய்ஞ் ஞான தயாநிதிக்குக்
காற்றெழிலே செய்துநான் கைவல்யங்
[கண்டுகொண்டேன்
காற்றெழிலே யன்றியருட் கர்த்தனடித் தொண்டர்க்கு
மேற்றெழிலொன் றின்றதுவே வித்தகர்க்கும்
[மெய்த்தவமே. எ0

75. மைத்திருளா நின்றமனப் பாழ்மயக்கத் தாழ்ந்தடியேன்
செத்தொழியா வாறமுத ஜீவியத்தா லுய்திபெற
மெய்த்தவமா வென்னுள் விளங்குவது சற்றேனும்
பொய்த்தகலா மோனவருட் புண்ணியன்செம்
[பொன்னடியே. எக

76. உதியா துளத்தி லொடுங்கலுற்ற தன்னிழப்பே
கதியாக வாருயிர்க்குக் காட்டினேன் மிக்கவுயிர்ப்
பதியான காந்தமாப் பற்றிவிடா தென்மனத்தை
விதியால் விழுங்கியருள் வெற்றியென்பாற்
[காட்டினனே. எஉ

77. காட்டியசற் போதக் கழல்விளக்கத் தாலறவே
யோட்டினுன் காரிருளா வூழ்த்தமலப் பாழவிச்சை
வீட்டியலா முண்மை வெளிப்படவே காட்டியுவந்
தூட்டினு னுள்ளத் துபசாந்த போகமே. எஙு

78. மோகமனத் தாபமற மோசனஞ்செய் சாந்தசிவ
போகமா வாய்த்தவருட் புண்ணியன்பொற் பாதத்தே
ஆகமகம் புத்தியற வாண்டான் சொரூபமே
யாக விளங்குஞா னுனுபவங் கூடியதே. எச

79. விளங்குஞா னுனுபவ வெற்றியால் வாழ்விற்
களங்கமாம் பாசக் கலக்கமறப் பொன்ற
உளங்கொளா வாறெழப்பொங் கூற்றுன சாந்தி
வெளந்திளைத்து மோக விடாய்தணியப் பெற்றேனே.

80. சித்தத்தே யன்பு திளைத்தலா லாண்டவன்பாற்
புத்தமுதாப் பொங்குசிவ போகவுணர் வூற்றெடுப்ப
அத்தகநிற் கின்றஞா னுனுபவ வாழ்வான
முத்தித் துலக்கமுற முற்றியதென் னுள்ளத்தே. எசு

81. ஏதமனப் புன்கவல்சே ரேக்கமறத் துன்றுசிவ
போதவருட் பார்வை பொருத்தினு னென்னுளத்தே
பேதமயற் கற்பனையே பேணுமகப் பேயறிவு
மாய்தலுறத் தன்பதத்து வாழ்வெனக்கு மல்கியதே. எஎ

82. வாழ்வுயிர்க்கு மல்க வளர்சொருபச் செம்பதத்தூ
டாழ்வதற்குத் தன்மெய் யருளே யொளிநெறிகாண்
பாழ்வயிற்றேன் ருச்சரியப் பல்விகற்பப் பேயறிவாச்
சூழ்மயக்க வாதனையைச் சுட்டெரிக்கு முள்ளுணர்வே.

83. நல்ல சிவமயமா நண்ணுந் திருவருட்பே
ரெல்லையிலே யேங்கி யிரங்கிக் கலங்கியநான்
அல்லலுறு மோகமறுத் தாண்டா னருளடிக்கீழ்
நல்லசிவ ஞானனு பூதிநலன் பெற்றேனே. எசு

84. ஈசன் குருவா வெழுந்தருளி மோகமயற்
பாசமறச் செற்றுத்தன் பாத வொளிகாட்டி
ஆசைமுற்றக் கொள்ளைகொண்டென் னுருயிரா [வாண்டவன்மெய்ந்
நேசனினை வாமகிழ்வு நெஞ்சினின்று மாறுதே. அ௦

85. தஞ்சமென்று தன்னைச் சரணமடைந் தேனையினி
அஞ்சலென்று மோனமா வாண்டபிரா [னன்றுதொட்டென்
நெஞ்சினின்று நீங்கா நிலைமைசேர் மெய்யுறவாற்
கொஞ்சுமகிழ் சான்ற குதூகலவாழ் வுற்றேனே. அக

86. மாழ்குமனப் பேயகந்தை மாய்ந்தொழியத் தன்னருளால்
வாழ்வுசிவ மாக வகுத்தென்னை யாண்டவன்பால்
ஆழ்தலுறப் பெற்ற வறிவால் அகிலமாச்
சூழ்தலுற்ற காட்சி சொருபமய மானதே. அஉ

87. வீணி லுழன்ற வியாமோகப் பீடையறக்
காணியாக் கைவல்யங் காட்டினன் கற்றூர்முன்
நாணியொதுங் காதுமெய்ஞ் ஞானவருள் சாற்றுகவி
வாணியா மேலுமென் வாக்கிற் கலந்தானே. அஎ

88. வாக்கிற் கலந்தான் மனங்கலந்தான் மாட்சிபெற
நோக்கிற் கலந்தான் நுணுக்கரிய நுண்ணுணர்வாய்
ஆக்கம் பெருக வகத்தே யடியேற்குத்
தேக்குசிவா னந்தத் திருவருளா நின்றானே. அச

89. சிந்தைக் கரியவருட் சிற்பரமா மோனவொளி
சொந்த வுரிமை துலங்கவகத் துள்ளுணர்வாய்
எந்தரமில் லாவிவ் வெளியே யிதயம்புக்
கந்தரங்க மெய்யன்பா லாண்டதோ ரற்புதமே. அரு

90. அற்பமனத் துச்சகுணத் தாலிழிந்த விவ்வடியேன்
அற்புதமெய்ஞ் ஞானசொரு பானுபவம் பொங்கவகத்
துற்பவமா மோன வொளிப்பெருக்கிற் சிந்தைகரைந்
தெப்பொழுதுந் தற்பரமா மின்பவியல் காட்டினனே.

91. கோட்டமனப் பாசங் குலைந்தொழியச் சிற்சொருபங்
காட்டி யெனைத்தன் கருணையா லாட்கொண்டான்
வாட்டியமுத் தாப வறட்சியற வென்னுளத்தில்
வீட்டியல்சேர் சாந்தி வெளியா விளைந்ததே. அஎ

92. ஆதமிலி நாயேனுக் காண்ட வடிகள்பாற்
காதலா லன்பு கலந்தமைந்த வுள்ளத்திற்
போத சொருபவருட் பூரணசாந் தானுபவம்
பேதமயற் பிழையறப் பேரப் பிறங்கியதே. அஅ

93. உறங்கலுற்ற மோக வுளத்திற் கனுவாக்
கறங்குபோற் சுற்றுமகங் கார மனத்தால்
மறங்கலுற்ற தன்சொருப மாட்சி மகத்தாப்
பிறங்கலுறக் காட்டியது பெம்மான் கருணையே. அகூ

94. பெம்மான் கருணைப் பெருந்திறம் பேசலெனக்
கம்மா வரிதரிதவ் வாண்டா னருளடிக்கீழ்ச்
சும்மா வடங்கத் துலங்கலுறு மோனத்தால்
அம்மா னருட்சீ ரதாவிளங்கி லன்றியே. கூ0

95. தாளே தலையாத் தழைத்தபா மார்த்தநிலை
ஆளான வென்னகத்தே யாண்டா னருளாலே
*மீளா வடிமைத் திறமே விடுதலையாய்
மாளா வமுதவியல் வாழ்வா விளங்கியதே. கூக

96. பாழ்வா தனையற் றொழியப் பாகதியாய்
ஆழ்வா லகத்தே யகமகமென் றுள்ளுணர்வாய்த்
தாழ்வா மகந்தைத் தடிப்பான தைனியந்தீர்
வாழ்வா விளங்கலருள் வைப்பாம் பெரும்பதமே. கூஉ

97. கணந்தவிர்வ தன்றுநீ கண்டுகொளென் றுள்ளத்
தணைந்துபெரு வாரியா வாண்டகுரு நாதன்
புணர்ந்த சொருபவருட் போதானு பூதி
தணந்தொழிவ தற்றவொரு தன்னியல்வாழ் வானதே.

---

*மீளா வடிமைத் திறம் = நானுதியாத் தன்னிழப்பு (உள்ளது நாற்பது).

98. கண்டுகொண்ட மோனக் கடவுளறி வுன்றிவை
உண்டொளிர நீயதற் கூறு வொழிந்திடலே
மண்டுபர பத்தி வழிபாட்டு மாட்சியெனத்
தொண்டுகொண்ட வாண்டவனுக் குண்டியா
[மென்னுணர்வே. கூசு

99. உணர்வுருவா வுள்ளவுன் னுண்மையே யுன்னுற்
புணர்தலுற வேண்டுசிவ பூரணமென் றுண்டான்
உணர்விலுற்ற கற்பனையை யோட்டலுமென் னுள்ளத்
துணர்வுதெளிந் தாங்கவ் வுருப்பரமாத் தேர்ந்தேனே.

100. இளிவிலாத் தன்னியற்பே ரின்ப வருட்சீ
ரொளியிலே யூறுகென வுள்ளுணர்வா மோனத்
தெளிவினு லென்னைத் திகழ்த்தியமெய் யப்பன்
அளியேயென் னுருயிருக் காரமுத வாழ்வே. கூசா

101. வம்பியல்வாழ் வான வறட்பாலை வெஞ்சுரத்திற்
பம்பிப் பதறிப் பதைத்துப் பரிதபியா
தும்பரா ருங்கா ணுதவருள் வாழ்வுநான்
இம்பரே காணவெனக் கெம்பிரான் காட்டினனே. கூஎ

102. காட்டினுன் ஞானவருட் கண்ணூர் கழலருளால்
மாட்டி மனத்தையருள் வண்பதத்திற் சேர்க்கிலன்றி
ஆட்டியலைக் கின்ற வகந்தைமுனைப் பாலியற்றும்
தேட்டினு லாருந் தெரிந்தடைய வொண்ணுதே. கூஅ

103. கற்றறிந்த யாவுமனக் கற்பனையாப் பேரவகத்
துற்றவருட் போத வொளிசே ருளத்திலே
பற்றற் றுளிர்சொருபப் பற்று விளங்குமியல்
வெற்றறிவே முற்றறிவா வெற்றிசேர் வுற்றதே. கூகூ

104. நிந்தைசேர் மோக நிழற்கற் பனைவடிவச்
சிந்தையறப் பொங்குபா தெய்வத் திருவருளில்
விந்தைசேர் வாழ்வா விளங்கு சொருபமன்றிச்
சிந்தியமொன் றின்றியறத் தீர்ந்ததென் சிந்தைக்கே. கoo

105. அறத்தீர்ந் தொழிந்த வகந்தை மனத்தால்
உறத்தேர்ந் தறியமற் றென்று மிலாது
நிறைவெளி யாக நிகழ்சிற் சொருபக்
குறியே குறியாக் குலாவலுற் றேனே. கoக

106. காமாதி முற்றக் கடிந்தென்னைக் காத்தவருட்
கோமான்மெய்ஞ் ஞானக் கொழுந்தாங் குருரமணன்
தேமாங் கனியாச் செழுமதுரம் பொங்குசிவக்
காமானு பூதிரசங் காட்டினான் கண்ணுலே. கoஉ

107. ஏழையா மோழை யெளியேற் கிரங்கியரு
ளாழியான் காட்டி யருளியதென் னுள்ளத்திற்
பாழை யகன்று பராற்பரமா யூன்றலால்
ஊழி பெயர்ந்திடினுந் தான்பெயரா வொண்பதமே. கoங

108. மத்த மனப்பிர மாதத்தாற் சிற்சொருப
வத்துவாந் தன்னை மறந்தொழிந்த பேயேனைப்
புத்தமுத மானவருட் போதத்தா லுள்ளத்து
நித்தசித்த மாமெய்ந் நிலைசேர்வித் தாண்டானே. கoச

109. ஏகாந்த மாகவென்னோ டென்றென்று [மொன்றியுள்ளான்
ஓர்காந்த னுமென் னுடையான் கணம்பிரியான்
தேகான்ம பாவச் செருக்கற் றொழியவிளங்
கேகான்ம போத வியல்பா லிதயத்தே. கoரு

110. உள்ளமா வுள்ளவோ ரொள்ளியான் பொய்ம்மயக்கக்
கள்ளியா மென்னைத்தன் கண்ணுற் கலத்தலால்
வெள்ளமா மோன விசுத்தசொரு பானுபவத்
தெள்ளமுத வாழ்வாச் செழித்ததென் ஜீவியமே. கoசு

111. ஞானவருட் பேரின்ப நம்பனெனக் குள்ளுணர்வாய்
ஊனமயற் பாசமற வோட்டியென்மெய் காட்டியதால்
தீனவகச் சிந்தைதீர் சிற்பரமா வோங்குசுப
மோனவியற் கைவல்ய முத்தியுரு வானேனே. கoஎ

112. முத்தியுரு வாக முயங்கு சொருபவருள்
வித்தையா வென்னுள் விளங்குகுரு பாதமே
சித்தியாத் தேறத் தெளிந்தடைந்த வாற்றுற்பொய்ம்
மத்தமயற் பந்தமொரு மாயமாப் போயதே. கoஅ

113. தனைத்துருவி மூலத் தலத்தே யகந்தை
முனைத்தலறப் பொய்த்தொழிந்த மோனவுணர்வின்றேல்
எனைத்து விதத்தா லியம்பினுந்தன் னுண்மை
இனைத்தென் றறிய வெவருங் கிலாரே. கoகூ

114. உண்மை யுணர்ந்தோ ருணரார் பிறிதென்னில்
விண்மையே போல வெறுங்கற் பிதந்துவிதம்
வண்மைசேர் சுத்தவருள் வாலறிவா வைகுமுண்மைக்
கண்ணதுதா னந்தமிலாக் கண்ணுங்கை வல்லியமே.

115. உள்ளத்திற் புக்கொடுங்கி யூனமயற் பாசபந்தக்
கள்ளமறக் கண்டமெய்க் காட்சியருட் கேவலங்காண்
கள்ளத்தி லன்றியருட் கண்ணு வியல்சொருப
வுள்ளத்தில் யாதோ ருலகமுமெய் யாகவின்றே. ககக

116. வாளா பிறந்திறந்து மாழ்கியநா னுண்டவனுக்
காளா யருட்பார்வை யாலே யகந்தெளிந்து
தாளே கதியாத் தலைப்பட் டொளிர்தவத்தாற்
கோளான கூற்றமறக் கூடினன்மெய்த் தன்மையே.

117. அந்த ரியாமியா வாண்டவன் ருனேயென்
சொந்த சொருபமாத் தோய்ந்தவருட் போதத்தால்
பந்தபா சக்கலக்கப் பாழ்கடந்த சுத்தசிவச்
சந்தமார் சாந்தி தலைப்பட் டொளிர்ந்ததே. கக௩

118. பேதமனக் கற்பனையிற் பேர்ந்தொழிந்தா லன்றியருட்
போதசொரு பானுபவப் பூரணவாழ் வின்மையால்
பேதமதிப் பிழைசேர் பேயகந்தை யானமுனைப்
போய்தலுறத் தன்னையுளத் தோர்த்துணர வேண்டுமே.

119. உரிமையா வுள்ளவென் னுண்மை நிலையாம்
பெருமைசேர் சுத்தப் பிரம்மத் துவத்தைத்
தெருமர லாலே தியங்கி மயங்கிப்
பிரிதலுற் ருற்போற் பெரிதுழந் தேனே. ககரு

120. இருமைசேர் பேத நினைப்பா மறப்பவ்
வருமைசே ரத்துவி தச்சிற் பதத்தே
மருவிற் றெனல்சுத்த மாயமென் ருண்டா
னருளறி வாலகத் தாழ்ந்தறிந் தேனே. ககசு

121. மோனமுற வென்னை முழுவியவென் னுண்டவனுக்
கியானென்ன கைம்மா றியற்றுகோ வுள்ளுணர்வால்
யானவனே யாக வியல்சொரு பானுபவத்
தியானென்னையே பூண வியல்வித்த லன்றியே. ககஎ

122. சிந்தா குலங்கெடவென் சித்தத் தமர்ந்தபதச்
செந்தா மரையிற் சிவானந்தத் தேன்பருகி
முந்தார்வ மிக்கசுப மோனக் கடலான
சொந்தானு பூதி துலங்கப் பொருந்தியதே. ககஅ

123. பேரின்ப மோனவருட் பெட்பேமெய் யன்புருவாத்
தேரும் பரபத்தித் தேற்றமளித் தாண்டவன்பாற்
கூரன் புணர்வாற் கொளைவிடுபட் டுள்ளமகன்
பார சொருபப் பரவெளிதா னாயிற்றே. ககசு

124. நேரியமெய்ஞ் ஞான நெறிகாட்டி யென்னகத்திற்
கூரியதோர் மோனக் குறிதுலங்கக் கூட்டினான்
காரிருளைச் செற்றவருட் கண்மணியா மெய்ஞ்ஞான
சூரியனாற் பொய்த்ததுபொய்ச் சுட்டறிவாங் கற்பனையே.

125. சிவசமய வாழ்வின் சிகரமா வோங்குந்
தவமவுன வுண்மை தலைப்படலா லுள்ளத்
தவிர்சொருப மான வதீதத் துரீயத்
தவசமாய் முற்றும் பரவசமுற் றேனே. கஉக

126. பட்டப் பரமனருட் பார்வையா லென்னகத்திற்
சுட்டற் றொளிர்சொருபத் துங்கஞா னானுபவம்
பட்டப் பகலாப் பரந்து விளங்கலாற்
றுட்டமனப் பாழகந்தை சோர்ந்து தொலைந்ததே. கஉஉ

127. அறிவொளியா வென்னைமகிழ்ந் தாண்டான் உவந்த
வுறையுளா வுற்றவென் னுள்ளத்தே சுத்த
வறிவொளியாத் துன்றுபர மான்ம சொருப
நிறைவெளியாந் தன்னையன்றி நிற்கவொன்றுங்
[காணேனே. கஉங

128. உண்ணாது நோற்பர் பெரியரென்பர் நானேமற்
றுண்ணா தொழியே னெருபோ தறுசுவையூண்
கண்ணா ரமுதக் கழல்வந் துளம்புகலும்
பண்ணாதே செய்தவமென் பால்வந்து கூடியதே. கஉச

129. சானேக்க மாகக் கருத்தூன்றி யுள்ளுணர்வாற்
றேனேக்க மாடித் தொழுவோமுக் காணவஞ்சேர்
பானேக்க மான பதைப்பொழியத் தானளித்த
தானேக்கஞ் சற்றுமருத் தன்மையாற்
[றேனேக்கம். கஉரு

130. மூடியபா மாவாண மோகமற வாலறிவாக்
கூடியதா லாண்டான் குரைகழலென் னுள்ளத்திற்
பீடியல்வாழ் வான பிரம்மபதப் பேறெனக்குக்
கூடியது மோனக் குறியினின்று கோடாதே. கஉசா

131. ஒண்பதப்பே றுகவெனக் குற்றதுமெய்ஞ் ஞானவருள்
விண்பதப்பே றுக விளங்கு சொருபவியல்
எண்பதத்தா லேங்கி யிரங்கியவென் சித்தத்தில்
வண்பதமா வோங்குசிவ வாழ்வு வெளிப்படவே. கஉஎ

132. ஆண்டா னளித்த வருளறிவால் என்னறிவைத்
தாண்டியமெய் யென்சொருப தத்துவமே யாவறிந்தேன்
மாண்டொழிய வந்நிலையின் மத்தமனச் சுட்டறிவு
மூண்டதுசுத் தாத்துவித மோனானு பூதியே. கஉஅ

133. அடக்கி யொடுக்கியென் னையுணர்வைத் தன்பாற்
கடக்க வொணாதவருட் காந்தமா வீர்த்தான்
படக்கென் றறுபடவென் பாழகந்தை மோக
முடிச்செறிந்த மோனவருட் கூர்விழிநோக்
[கென்னே. கஉகூ

134. கண்ணாலே நோக்கிக் கடிந்தானென் முப்புரமுந்
துண்ணென் றிமைப்பிற் றுரிய வெளியாக
மண்ணாடு விண்ணாடா மாறவென் காட்சியிலோர்
கண்மாயஞ் செய்தான் கடக்கலரு மாயனே. கங0

135. மாயமாத் தோன்றினன் மாயமாத் தான்கரந்தான்
மாயமா வென்னுருவை மாற்றினன் றன்னுருவா
மாயமன் றுண்மையென வாதித்த விவ்வுலகு
மாயமே யாகச்சிந் மாத்திரமா மாறியதே. கஙக

136. எளியனு நானெனன் றிரங்கியவென் றன்னையருள்
வெளியெனுத் துன்று விபுவா விளக்கினன்
அளியனு னென்னு மகந்தை மயக்கமறத்
தெளியலாய் வாழ்வு சிவமயமாச் சேர்ந்ததே. கஙஉ

137. சேர்ந்த தெனக்குத் திருவருள்வாழ் வுள்ளத்திற்
பேர்ந்ததுநா னென்னும் பிரமாதப் பேயகந்தை
தூர்ந்தொழியப் பொல்லாத் துராசைப்பா ழாழியகத்
தார்ந்ததுமோ னனுபவ மான திருத்தியே. கஙங

138. திருத்தியா மோனத் திருவருட்பே ரின்பம்
அருத்தினு னுள்ளத் தமுதவெளி யாகப்
பொருத்தினன் பாதசற் போத சொருபம்
கருத்தினு லொன்றுங் கருதகில் லேனே. கஙச

139. கருதநா னென்றுங் கிலாதவா ருண்டா
னிருதயந் தானு விருந்தொளிர் வுற்றான்
பிரிதலு மில்லேன் புணர்தலு மில்லேன்
சொருபமா வுள்ள சுபோதத் தியலே. கஙரு

140. இயல்வடி வான விருப்புணர் வாக
வியல்வதா லென்மாட் டிதமக மென்று
மயல்படு பேத மனக்கற் பனையாச்
செயல்படு சித்த விருத்தியற் றேனே. க௩௬

141. அற்ற விருத்தியா லான்ம சொருபமா
வுற்ற பரத்திலவ் வொண்பர மாகவே
யுற்ற விருத்தி யுளத்தியல் பாகமுற்
றற்றது தன்னி லமைந்துதா னுகவே. க௩௭

142. ஏக வகந்தைச் செருக்காப் படர்மனே
வேக மறக்கெட வென்று விளங்குசற்
போக சமாதி புணர்ந்தது புந்தியி
லேக சொருப வியல்வெளி யாகவே. க௩௮

143. ஊக வுணர்வா வுழிதரு சிந்தைதீர்
ஏக சொருப வியற்பர ஞானத்து
மோக மனக்கற் பனைமுற் ருெழிதலிற்
சோகமோ கப்படர் சோர்வுற் றழிந்ததே. க௩௯

144. சிந்தை யெனக்கருட் சிற்பர மாவொளிர்
விந்தைசேர் மோன விளக்கம் பெறுதலின்
முந்த வெதிர்ப்படு முப்புடித் தோற்றமும்
பந்தியாத் தோன்று நிழற்படக் காட்சியே. க௪0

145. நிகழ்முப் புடிக்கு நிலைக்கள மாகத்
திகழ்வுறு முண்மைத் திரைசிற் சொருபம்
அகவொளி யாலே யவற்றை விளக்கித்
தகவொளிர் சாட்சியாத் தங்கலுற் றேனே. க௪க

146. பங்கமா மோகப் பழிசேர் கலக்கமற்
றெங்கெங் கிலுமெனக் கின்ப மியல்வுறத்
தங்குமா தார சதாசிவ மானமெய்த்
துங்க சொருபச் சுடரொளி சூழ்ந்ததே. கசஉ

147. எண்ணமறச் சும்மா விருப்புணர்வு மாத்திரமா
நண்ணுமுப சாந்தசிவ ஞானநிட்டை யென்னுளத்துத்
திண்ணமா மோனத் திரவியல்பாச் சேர்த்தவருள்
வண்ணமாச் சித்தம் மலர்ந்ததகக் கட்டுவிட்டே. கசஙு

148. கட்டுவிட்டு வாழக் கருணையா லென்னகத்தைத்
தொட்டபட்ட னுக்கடிமைத் தொண்டுபட்டேன் [உள்ளொளிர்தன்
னிட்டமிட்ட மாகவெனக் கெய்தலால் ஐக்கியமெய்ந்
நிட்டையொட்ட வென்னுளத்து நீங்கிற் றகந்தையே. கசச

149. உள்ள பரத்தை யொழிந்துநா னென்றுளத்திற்
கள்ள வகந்தையெழக் காரணமாம் பாழவிச்சை
தெள்ளத் தெளிந்தவருட் சிற்பரமாந் தன்சொருப
வெள்ளவொளி யென்னுள் வெளிப்படலான் மாய்ந்ததே.

150. நட்கத் தகவுயர்மெய்ஞ் ஞானப் பிரான்சொருபத்
துட்கலக்க மற்ற வொளிகூர்மெய் யன்புணர்ச்சி
மட்கிக் கழியமல வாதனைசெற் றானுயிரா
வுட்கலொடு வெட்கலற வுள்ளந் திறந்ததே. கசசு

151. களங்கமாம் பாச மலங்கழியக் கண்ணால்
விளங்கு சொருபவருள் வெள்ளநீ ராட்டி
வளங்குலவு சொந்தவியல் வாழ்வெனக்கு மல்க
உளங்குடிகொண் டோருருவா வுற்றொளிர்கின் [றனே. கசஎ

152. நுள்ளவொணாத் தன்சொருப சாந்த சதாசிவத்தை
உள்ளுணர்வா மோன வுரத்தாற் றிளைத்தலன்றித்
துள்ளு மகந்தைத் துடிப்பாற் சுழற்சிசேர்
கள்ளமனச் சுட்டறிவாற் காணவொணா தார்க்குமே.

153. நீதங்க மாகநிகழ் நிட்டானு பூதியால்
ஆதங்க நீங்க வருட்பதத்து நில்லென்றான்
ஓதங்க வேதத் துபநிடஞா னானுபவச்
சீர்தங்கு வாழ்வு செழித்துப் பழுத்ததே. ௧௪௯

154. செழித்துப் பழுத்த சிவானுபவத் தாலே
இழித்துத் தெழித்தே னொளுதுநா னென்கை
ஒழித்துக் கொழித்தே னுலகியலை முற்ற
மழித்துக் கழித்தேன் மலவா தனையையே. ௧௫௦

155. அன்னையினும் மிக்கபே ரன்புசால் சற்குருவாந்
தன்னையே முற்றமுற்றத் தஞ்சமாச் சார்ந்ததால்
அன்னியமே சுட்டி யலைந்தவகப் பேயறிவு
தன்னியலின் மாண்டொழியச் சார்ந்ததருட் பூரணமே.

156. அருத்தியாற் றன்னை யடைந்தே னகத்தே
திருத்தியா முண்மைத் திருவருள்வாழ் வோங்கப்
பொருத்தினான் சுத்தவருட் போத சமாதி
கருத்தி லியல்பாக் கலந்தது சாந்தியே. ௧௫௨

157. காரணவு மோகமனக் கற்பனைதீர் போதவருட்
பூரணமெய் வாழ்வு பொருந்தலாற் புந்தியிலே
சீரணவு சுத்தசிவச் சிற்பரமோ னானுபவ
நிரணவு ஜீவநதி நேரொழுகப் பெற்றதே. ௧௫௩

158. கலக்க மகன்றவருட் கைவல்ய சித்தித்
துலக்கமாம் போதத் துரீய வியல்பாற்
சொலக்கருத வாற்றத் தொழிலொன்று மற்ற
நிலைக்களமா மோன நிலைதலைப் பட்டதே. கருசு

159. பண்ணியவென் பண்டைத் தவத்தாற் பரசிவமே
புண்ணியவாழ் வாகப் பொருந்தியதா லென்னகத்துத்
திண்ணியமா மோகச் செருக்கற் றெளிர்சொருபத்
தண்ணிலவா மோனந் தழைத்ததுவெந் தாபமற்றே.

160. நுட்பவொட்ப மாக நுனித்துணரத் தக்கவருள்
விட்புலமா வூன்றுசிவ மெய்ப்பரத்தோ டற்புதமெய்ந்
நட்புரிமை யானமெய்ஞ் ஞானனு பூதியுளத்
தொட்பமுற முற்றலா லூனமய லற்றதே. கருசு

161. எனக்குநான் கண்ட வியற்கடமை சிந்தை
யினிக்கமோ னப்பதமே யெண்ணும லெண்ணல்
மனக்கலக்க மாக மடுத்த வகந்தைத்
துனிக்கவல்சேர் சிந்தை தொலைந்தொழியச் சிற்பதத்தே.

162. துள்ளுமறி யானகொடுந் துட்டமனந் தான்பலிகொண்
டுள்ளமே கோயிலா வுற்றவென் னுண்டவனுக்
குள்ளலற வுள்ளுசிவ யோகமா முள்ளுணர்வே
தெள்ளியமெய்ப் பூஜையாத் தேர்ந்துணரத் தக்கதே.

163. மத்தமனப் பாசபந்தம் மாயமாப் பேரவொளிர்
சுத்தமெய்ஞ் ஞானத் துலக்கத்தா லூறியது
சித்தந் தெளிந்து சிவத்தே திளைக்குமியற்
பத்தியுணர் வான பராவமுத போகமே. கருசு

164. கிரந்திபே திக்கக் கிளர்ந்தவருட் பார்வை
நிரந்தரமா நெஞ்சத்து நிற்பித்த வாண்டான்
சுரந்தசற் போத சுகானுபவத் தாலே
அரந்தைசேர் மோக வகந்தையறி வற்றதே. ௧௬௦

165. பேதமயல் சேர்ந்தவகப் பேயறிவை மாய்த்தொளிர்சற்
போதமே போகமாப் பொங்கவென் புந்தியிலே
வேதமுடி பான விசுத்தமோ னப்பொருளாம்
பாதமே மிக்கவருட் பாக்கியமாப் பெற்றேனே. ௧௬௧

166. என்னிடத்தி லுன்னையுமற் றுன்னிடத்தி லென்னையுமோ
ரன்னியமில் லாதவே கான்ம சொருபமா
நன்னரகந் தேறுமெய்ஞ் ஞானனு பூதியாத்
துன்னகமா முன்னையெவ் வாற்றுற் றெழுகேனே. ௧௬௨

167. என்னுருவாத் தன்னை யிலக்கியவாற் றுலகத்து
மன்னுசிவக் கேவலமெய் வாழ்வா மொருத்தனைநான்
என்னினும்வே றுக விரண்டாக்கித் துன்புழக்க
முன்னமொரு பொய்ந்நான் முளைத்ததென்ன மாயமே.

168. கவலைசேர் மோகக் கனவா முலகத்
தவலமா காம லருட்குருவா வாண்டான்
சிவவொளியா லென்னைத் திருத்தலான் மோனத்
தவமியல்பா வுள்ளந் தழைக்கலுற் றேனே. ௧௬௩

169. கூர்வயிர ஞானவருட் கோமான் குருரமணன்
பார்வையா லென்னைப் பணிகொண் டருளினன்
போர்வையா வென்னுருவைப் போர்த்தவிருட்
[பாழ்மயக்கக்
கார்விலக வென்சொருபக் கண்மணியைக் கண்டேனே.

170. மயக்கமனப் பாசமற மாற்றியெனைத் தன்பா
லியக்குசிவ சத்தியில்யா னென்னையிழந் தாங்கே
உயிர்க்குயிரா வுள்ளத் தொளிர்சிவமே நானு
நயக்கலுறக் கூர்ந்ததுமெய்ஞ் ஞானனு பூதியே. கசுசு

171. கண்ணீருங் கம்பலையுங் காணப் பொருதவருட்
கண்ணு னடியேன் கலக்கமறக் காட்டினுன்
உண்ணீர்மை பொங்கவென் னுள்ளத் துபசாந்தத்
தண்ணீர்மை சான்ற சதானந்த மோனமே. கசுஎ

172. வாழ்வுநா னுற்று வழுத்தலுற்றேன் மிக்கவருட்
கேழ்மைசேர் மெய்ப்புகழைக் கீழ்மைசேர்
[புன்மொழியால்
தாழ்மையெனு தத்துதியைத் தாயினுவந் தன்புபொங்கப்
பாழ்மயல்செற் ருண்ட பரன்பரிவா லேற்ருனே. கசுஅ

173. ஆணவ மோக மறப்பொங் கருளின்முன்
நாணி யகந்தை நழுவ வுளத்தியல்
வேணவா முற்ற விளங்கு சொருபனைக்
காணவு(ம்) நாணிக் கவிழ்ந்தது சென்னியே. கசுகூ

174. காரணவும் மோகவகங் காரமறத் தானெளிர்மெய்ப்
பூரணமா மோனப் பொருளே சொருபமாம்
ஓரவொணு மோன வொளிவெளிக்கு நானெனப்பொங்
காரவா ரப்பொய் யறிவுணவா வற்றதே. கஎ0

175. கள்ளங் கரந்தொழியக் கண்டகுரு சிற்பதத்துக்
குள்ளம் பறிபோ யுணர்வொழியத் துன்றியது
மொள்ள வொணுத முழுமுதற்பே ரின்பவருள்
வெள்ளமா மோன விசுத்த சொருபமே. கஎக

176. சுத்தமெய்ஞ் ஞான சொருபமே பொய்ம்மயக்க
மத்தவகங் காரமற மாற்றித்தன் மாட்சியால்
அத்தமியா மோன வருட்சிற் பரவெளிவாழ்
வித்தமியே னுள்ளத் தியல்பாகக் கூட்டியதே. ௧௭௨

177. தோன்றுத் துணையாத் துலங்கு சொருபமே
சான்ருக வென்னறிவு தன்மயமா நிற்றலால்
ஆன்ரூே ரறிந்தடைஞா னுனுபவ வாழ்வுளத்துத்
தான்ருனு வுள்ளமெய்த் தன்மையாத் தேர்ந்தேனே.

178. குறிகுண மற்ற குலாச்சே ரறிவாப்
பிறிவற மிக்க பெரும்பொரு ளாக
வுறுசொரு பத்தையவ் வுள்ளுணர் வேகொண்
டறிவ தெனக்கெளி தாயின வாறே. ௧௭௪

179. சும்மா விருந்து சுகம்பெற வென்னுளத்
தம்மா னளித்த வருட்பெருஞ் செம்பதம்
மெய்ம்மா ஞெளிக்கதிர் வீசலு மாணவப்
பொய்ம்மா லொழிந்து புணர்ந்தது சாந்தியே. ௧௭௫

180. பனிப்புறு மாணவப் பாழ்முளை யான
முளைப்பறு சிற்பர முத்தி தலைப்பட
நினைப்பு மறப்பற நீங்கிய சுத்தந்
தனிற்பிற வாநெறி சார்ந்தனன் யானே. ௧௭௬

181. பொதுக்கென் றருட்சிவ போகமுள் ளூறப்
புதுக்கியென் வாழ்வைப் பொலிவித்த வாண்டான்
பதக்கம லத்தெழப் பாயும்பே ரின்ப
மதக்களி கொண்டு மதர்த்தலுற் றேனே. ௧௭௭

182. தாறுமா றுகத் தடுமாறுங் கற்பனைசேர்
வேறுபா டான விகற்ப மயக்கமறத்
தேறுஞா னுனுபவச் செம்பதமே நன்பதமாய்
மாறுபா டற்றவியல் வாழ்வருளாற் கூடியதே. கஎஅ

183. என்னியல்வாழ் வாக விதயத் திருந்தொளிருந்
தன்னியலின் வேரு வெனக்கென்ருேர் தன்மையிலேன்
அன்னியமாம் பேத மகந்தைமனக் கற்பனையாப்
பொன்னியலிற் பூண்போற் புலப்படுவ மெய்யலவே.

184. இன்பமே யன்றியெனக் கென்றுமினித் துன்பமில்லை
நம்பனருட் பாதத்து நண்ணலா லன்பெனக்கு
வம்பியல்பொய்ம் மாய மனேமையவாழ் வாசையறச்
செம்பரமே யென்சொருப ஜீவியமாச் சார்ந்ததே. கஅ0

185. ஜீவியமாச் சேர்ந்த சிவானுபவச் சித்தத்தோர்க்
கோவியமே னூத்தை யுலகமயற் காவியமேன்
மேவியபல் வேறு விநோதரச வேட்கைகளும்
தாவிமனந் தன்னினயற் கற்பனையிற் சார்ந்தாலே. கஅக

186. விளைந்தபரி பாக விசேடமுளா ராலும்
தெளிந்ததிட ஞானியைச் சேர்ந்துண்மை தேரிலன்றி
உளைந்துபட வேண்டியதே யுய்யுநெறி காணுது
தளைந்தபசு பாசத் தளையறுப்பான் சற்குருவே. கஅஉ

187. கற்கினுமெய்ஞ் ஞானநூல் காக்கினுந்தான் பல்விரதம்
சற்குருவா லன்றித் தடுமாற்றந் தீரரிது
நிற்குநிலை நிற்பித்து நீசமனப் பொல்லேனை
ஒற்கமுறத் தன்னடிக்காட் கொண்டா னுடையானே.

188. மித்தையாத் தோற்று விசித்திரபே தங்களுக்குள்
ஒத்தவொரே யுண்மையா வூடுருவி யுள்ளதுதான்
புத்தி மனங்கடந்து பொங்குசிவக் கேவலமாய்
முத்தி சொரூபமா மோன முழுமுதலே. கஅசு

189. மேலாட்ட வொட்டான் றலைதூக்கி மெய்ம்மறந்து
வாலாட்ட வொட்டான் வளைத்தென்னைத்
[தான்மடுத்தான்
கோலாட்டங் கும்மி குதித்தடிக்குங் கும்மாளம்
போலாட்ட மெல்லாம் புலந்தொழிந்து போயினவே.

190. அகமோ வயலோ வறிவோ மயலோ
உகமோக மாக வொளிர்சிற் பரத்தே
அகமே யகமா வவிர்தலா லன்பார்
சுகமோன வாழ்வு துலங்கிற் றியல்பே. கஅசு

191. மோனத்தி னின்றே முளைத்திவ் வகிலமுமம்
மோனத்தின் கண்ணே முடிதலொன்றே வாயிடையம்
மோனத்தின் கண்ணே முயங்கி யியங்குவதம்
மோனத் திறத்தான் முகந்ததென் புந்தியே. கஅஎ

192. தூக்கவா றென்னைத் தடுத்தாண்டான் அன்புபட்டுச்
சொக்கினேன் சுத்தவருட் சொக்கன் சொருபத்தே
*மிக்கநனு வானவருள் வீட்டுலகக் கேவலத்திற்
பொய்க்கனவே யாகப் புலம்பிற்று முப்புடியே. கஅஅ

193. மான்ற மயக்கமற மாற்றியெனைத் தேற்றியதால்
ஆன்றே ருரைத்தாங் கடியேனுக் காண்டவன்சொல்
ஊன்றுகோ லொன்றே வுறுதிசே ருண்மைவீட்
டான்றபே ராட்சியா வாயிற் றனுபவமே. கஅசு

---

*மிக்க நனு என்றது அதீதமான துரீயத்தை.

194. நன்றான மோனமெய்ஞ் ஞானநு பூதியால்
ஒன்றாக வுள்ளத் தொளிர்பரமே யென்னுருவா
இன்றே யறிந்தே னெதுவுமென்னை யன்றியில்லை
என்றேநான் கண்டளவி லிச்சாதி பொய்ச்சதே. கசூ0

195. ததாகார மோன சதாசார நிஷ்டை
அதாகவந் தென்னையகத் தாட்படுத்த லாலே
இதாகிதமென் றென்று மெனக்கின்றி யெல்லாம்
அதானவன்பா லாக வடைவுற்ற தச்சோவே. கசூக

196. நிறைவான மோன நிலைசேரப் பெற்றேன்
அறிவு தெளிந்தமைந்த வாற்ற லடியேன்
உறவென் னியல்பா வொளிர்சொருபத் தன்றிப்
பிறவற்றி லில்லேன் பிரிவா லகந்தையே. கசூஉ

197. சிந்தையற்ற மோனந் தெளிந்தஞா னநுபவச்
சந்தமார் வாழ்வு சதோதயமாப் பொங்கலால்
பந்தமுத்தி யற்ற பராற்பரமா மெய்ப்பதமே
சொந்த சொரூபமாய்த் தோய்ந்ததுப சாந்தியே. கசூங

198. நோக்கரிய நோக்காய் நுணுக்கரிய நுண்ணுணர்வாய்த்
தாக்கற் றொளிர்சொருப தத்துவமாய் நிற்றலால்
போக்கும் வரவும் புணர்வுமிலாப் பூரணமாய்
நீக்கமற வெங்கு(ம்) நிறைந்ததென் னெஞ்சகமே. கசூச

199. விச்சொன் றிலாதே விளைவுசெய்யும் மாயையில்வல்
லச்சனரு ளாற்பொய் யவிச்சை மயக்கமறச்
சொச்சமாத் துன்று சொரூபசிவக் காட்சியின்மெய்
விச்சையா லென்னுள் விளங்கிற் றஜாதமே. கசூரு

200. அறிவான வுண்மையா வான்ற சொரூப
நிறைவான மோனமே நெஞ்சமா விஞ்சலால்
அறிவான சுத்த வருள்வெளி யாக
நிறைவான சாந்தியே நேயமா வாயதே. கசுகு

201. நிச்சிந்தை யாக நிகழ்சொருப மோனவருட்
சொச்சந்த மான சுவாநுபூ தித்திறத்தால்
அச்சந் தவிர்ந்தாங் கவாத்தீர்சுத் தாத்துவிதச்
சச்சந்த வாழ்வே சதாசார மாவதே. கசுஎ

202. உதகரிக்க வொண்ணு வொருமைசே ருண்மை
அதிகரித்த தாலென் னகத்தே யகமா
இதமகமாப் பின்னி யிரண்டுபட்ட பேத
மதிமயக்கம் போக மடுத்ததுண்மை வாழ்வே. கசுஅ

203. உள்ளுணர்வே யன்றி யுறுதுணைமற் ருருயிருக்
கெள்ளளவு மில்லை யெனிலருளவ் வுள்ளுணர்வே
கள்ளமன வேகவகங் காரமுனைப் புள்ளடங்கில்
வெள்ளவருள் வாழ்வா வெளிப்படுமவ் வுள்ளுணர்வே.

204. உள்ளியுழல் வன்றிமற் றூழ்வலியை மாற்றவுயிர்க்
கெள்ளளவுந் தன்னு லியற்றக் கடவதில்லை
துள்ளுமுனைப் பற்றுத் துலங்கு சொரூபசிவ
வெள்ளவருட் சிந்தனையின் வேறே ருபாயமே. உ00

205. உண்டின் றுருவருவென் றென்றிரண்டென் றிவ்வாறு
மிண்டுபடு வாதமயல் வீறுப் பகன்றொழியத்
தொண்டுபடு பத்தியாத் தொக்க சமர்ப்பணமே
மண்டுசிவ ஞானவருள் வாழ்வுக் குபாயமே. உ0க

206. புத்திக்குட் போதப் புரணமா நின்றந்தப்
புத்தியைத் தானே பொலிவிப் பதனாலே
சுத்த வறிவாத் துலங்கு சொருபவருள்
வித்தையே வித்தைமற் றல்லவை மித்தையே. ௨௦௨

207. சிக்கென் றகத்தே செயுமான்ம சோதனையாற்
பொக்க வகந்தையறப் பொங்குவது சுத்தவகம்
மிக்க வியல்பா விளங்குமம் மெய்யகமே
தொக்க பரமாத் துணியக் கடவதே. ௨௦௩

208. மோனானு பூதியா மூண்டவருட் காட்சியின்மெய்த்
தானாக வுள்ளதொரு தத்துவத்தை யன்றிமற்
றானா வுயிரா வுணர்வா வுளங்களா
நானா வெனதா நடைபெறுவ மாயமே. ௨௦௪

209. நானா விதப்பொய்ந் நடலைசேர் வாழ்வுகளும்
சீனக்கண் ணாடிபோற் சித்திரக்கண் காட்சிகளே
ஊனுருவா நானென் றுருத்துழலும் பொய்ம்முனைப்பவ்
வேனையவற் றின்கருவென் றெள்ளலுற வேண்டுமே.

210. மானவகங் கார மதிப்பாற் செருக்கலால்
வானவரும் பாழ்த்து மதிகெட்டு மாழ்கலுற்றார்
ஊனவகப் பொய்யுணர்வா மோட்டையடைத்
[துள்ளொடுங்கார்
ஞானவொளி யுள்ளத்து நண்ணவே நண்ணாரே. ௨௦௬

211. ஊனவகச் சுட்டுணர்வா லுற்றவயற் காட்சிகளவ்
வூன வகந்தை யொழியிலொரு தன்மயமே
ஞான வருள்வெளியா நண்ணுமோ னானுபவ
மானவர்தம் மாட்சி மதித்துரைத்த லாவதே. ௨௦௭

212. சிறவாத மோகச் செருக்கற் றொழிய
அறிவாக வுள்ளத் தடங்கினோர் மோன
நிறைவான வுண்மையே தாமா நிலைப்பார்
அறிவான நிட்டையகத் தாற்றல் விதியே. உ0அ

213. தெள்ளிதா(ம்) மோனவருட் சிற்பதத்திற் [சிந்தையொன்றி
உள்ளுதா ரஞ்சே ருணர்வா லுபாசிப்போர்
உள்ளதே தானு வுரஞ்சே ரனுபூதி
ஒள்ளிதா வுள்ளத் துறப்பெற்று வாழ்வாரே. உ0கூ

214. நெடுங்கன வாக நிகழ்பிறவித் தோற்றம்
அடங்கலு(ம்)ஞா னுசா னருட்பார்வை யாலே
கெடுங்கண்டீர் மோனவருட் கேவலமா வுள்ளத்
திடங்கிளருந் தன்மெய் யியல்பான முத்தியே. உக0

215. கொதிப்புற்ற காலனைக் குப்புறத் தள்ளி
மதிப்புற்ற *வீர மகேசன் பதத்திற்
பதிப்புற்ற சித்தம் படர்கால தூத
ரெதிர்ப்பைக் கடந்தாங் கிறுமாந்து வாழுமே. உகக

216. யாங்குமுள னான விறைவனருட் பூரணத்தை
ஈங்கா மிதயத் தியல்பா மிருப்புணர்வாய்
ஆங்கார(ம்) முற்ற வடங்கி மடுத்தலில்லார்
தூங்கியே சிந்தை சுழல்கின்றார் சொப்பனத்தே. உகஉ

**வீரம்-அடியார்பால் வைத்துள்ள அருள்வீரம்; மகேசன்-மரணப்பிரமாதத்தை மாற்றும் அறிவுருவான ஆண்டவன்.*

217. பிரான்பெருமைக் கேற்பப் பெருங்கோயி லொன்று
பராமரிசம் பண்ணிப் படைக்கமுயல் பத்தர்
தராதலமேற் கோயில் சமைத்தலொடு நில்லா
தொராலயமா மிக்க வுளஞ்சீர் திருத்துகவே. உகரு

218. திருவருளே சாட்சியாச் சித்தந் தெளிந்தோர்
ஒருபொருளே தேறு முரஞ்சா லுணர்வால்
வெருவரல்சேர் மோகம் விடுபட் டடைவார்
பருவரல்சே ராமெய்ப் பரமசுக வாழ்வே. உகச

219. துன்னவோ வன்றித் துறக்கவோ தன்னினு(ம்)மற்
றன்னியமின் றுகவிளங் கற்புதசிற் பூரணமாய்
மன்னுசிவக் கேவலமெய் வாழ்வா மனுபூதி
தன்னிழப்பா லுற்றபெருந் தக்கோர்க்கென்
[வேண்டுவதே. உகரு

220. மலவா தனைகழிந்த மாதவத்தோர் சித்தத்
துலவாத சிற்பரமா வோங்குமொன்றே தன்னைப்
பலவாகக் காட்டிப் பகட்டி மருட்டும்
மலவா தனையரு மாக்க ளறிவையே. உகசு

திருவருட் பிரசாதத்தால் மௌனசமாதி பெற்றது

221. வாயாற் பறையறைந்தேன் மௌனமென்றே
[மெய்ஞ்ஞான
நேயானு பூதி நிரம்பாத நெஞ்சத்தேன்
தாயான சிற்பரா சத்தியருட் பாலனத்தாற்
சாயாத மௌன சமாதிநான் சார்ந்தேனே. உகஎ

222. மனவுணர்வாம் பேத மயக்கமறப் பொன்ற
நனவினுமிக் கான்றமெய்ஞ் ஞானநன வாகத்
தனதியல்வாழ் வான சதோதயமென் னுள்ளத்
தனுபவமாச் சேர்த்தவரு ளாழியான் வாழியே. உகஅ

223. ஆண்டகுரு நாத னருளா லகத்தெனக்கு
மூண்டபெரு வாரியா மோனனு பூதிகாண்
காண்டலரு முத்திக் கடவுட் பெரும்பதமாத்
தூண்டுபெரு மாதவத்தோர் துய்க்கப் பெறுவதே. உகக

224. சும்மா விருப்பே சொரூபமா வுள்ளொளிரென்
னம்மானுக் கேற்ற வருமை வழிபாடா
அம்மா னருட்சி ரனுபூதி யாலறிந்து
சும்மா விருந்தே தொழாதுதொழப் பெற்றேனே. உஉ०

225. சொரூப வுணர்வு துலங்கலே யான்ற
குருபதே சத்தின் குறிக்கோளாக் கொள்ளிற்
றிரோதமறத் தாமே தெளிகிலார் சொற்கள்
குருபதே சங்களாக் கொள்ளத் தகாவே. உஉக

226. கடந்தபர மார்த்தவகங் காட்டினுன் பாதத்
தடைந்தபரி சுத்தமோ னனுபவ தீர்த்தம்
குடைந்துகுடைந் தாடியுளங் குள்ளக் குளிர்ந்தேன்
முடிந்ததுவெந் தாபமற மூண்டதுபே ரின்பே. உஉஉ

227. துய்த்தலரி தான சொரூபவருட் பேரின்ப
மெய்த்தகவா வென்னுள் விளங்குசிவக் கேவலவாழ்
வத்தனரு ளாற்சேர்ந் தனுபவித்த லன்றிமற்
றெத்தகைமா யோக மியற்றினுந்தான் சேர்வரிதே. உஉ௩

228. வாழியெனைத் தன்மயமெய் வாழ்வுபெற வாண்டவரு
ளாழியான் பாதமென் னுவிக் கருந்துணையா
ஏழையே னெங்கெங் கியல்கினுமங் கங்கெல்லாம்
ஊழிதோ றூழியுளத் தொன்று வொளிருமே. உஉஅ

229. ஊன வகந்தை யுணர்வொழிய வுள்ளத்து
நானென் பதன்பொருளா நானறிந்த சுத்தவருள்
வானமெங் கெங்கும் மலர்தலால் ஒட்பமா
மோன சொருபவொளி மூண்டு பரந்ததே. உஉகூ

230. வான்மருவு தோற்றமா வைகுமனக் கற்பனையில்
யான்மயங்கி மெய்போ லெதிர்ந்துழன்ற பொய்யறிவும்
ஆன்ம சொருப வறிவினும்வே றன்றென்றவ்
வான்ம சொருப வருளா லறிந்தேனே. உ௩௦

(வேறு)

அநுபவங்கூட ஆயத்தை அழைத்தல்

231. மாயக் கிறியான வஞ்சப் புலவுலகில்
வாயைப் பிளந்துமதி மாழ்கலுறும் வாழ்வையெள்ளித்
தாயிற் பெரிதுந் தயாமிக்க சற்குருதன்
கோயிற் பிணுக்களாக் கூடிவாழ் பிள்ளைகாள்
காயக் கருத்தாற் களிப்பார்முன் மெய்போலச்
சாயைக் குலங்களைத் தான்பகட்டாக் காட்டுறும்பொய்ம்
மாயைக் *கலிநலிய வாரீர்பே ரின்பமய
ஞேயத் தழுந்துசிவ நிஷ்டானு பூதிக்கே. உ௩௧

---

* *கலிநலிய ஞேயத்தில் அழுந்துகின்ற எனவும், நிஷ்டானுபூதிக்கு வாரீர் எனவும் கூட்டுக.*

(வேறு)

232. ஆக்கமே போன்ற வழிவான ஜீவியத்தைத்
தேக்கமுயல் கின்றமட தேகோகம் புத்தியாற்
சேர்க்கலுற்ற பண்டைத் திரளான வாசனையைத்
தீக்கலுற்ற மெய்ஞ்ஞானத் தீப்பிழம்பாந் திருவருளே.

233. சூற்றம் பொறுத்தான் குறைதவிர்த்தான் மூலப்பா
முற்றமற வுள்ளத் தவிர்சொருப மானவருட்
பெற்றிசே ருண்மைப் பெருவாழ் வுவந்தளித்தான்
பற்றறநான் பற்றியமெய்ப் பற்றுன வாண்டவனே. ௨௨௯

234. அவாவிநின்ற வாறே யடைந்ததெனக் கன்பாற்
சிவாயநம வென்னத் தெளிந்தசிவ பத்தி
உவாமதியாற் போலவெனக் குள்ளங் குளிரத்
தவாதவுப சாந்தி தழைத்திடமேன் மேலே. ௨௩௦

235. அடிகளே மிக்கபே ராண்டா னெனக்கவ்
வடிகளுக்குத் தக்க வடியேனு னல்லேன்
அடிகளென் பாலே யருளியகண் ணேக்கால்
அடிமைசெய்ய வோராங் கருகதைபெற் றேனே. ௨௩௧

236. உடையான் முழுமுதலா முண்மைப் பெரியான்
அடியேன் கடையரின்மிக் காற்றக் கடையேன்
அடியேனைத் தன்மெய் யடியரொடு சேர்த்த
உடையா னருளா லுயர்சிறப்புற் றேனே. ௨௩௨

237. சோரப் பிரமாதச் சூதகற்றும் போதவருட்
பாரக் கழலிற் பராமிர்த வாழ்வாக
ஆரக் கிடைத்த வனுபூதி யாலடியேன்
சாரக் கடவதிலை சார்ந்தே னருட்பதத்தே. ௨௩௩

238. மிண்டுசெய்யும் மோக மிடுக்கான கன்னிமையின்
மண்டுமகங் கார மயக்கமதிச் சீர்குலையப்
பெண்டுகொண் டாண்டவருட் பேராளன்
[பெய்கழற்குத்
தொண்டுசெய்யுந் தொண்டர்க்குத் தொண்டுசெய்து
[வாழ்வேனே. உ௩௪

239. புந்திப் பொலிவெய்தப் பொங்குங் குருரமணன்
சந்தத் திருவடியிற் சஞ்சலங்கள் போயகலச்
சிந்தைமொழிக் கெட்டாத் திருவருட்பே ரின்பமகிழ்
விந்தைசேர் பொங்கல் விழாநாங்கொண் டாடுதுமே.

240. பொய்க்கனவிற் புக்கழுந்தும் புன்புலத்து வேட்கையாற்
றெருக்கமனக் கேதமறச் சுட்டறுத்துக் கூரறிவாற்
சிக்கெனவுட் கூடிச் சிவாயநமச் *செம்பொருளா
மிக்கவருட் பொங்கல் விருந்துகளித் துண்போமே. உ௩௬

241. மண்ணுசை யாதி மயக்ககற்றும் மெய்ஞ்ஞானத்
தண்ணு ரளிசேர் சதாசிவசற் போகமெனக்
குண்ணு ரமுதமா வூற்று சொருபவருட்
கண்ணுக வென்னுட் கலந்தபிரான் வாழியே. உ௩௭

வாழ்த்து

242. அருள்வாழி வாழி அகத்திற் சுடர்சொருபப்
பொருள்வாழி வாழிசற் போதகுரு பாதவொளி
தெருள்வாழி வாழி சிவானந்தச் சீரடியர்
திரள்வாழி வாழிசிவச் சீர்மைநிலத் தோங்கவே. உ௩௮

---

* செம்பொருளா மிக்க - செம்பொருளாகச் சிறந்த; உண்டு களிப்போம் என விகுதி பிரித்துக் கூட்டுக.

4. குருவருட் குதூகலம்

1. பாயிரம்

திருவருளால் அடியேன் சிவசந்நிதியிற் பரவசமாகப்பெற்ற
சிவாநுபவமாட்சி கவித்திறத்தைக் கடந்து
விளங்குவதெனல்.

243. சிவசந் நிதியிற் சிறியேன் மனமற்
றவசந் திகழான் மசிவா னுபவப்
பவிசின் பெருமை பகர்தற் கெளிதே
கவிசொன் மொழியின் கணடங் குறுமே. க

மெய்க்கவியான ஆண்டவன், அடியேன்
அநுபூதி பாட, அருள்வாக்கு உதவுவானெனல்.

244. செவிவா ரமுதச் சுவைசேர் மதுரக்
கவிவா ணரவைக் களமுற் றடியேன்
கவிதா னுமுளக் களிதந் திடவே
கவிதா ரசமெய்க் கவிதான் றருமே. உ

2. அடக்க உரை

கொச்சைப்படு வாயாற் கூறியதால்,
அதிசுத்தமான ஆண்டானருட்புகழ் எச்சிற்படுமென்று
இனைந்தேனெனல்.

245. சச்சிற் பரமா னசதா சிவநின்
மிச்சைப் பழிதீர்ந் தவிழுப் புகழென்
கொச்சைப் படுவாய் கொடுகூ றியதால்
எச்சிற் படுமென் னவினைந் தனனே. ௩

3. குரு வணக்கம்

மோனநுபவ முத்தியருள முற்பட் டெழுந்தருளிய பிரஜ்ஞான ப்ரஹ்மமேயான குருபாத வணக்கம்.

246. ஊன வகந் தையொழித் தகமே
தான வொளிர்தற் பரசிற் சொருபம்
மோன னுபவங் கிளர்முத் தியருள்
கோன வளர்சற் குருதாள் பணிவாம். ௬

வீர வருட்கழல் வெற்றிப் பராவல்.

247. கெடியோங் கதிகா ரமதக் கெறுவம்
வெடியோங் கமுழங் குவினைப் பகைசாய்த்
தடியோங் களையாண் டவருட் கழலிப்
படியோங் கமகிழ்ந் துபரா வுதுமே. ௭

4. குரு இயல்பு

என்னுள்ளத்துள் அமுதவொளி பரப்பிய ஆண்டவன் சிற்சொரூபனன குருரமண னெனல்.

248. எண்ண தனவெண் ணியிரங் கெனுளத்
துண்ண ரமுதா வொளிசெய் யுடையான்
கண்ண ரமுதன் கனசித் துருவாம்
அண்ண மலைமா ரமண ரியனே. ௮

ஆண்டவன், மனமயக்கத்தா லுண்டான காலதேசக் கற்பனைகளைக் கடிந்தருள்கின்ற கனஞான சொரூபன் எனல்.

249. இடமோ பொழுதோ விதுவென் றுணராத்
திடமோ னவியற் செழியோன் பழையோன்
இடமாப் பொழுதா வியல்கற் பனைசெற்
றடர்மாப் பரமா வவிரற் புதனே. ௯

*தன் அருளொளியால் என் மயக்கவிருளைப்
போக்கியவன் ஆன்மசொரூபனான ஞானபாநு வெனல்.*

250. ஊரமாங் கிரணத் தொளிசே ரருளாற்
பிரமா தமறப் பெயர்வித் தவன்முப்
புரமாந் தடையைப் பொடிசெய் புரணப்
பரமான் மசொரூ பதிவா கரனே. ௬௭

*ஆன்ம சொரூபமாக வவிர்கின்ற ஆண்டானது
இயல்புரைத்தல்.*

251. பிரியான் புணரான் பிரமப் பொருளாம்
பெரியான் சிறியான் பிதிர்மூன் றவைதீர்
துரியன் னதிதன் சுடர்சிற் பரமாங்
கரியன் வெளியன் கணவன் னகமே. ௬௮

5. குருபாதச் சிறப்பு

*பக்தரகத்திற் பரகதி காட்டியருளும் குரு பாதமே
ஞானோதயத்துக்கு நடுநாயகமாக நிற்பதெனல்.*

252. வானோ ரறியா வழிதன் னருளால்
ஈனோ ரிதயத் தெளிதிற் புலனாத்
தானோர் குருவாத் தரைதோய் பதமே
ஞானோ தயமா நடுநிற் பதுவே. ௧௦

*வேதாந்த விழுப்பொருளான ஆண்டானடியே
அடியேனகத்தின் மெய்ப்பொருளெனல்.*

253. கணவன் செவியன் கருவா வுளமெய்
யுணர்வின் சொருபத் தொளியன் வெளியன்
மணவன் மகிணன் மறையின் முடிமேல்
அணவும் பதமென் னகமெய்ப் பொருளே. ௧௧

அகண்டாநுபூதி அடியேனுக் களித்தது பிரம்மநிர்வாணப் பேரரசனான ஸ்ரீரமணன் திருப்பாதமெனல்.

254. உறையா வடியே னுயிரு டுணர்வாய்க்
குறையா வநுபூ திகொடுத் ததுதான்
நிறைவா னபிரம் மநிர்வா ணநிலைக்
கிறையா வியல்கோ ரமணன் பதமே. கஉ

ஆண்டவன் பாதப்பயிர் அகத்து விளைத்தலே உயிருக்கு உறுதி பயப்பதாமெனல்.

255. புன்செய் நிலமா னபுலத் திலுழைத்
தென்செய் குதியென் னுயிரே ரமணன்
றன்செய் யபதப் பயிர்தன் னகமாம்
நன்செய் தனில்வைக் கைநமக் கினிதே. கரு

தோற்றுமுலகம் நிலையற்றதாக வொழிதலின், தோற்றவொடுக்கமற்ற அறிவுருவான ஆண்டானடியே உயிர்த்தொகைக்கு உண்மைக் கதியெனல்.

256. காலாந் தரமாக் கழியுங் கதையே
போலாந் தொகவைம் புலனு முலகம்
காலாந் தகனுங் கனவா லறிவன்
காலாந் தடுமா றுமுயிர்க் கதியே. கசு

சற்குருபாதம் தலைமேற் படிதலும், மலவாதனை மாய்ந்து உள்ளங் குளிர்ந்ததெனல்.

257. இணக்குற் றதொழும் பரெழுத் தையறத்
தணிக்குற் றதயா ளுபதந் தலைமேல்
மணக்குற் றதுமென் மலவா தனைமாய்ந்
துணக்கக் குளிர்வுற் றதுளம் மிகவே. கஎ

குருபரன் றிருவடிக் காளாக வடைதலும், குடும்ப பாசத்தாற் கூடுந் துன்பம் பின் என்றுமே மீளமாட்டாது முடிவாக விடைகொண்டொழிந்ததெனல்.

258. தோளா மணியாச் சுடர்பொற் கழலுக்
காளா வடியே னடையப் பெறலும்
கேளா முறவின் கெழுமற் படர்பின்
மீளா முடிவா விடைகொண் டதுவே. கசு

ஆண்டானருளால் திருவடியாகிய முத்திக்கரை சேரப்பெற்றுப் பிறவிக்கடல் கடந்தேனெனல்.

259. நிலையொப் பநிகழ் வுறு(ம்)நெஞ் சிலொளிர்
தலையொத் தபெருந் தகைதன் னடியின்
மலையொத் தவளங் கரைவாய்த் தருளால்
அலையொத் தபிறப் பையகன் றனனே. கஎ

சொரூபானுபவஞ் சூழ்தலால் குருபாதமன்றிக் குறியில்லையாயிற்றெனல்.

260. கருவா ணவமைக் கலிசாய்த் தொருதன்
சொருபா னுபவச் சுடர்சூழ் தரலால்
வெருவா தெனையாண் டவருள் வெளியாங்
குருபா தமலாற் குறியொன் றிலையே. கஅ

6. குருமாட்சி

யான் ஏங்குரு வண்ணம் என்னை இனிதாக வாண்டவன் வினையின் நீங்கி விளங்கிய வறிவனை குருமூர்த்தி எனல்.

261. முனிநா யகமா முதல்வன் முயல்செய்
வினைநா சமுறத் தெறுமெய் யறிவோன்
இனிநா னினையா தினிதா வருள்செய்
நனிநா கரிகத் தனிநா யகனே. கசு

என் ஞண்டவன் அடியார் காமச்சேட்டையை
அறவே கடிகின்ற கனஞான தேசிகன் எனல்.

262. மெய்வச் சிரவீ ரியஞா னவொளிச்
சைவச் செழியன் சதிர்மா ரமணன்
பொய்வச் சமணே புவனுட் டமறச்
செய்விச் சருள்பத் திரதே சிகனே. ௨௦

அலேவற்ற வகத்தில் அருள் விளக்கஞ் செய்கின்ற
ஆண்டான் குருத்துவம் உலக மயக்கத்தை ஒழிவித்ததெனல்.

263. அலேவற் றவகத் தவிர்சுத் தவருட்
பொலிவிற் படர்செம் பொருளா முடையான்
குலவுற் றசொரு பகுருத் துவமிவ்
வுலகத் திருளே யுடைவித் ததுவே. ௨௧

7. குருமொழி மாண்பு

குரு வாக்கியத்துக்கு ஒரு வாக்கியமும் இணையாகாமையின்
அதனையே குறிக்கொண்டு ஒழுகவேண்டுமெனல்.

264. சொருபாக் கினியாச் சுடர்தற் பரமாங்
குருவாக் கினையே குறியாக் கொளுவோர்க்
கொருவாக் கியமத் திருவாக் கிய(ம்)மற்
றெருவாக் கியமின் றுவமித் திடவே. ௨௨

ஆண்டா னருள்வதான ஒருமொழி ஆரமுதாக
உயிர்க்கு உறுதி பயப்பதாமெனல்.

265. எனைத்தா யினு(ம்)நல் லவைகேட் கவுயிர்க்
கனைத்தா யினுமான் றபெரும் பயனும்
தனைத்தா யினுமிக் கதயா நிதியாய்
முனைத்தாண் டவனேர் மொழியா ரமுதே. ௨௩

ஆண்டா னருளிய ஒருமொழிப்பொருளை உட்கொண்ட
அடியார் அயலறியாதே, அறிவுமாத்திரமாய்,
அகிலமும் ஒருதானே யான ஆன்மசொரூபத்தில்
அமிழப்பெறுவாரெனல்.

266. தமிழப் பெருமான் சலசத் திருவாய்
உமிழப் பெறுமவ் வொருசொல் லுருசித்
தமிழ்திற் பருகுற் றடியார் சொருபத்
தமிழப் பெறுவா ரறியா ரயலே. உசா

மகாவாக்கிய உபதேசமாண்பை வியத்தல்.

267. அரிதா கியமெய்ப் பொருள்பே சியுயிர்க்
கரிதா யதுமிக் கெளிதா மியல்பால்
உரிதா கவகத் துளதா யினவா
பெரிதா னபிரம் மவிழுப் பொருளே. உரு

இதுவுமது.

268. விடியா தவிருள் விடியும் படியோர்
நொடியாம் படுமா ய(ம்)நொடித் தலுமுப்
புடியா யினபொய்ப் படவென் னுடுதன்
விடையா தொருபே தமுமோர்ந் திலனே. உசு

8. குரு ஆட்சித் திறன்

பிரம்மாத்மைக்கிய முண்டர்கத் திருவடி திகைஷ செய்து
சொரூப விஞ்ஞானமளித்தாண்டானெனல்.

269. மதுவொன் றுமலர்ப் பதமென் முடிவைத்
ததுவென் றுனைநீ யறியென் றிதயப்
பொதுவொன் றுசுடர்ப் பரிபூ ரணமாய்
*எதுவின் றிமகிழ்ந் தெனையாண் டனனே. உஎ

* எது - ஏது என்பதன் குறுக்கல்.

பிரமாதத்தாற் பிரம்மநிஷ்டையிற் பேராமல்
ஆண்டவன் உண்மையுணர்வருளினனெனல்.

270. அறியுந் தரமற் றவெனக் ககமா
வுறையுந் தனதுண் மையுணர் வருளி
நிறையும் பரிபூ ரணமெய்ந் நிலைவிட்
டிறையும் பிரியா தினிதாண் டனனே. உஅ

மெய்ஞ்ஞானவாழ்வுக்கு அரசனாக விளங்குங் குருபரன்
அஞ்ஞானவாதனை யழித்து, அருட்கடலிற் படிய
என்னை யாண்டருளினனெனல்.

271. தெருள்வா னவர்தந் திருவா ளொளிர்செம்
பொருள்வாழ் வரசாப் புவியிற் பொலிவோன்
அருள்வா ரிதியூ டமிழப் படிவித்
திருள்வா தனைசெற் றெனையாண் டனனே. உகூ

திக்கற்ற என்னை அநுபூதிவாழ்வு பொருந்திய
ஆதிக்கநிலையிற் சேர்ப்பித்துத் தன்னடிக்கு
ஆண்டுகொண்டானெனல்.

272. சோதிக் கவொணுத் துரியச் சுடர்வான்
பூதிக் களிவாழ் வுபொருந் தவுளத்
தியாதிக் குமிலா தவெனை யருள்கூர்
ஆதிக் கபதத் தறவாண் டனனே. ௩0

பரபோகம் புசிக்கப் பட்டிநாயான தம் மனத்திலும்,
ஆண்டவன் மெய்ஞ்ஞானபதம் விளக்கியது
மிக்க வியப்பாமெனல்.

273. அசுத்தப் புலமல் லதுவாழ் வறியா
நிசித்தப் புலைநா யதுநெஞ் சிலு(ம்)நின்
விசுத்தப் பத(ம்)நன் குவிளக் கியவா
புசித்துப் பரபோ க(ம்)மகிழ்ந் திடவே. ௩க

9. குருவருட் பாலனம்

உயிரைப் பற்றி வருத்தும் பிறவித்துன்ப வாட்டங்கெட, முத்திப்பேரின்பமான திருவடித்தேன் பிரசாதித்தானெனல்.

274. மதவே ழவகந் தைமனத் தைமடித்
திதவே மவியற் பாமுத் திநிலைப்
பதவே ரியுயிர்ப் பசிதா கவழற்
சிதவே யறவெற் கருள்செய் தனனே. ௩௨

ஆண்டவன் உண்மையொளியான நுண்புலமாகத் தன் னனுக்கத்தொண்டனுள என்னுளம் புக்கானெனல்.

275. மழையா வருள்செய் மகவான் சுகவான்
பழையான் புதியான் பயில்வார்க் கினியான்
உழையான் வதிவேற் கொழியா வொளியா(ம்)
நுழைமான் புலமா நுழைவுற் றனனே. ௩௩

தம்மறிவு பிறிதொன் றறியாதபடி, தம்முள்ளத்தில் உடையான் குடிகொண்டானெனல்.

276. அறிவா னசொரு பமலாற் பிறிதொன்
றறியா வகையென் னறிவுட் செறிவாய்ப்
பிறியா தவகண் டபிரம் மபதக்
குறியா கவுளங் குடிகொண் டனனே. ௩௪

தன் அடியே அரணாக நான் அடைக்கலம் புகலும், என் நெஞ்சத்தொளியாக ஆண்டான் நிறைவுற்றானெனல்.

277. தஞ்சத் தெளியேன் சரணா கதியென்
றஞ்சித் தனதா ளரணுப் புகவே
விஞ்சைத் தெருள்வீ ரியவா ரியனென்
நெஞ்சத் தொளியா நிறைவுற் றனனே. ௩௫

நீ அதுவாக நிகழ்ந்திடு எனச் சாற்றித் தான் தானாக இதயத்திற் றழைத்தருளினா னெனல்.

278. நேரா கநிகழ்ந் திடுநீ யதுவாக்
காரா னவகந் தைகழிந் தெனவே
வாரா தவிருந் தெனவந் திதயம்
பேரா மலிருந் தருள்பெய் தனனே. ௩௬

பொல்லாக் கடையான தம் புந்தியிலும் நல்லா ரிதயத்திற் போல நன்கொளிர்கின்றா னெனல்.

279. நல்லார்க் கொளியா கநடுப் படநின்
றல்லா தவவிச் சையறக் கடிவோன்
பொல்லாக் கடையே னதுபுந் தியு(ம்)மிக்
குல்லா சமுறச் சுடர்வுற் றனனே. ௩௭

குருபரனான ரமணன் என் மனத்தில் நிலைபெறத் தங்கி மகிழ்ச்சி யளித்தானெனல்.

280. அனியந் தினையும் புலமா வறியாத்
தனியன் பரமன் சமசத் துருவன்
கனியன் களியன் கனமா ரமணன்
மனியென் மனமே மகிழ்தந் தனனே. ௩௮

தன்னடியார்க் கருள்வதிலே தற்பரனான ஆண்டவன் அமுதானுபவங் கூட்டுவதான சிவதருமம் என்னெஞ்சிற் பதிவித்தானெனல்.

281. தெருமந் துழல்சிற் றடியார்க் கருள்செய்
கருமந் தினையுங் கழலாக் கழலோன்
அருமந் தபரா வமுதா னசிவத்
தருமந் தகநெஞ் சமுறுத் தனனே. ௩௯

சகல கேவலங்களில் மாறிமாறிச் சுழன்ற மூடனான என்னுள் தன்னியல்பான உண்மையொளியை இலக்குவித்தானெனல்.

282. பயிலா தவர்பாற் பயிலாப் பரமன்
கயிலா யமலைக் கணுறை யிறைவன்
துயிலா விழியாச் சுழல்புன் மடவேற்
கியல்பா மொளியென் னுளிலக் கினனே. ௬௦

ஆசான் அருளாற் பேசா அநுபூதி பிறங்கியதெனல்.

283. பாசா டவியாப் படர்கற் பனையின்
மாசா னமயக் கமனந் தெளிவுற்
ருசா னருளா லகவா தனைதீர்
பேசா வனுபூ திபிறங் கியதே. ௬௧

மனமணிலிங்கமாக என்னுளத்தில் ஒளிருங் குருபரன் மெய்ஞ்ஞான சொரூபநிஷ்டாநுபூதிநிலை எனக்களித்தானெனல்.

284. இயமா னடியே னிதயத் தெழிலோங்
குயர்மா மணிலிங் கவொளிக் கதிரோன்
பயமா லறுதற் பரசிற் சொருபத்
தியல்பா(ம்) நிலையெற் கினிதீந் தனனே. ௬௨

தயாளுவான ஆண்டவன், சிவானுபவம் சொரூபானுபவமேயாகச் சேர, வேதாகமங்களைக் கடைந்தெடுத்த வெண்ணெயான ஞானநுபூதி அடியேனுக் களித்தானெனல்.

285. ஆதா ரசிவத் தனுபூ தியுனக்
கீதா சொருபத் தியல்கா ணெனவே
வேதா கமஞா னவெணெய் யுணவா
ஊதா ரியுவந் தெனையூட் டினனே. ௬௩

பரமான்ம சொரூப இயலைத் தெளிவித்த தலைவற்கு என் கருத்து இனிய உணவாயிற் றெனல்.

286. நித்தத் துவமாம் பரமுத் திநிலை
சுத்தப் பரமான் மசொரூ பவியல்
வித்தைத் தெளிவால் விளைவித் தவருட்
கர்த்தற் குணவா யகருத் தினிதே. ௪௪

பெருமயக்கமான பிறவித்துன்பமற ஆண்டவன் சிவஞானுனுபவ மளித்தலால் என்னைச் சிவகதி சேர்த்தானெனல்.

287. நவநா கரிகத் தவமோ கமியல்
பவமா னபரா பவதுக் கமறச்
சிவஞா னரசத் தெளிவா லிறைவன்
சிவமா னபராங் கதிசேர்த் தனனே. ௪௫

வினைமுதலான நான் (என்னுமகந்தை) விளிந்தொழிதலே எனக்குறுதியாமென, அருள்வடிவான ஆண்டான் என்னை யழிவித்தானெனல்.

288. வினைக்கே டனெனப் பெறுவித் தகனை
எனைக்கே டனெனப் *புருவந் தெரியேன்
அனைக்கே யு(ம்)மிகப் பெரிதன் பனெனை
எனக்கே மமிதென் னவிறுத் தனனே. ௪௬

அருள்வள்ளலான ஆண்டான் கடியக் கடவனுன என்னை நல்லடியார் நடுவிற் கூட்டினுனெனல்.

289. நலனென் றுநெறிக் கணடக் கறியாக்
கலனென் றடிநாய் கடியக் கடவேன்
நிலனின் றதயா நிதியவ் வெனைமெய்ந்
நலனென் றடியார் நடுவுய்த் தனனே. ௪௭

---

* புருவம் - பூர்வம், முன்பு - பரிபாடல்.

ஆண்டவன் பரசிவப் பிரம்மத்தில் என்னறிவைச்
செறிவித்தானெனல்.

290. அறிவூ டுநிறைந் தவிர்தற் பரமாச்
செறிவே சிவதற் பாமுத் தியெனப்
பிறியா துயிரம் மபதத் திடையென்
னறிவைச் செறிவாக் கினனுண் டவனே. உ௯௰

10. தன் அனுபவங் கூறல்

அன்பின்மையால் அபக்குவனுன என்னகத்தே
மெய்ப்பொருள் மிகத்தெளிவாக விளங்காநிற்றல்
உள்ளக்கருவான உடையா னருளெனல்.

291. எள்ளத் தனையன் பிலனு கவுமென்
கள்ளக் கருவா தனைகட் டழியத்
தெள்ளத் தெளிவாத் திகழ்கிற் பதுமெய்
உள்ளக் கருவா முடையா னருளே. உ௯க

தானுக என்னை மாற்றிய சற்குரு
யானுக எனக்கினியானெனல்.

292. யானு கவெனக் கினியான் உலவா
மோனு னுபவப் பரமுத் தியருள்
வானு கவுளத் துவளர்ந் திடலால்
தானு வெனைமாற் றியசற் குருவே. உ௯உ

ஜீவபோதங் கடந்த சிவசொரூபமான ஆண்டான்
சாந்தவிருத்தியால் தன்னை நான் தழுவத் தன்
பெருங்கருணையால் என்னுள்ளத்திற் றழைக்கின்ருனெனல்.

293. எனையா னறியா வெளியேன் இறைவன்
றனையா னறியத் தரமோ தரமோ
நினையா மறவா நிலையா மறிவால்
தனையா னடையத் தகுவா னகமே. உ௯௩

உள்ளப்புலம் உழுது, சிரத்தையெருப் போட்டு, கற்பனைக் களை பிடுங்கி, அருள்நீர் பாய்ச்சி, விசாரவேலி யிட்டு, பத்திப்பயிர் செய்து, சிவபோகம் புசித்தேனெனல்.

294. உளையா வுரமிட் டுள(ம்)நன் றுழுதே
களையா வெழுகற் பனைகட் டருள்பாய்த்
துளையா வுசவா லுழுவற் பயிரின்
விளைவார் சிவபோ க(ம்)மிசைந் தனனே. ௬௨

சிவசொரூபமான ரமணன் எனக்கு அபயமளித்தாண்டருளி, என்னுள்ளத்தில் சொரூபஞானச் சுடர்மலையாகத் துலங்குகின்றானெனல்.

295. வெருவாக் கழல்சேர் வினையேற் கபயத்
திருவாக் கருளிச் சிவமா ரமணன்
குருவாக் குசலங் குலவும் பரசிற்
சொருபாத் திரியாச் சுடர்வா னுளமே. ௬௩

உடல்வாழ்விற் சற்றே தாழ்வுண்டாயினும் அது கிடக்க! ஆண்டானருள்வழி நிற்கப் பெறலான் மனக்கவலை இலனாயினேன் எனல்.

296. தறையிற் சடவாழ் வுறுதாழ் வையெணிப்
பொறையற் றிறையோ டுபுலப் பதுவோ
இறைவன் வழிவிட் டபடிக் கியல்கென்
றுறைவன் கவலொன் றுமுளத் திலனே. ௬௪

ஆண்டான், அடியரான தம்மெல்லோரையும் விட்டகலாமை கூறி, இன்பவடிவான இதயத்தில் ஏக்கற்றிருக்க அருளினனெனல்.

297. ஏனிங் குகவன் றிடுகின் றிர்மனம்
யானெங் ககல்வே னுமெலோ ரையும்விட்
டூனங் கெடநீ ருபசாந் தியடைந்
தானந் தவகத் தமர்கென் றனனே. ௬௫

அநிதமான சொரூபப் பரவெளிக்கண்ணே அகந்தையழிவான தன்னிழப்புற்றதெனல்.

298. செம்மைப் படுமோ னசிவத் தொளியால்
பொய்ம்மைப் படமுப் புடியா னபுலம்
மெய்ம்மைப் படமிஞ் சுசொரு பவெளிக்
கெம்மைப் பறிபோ கவிழுந் தனமே. ருசு

சாக்ஷி சைதன்யமான சொரூபப்பதமல்லது மற்றெதுவுங் காண்கின்றிலேனெனல்.

299. எஞ்சிற் றெதனோ டுமியை பிலதாய்
நெஞ்சிற் கரியா கநிமிர்ந் தொளிரவ்
விஞ்சைப் பரமா னவியன் சொருபக்
கஞ்சப் பதமல் லதுகாண் கிலனே. ருஎ

அகம்பொருள் வாலறிவு வடிவாயினும் துவிதமின்மையாற் சுட்டறிவில்லையெனல்.

300. இறையும் பிறிதொன் றிலதா வகமே
நிறைவா யுலகோ நிழலாய் நிபிடச்
செறிவா னவகந் திகழ்கே வலவா
லறிவா யினுமெற் கறிவொன் றிலையே. ருஅ

சொரூப சுகானுபவம் துலங்க, உண்மையொளி வடிவான வுளத்தில் அகமே அகமாக நிலைத்ததெனல்.

301. சுகமே யியல்பா னசொரு பநிலை
மிகமே தகவா கவிளங் குவதால்
இகமே பரமா வியல்சி ரிதயத்
தகமே யகமா கவமைந் ததுவே. ருகூ

என்னகத்தே பிரசன்னமாக விளங்குகின்ற சுகசொரூபமான ஆண்டானருளால், 'அகமே அகம்' என்று அனுபவத்தா லறிந்து சகஜமாகச் சரிக்கின்றேனெனல்.

302. சுகமே வடிவாச் சுடர்வா னவனென்
னகமே முகமா வமைவுற் றெளிர்வான்
அகமே யகமென் றருளா லறிவுற்
றிகமே யியல்பா வியல்கின் றனனே. ௬௦

என் முடிமேல் அடிசூட்டியாண்ட குருபரனை இறைவன் சந்நிதியில், அவனருட்குடியாக, நான் மாட்சிமிக்க பெரும்பதம் பெற்றேனெனல்.

303. சிரசின் பததே சிகனும் பதிமும்
முரசங் கலிமுத் தமிழ்முன் றிலினவ்
வரசின் குடியா வருள்பெற் றடியேன்
பரசும் பெருமாண் பதமுற் றனனே. ௬௧

ஆண்டான் அருட்பொலிவாலே, சொரூப சைதன்யப் பிரகாசத்தில் உலகு தன்மயமாயிற்றெனல்.

304. முந்தைப் படுமோ கவிகற் பமறச்
சிந்தக் கிளர்தெய் வவருட் பொலிவால்
சொந்தப் பரமான் மசொரு பவொளிச்
சந்தத் தொருதன் மய*மாய்த் துலகே. ௬௨

பொய்யான அகந்தைமயக்கத்தைப் போக்கி என்னையாண்ட அறிவொளி வடிவான இறைவனது உண்மைவடிவமே என் உண்மை வடிவமெனல்.

305. அறியா வறிவை யறிவித் தருளிக்
கிறியா னவகங் கிருதிப் பிழையைப்
பறிபோ கவடர்த் தபரஞ் சுடர்மெய்க்
குறிபோன் முயிர்மெய்க் குறியா வதுவே. ௬௩

---

*ஆய்த்து - ஆயிற்று.

11. திருவருட்பேற்றால் அழிந்தவை—ஒழிந்தவை இவை எனல்

பரமான்ம சொரூப ஞானநுபவத்தால்,
அவித்யாமோக சம்சாரதுக்கம் அகன்றொழிந்ததெனல்.

306. ஓங்கும் பரமான் மசொரு பவொளிப்
பாங்குற் றபதாம் புய(ம்)நான் படிவுற்
றாங்குற் றசிவா னுபவக் களியால்
வாங்கிற் றுமயற் பிறவித் துயரே. ௬௬

நானெனல் அற்ற ஞானநுபவத்தில்
ஆவரணக்கலி அற்றொழிந்ததெனல்.

307. தடையா துமறத் தழைகின் றசிவத்
திடையா னெனலற் றியல்பா கவொளிர்
நடையாம் பரஞா னவிபூ தியிலென்
னுடையா வரணக் கலியோய்ந் ததுவே. ௬௭

உள்ளத்தி லுறுத்திய சொரூபவொளியால்
கள்ளமனம் கழிவுற்றதெனல்.

308. நெஞ்சத் துநிகழ்த் தியதன் னுருவாம்
விஞ்சைப் பரஞா னவிளக் கொளியால்
துஞ்சித் தொலைவுற் றதுசூ னியமாய்
வஞ்சப் படுமா யமனப் பிழையே. ௬௮

சிவானுபவக் கொள்ளையில்
ஜீவபோதக்குறை தீர்ந்தொழிந்ததெனல்.

309. கள்ளக் களிசேர்ந் தகருத் தழியப்
பள்ளப் பளிரென் றுபரங் கிளரத்
தெள்ளத் தெளிவா னசிவா னுபவக்
கொள்ளைக் கணுயிர்க் குறைதீர்ந் ததுவே. ௬௯

ஞானசித்தி நண்ணலால்
யோகசித்தி மோகம் ஒழிவுற்றதெனல்.

310. ஞானப் பரசித் தியைநண் ணுறுவோர்
ஏனைப் பிறசித் திகளெண் ணுவரோ
யானப் பரமா வியல்சித் திகிளர்ந்
தூனப் பிறமோ கமொழிந் ததுவே. சுஅ

12. திருவருட்பேற்றால் பெற்ற பேறுகள் இவை எனல்

மயக்கம் பொருந்திய நாத்திக வாழ்க்கை யொழிய,
ஆண்டான் சொரூபவொளி என் நெஞ்சில் நிரம்பிற்றெனல்.

311. வஞ்சம் படுபொய்ம் மயல்சே ரறிவா(ம்)
நஞ்சம் பொதிநாத் திகவாழ் வறவே
துஞ்சும் படிதன் சொருபத் தொளியென்
நெஞ்சம் படர்வுற் றுநிரம் பியதே. சுகூ

பேரின்பமழை பெய்யும் தருமமேகமான சமாதியில் சித்தம் கரைதலும், உயிர்வாழ்வு களிமயமான ஒளி மல்கிற்றெனல்.

312. கூரன் பரகங் குளிரத் தெளிவாய்ப்
பேரின் பமழைப் பெயல்பெய் தருமக்
காரன் பிலகங் கரையக் களிசேர்
வாரங் கிளர்வாழ் வொளிமல் கியதே. எ0

ஆண்டா னருளிய மௌனோபதேசத்தால் என்
இதயக்கிரந்தி பேதித்து உடலுயிர்கள் வெவ்வேறாக
வொழியப் பரமார்த்தவுண்மை வெளியாயிற்றெனல்.

313. கூறு வொருசொற் குறியா லெறிபட்
டீறு யிடவென் னிதயத் துமுடிச்
சூறு வுறுபொய் யுடலோ டுயிர்வெவ்
வேறு கலுமெய் வெளியா யினதே. எக

பிரியாநிலையில் உள்ளத்தே உடையானோடு ஒருமைப்பாடுற்றதால், இரண்டற்ற ஏகான்ம சொரூபத்தோடு இறுகச் சேர்ந்த உண்மைவாழ்வு உற்றதெனல்.

314. எனைவிட் டவனும் பிரியான் இயல்பாந்
தனைவிட் டிவனுந் தணவான் உளமா(ம்)
மனைவிட் டொழியா மரபால் ஒருமெய்த்
தனையொட் டியவாழ் வுதழி யினதே. எ௨

ஆண்டானருட்பெயலால் அடியேன் பிறவித் துயர்கெட, உள்ளத்தே முத்திப் பேரின்பவுணர்வு ஊறியதெனல்.

315. செயலற் றியல்சிட் டருளத் தொருதன்
னியல்பா கநிலைத் தொழுகின் பவருட்
பெயலா லடியேன் பிறவித் துயர்கெட்
டுயலா கவுளத் துணர்வூ றியதே. எ௩

சற்குருவாற்றிய சக்ஷுதிக்ஷையாற் சித்தந் தெளிதலாய், ஒரே தாரையாக உள்ளுணர்வூறிற்றெனல்.

316. நீர்மைப் படநெஞ் சினிலூன் றியதன்
கூர்மைப் படுநோக் கவருட் குறியால்
சீர்மைப் படுசித் தமிகத் தெளிவாய்
ஓர்மைப் படவுள் ளுணர்வூ றியதே. எ௪

ஸ்ரீரமணோபதேசமான ஒருமொழிப்பயனாக ஆணவமலம் அசத்தென்னும்படி யழிதலாலே, என் சொரூபம் தில்லைவெளியிற் சிவசொரூபமாகவே இதய வெளியில் விரைவில் விளங்கிற்றெனல்.

317. இல்லை யெனமாய்ந் திடவா ணவமோர்
சொல்லை ரமணன் சொனதன் பயனா
ஒல்லை யிதயத் தொளிரென் சொருபம்
தில்லை வெளியிற் சிவமா யினதே. எ௫

ஆண்டான் அருட்பிரசாதமான ஞானசூரியப் பிரகாசத்தால், சூனியமேபோலும் பரமார்த்தம் எனத் தோன்றிய மனமயக்கங்கெட்டு, உயிர் உஜ்ஜீவித்ததெனல்.

318. *சமனப் படுசாட் சிவிருத் திவிளை
ரமணப் பரமான் மரவிக் கதிரால்
அமணப் படுசூ னியமா னவெறும்
பிமணப் பிழைபேர்ந் துயிர்வாழ்ந் ததுவே. எசு

ஆசார்ய அநுக்ரஹமான அன்புமயத்தில் அளைந்து, மனம் சிவமயமான ஜீவியஞ் சேர்ந்ததெனல்.

319. மருளின் மயமா கமயங் குமனம்
தெருளின் மயமாத் திகழ்சற் குருதன்
அருளன் புமயத் திலளைந் துசிவப்
பொருளின் மயவாழ் வுபுணர்ந் ததுவே. எஎ

ஆண்டவன் கருணை கற்பனை கழியப் பனிரென்றெளிர்தலால், அகம் அளவற்ற அருட்பரவெளியாக நிரம்பிற்றெனல்.

320. களவில் வருகற் பனைகள் கழியப்
பிளவில் சொருபப் பெரியோன் சிறிதும்
பளகில் கருணை பனிரென் றெளிர்வால்
அளவில் வெளியா வகமார்ந் ததுவே. எஅ

சிற்பர சொரூபமே குருவாகத் தோன்றி ஆண்டுகொண்ட என்னகமே மெய்ப்பொருளாகத் தழைகின்றதெனல்.

321. வானே வடிவா வளர்சிற் பரமென்
னூனே யுயிரே யொழியா தொழியத்
தானே குருவாத் தகவாண் டவகந்
தானே பொருளாத் தழைகின் றதுவே. எகூ

***குறிப்பு:** *சமனப்படு சாட்சிவிருத்தி—ஜீவபோதச் சேஷ்டை வடிவான மனோவேகம் தணிவதற்கேதுவான சாக்ஷி விருத்தி. பிமணம்-பிரமணம்.*

பாச மயக்கமற்ற பரமார்த்தவுண்மை ஆண்டவனுக்கடிமைப் பட்ட வகத்தே விளங்கிற்றெனல்.

322. படிவப் பரவம் பலமா ரமணற்
கடிமைப் படலா னவகத் தருளால்
மடிமைப் படலா னமயக் கமெனும்
மிடிமைப் படர்தீர் மெய்விளங் கியதே. ௩௰

உடையா னருட்குறிப்பின்படி நானொழுகலால், மனக்கவலற்ற பிச்சைப்பெருவாழ்வு பிறங்கிற்றெனல்.

323. உச்சப் பரனென் னுடையா னருள்கூர்
இச்சைப் படிநேர் கெனநா னியலத்
துச்சக் கவலில் சுகஜீ வனமாம்
பிச்சைப் பெருவாழ் வுபிறங் கியதே. ௩௧

உள்ளத்தில் ஊனவகந்தையை யொழித்து, உணர்வுருவாக உண்மைப்பெருவாழ்வு உளதாயிற்றெனல்.

324. ஏக்குற் றுமடங் கிடவாக் குமனம்
மாக்குற் றவகந் தைமதிப் பிழைசெற்
றாக்குற் றுணர்வா கவுளங் கிளர்மெய்
யாக்கப் பெருவாழ் வளைவுற் றதுவே. ௩௨

சுவஸ்தநிலை யடைவித்த சொரூபத்தில் பரபக்தி தழைத்ததெனல்.

325. தன்னைத் தணவா தசுவத் தநிலை
நன்னர்த் தெளிவா கடக் கவகத்
தென்னைப் புணர்வித் தவியற் பரமாந்
தன்னிற் பரபத் திதழைத் ததுவே. ௩௩

நனுப்போலத் தோன்றும் கனமயக்கங் கழன்று,
உண்மைநனுவான துரிய சிவஞானனுபூதி துலங்கிற்றெனல்.

326. கருவிற் சுழல்கின் றகன மயல்போய்
வெருவற் றபரத் துறைமெய்ம் மைநனுத்
திருவுற் றசிவப் பெருவாழ் வொளிசேர்
சொருபத் தனுபூ திதுலங் கியதே. ௮௬

மனம் ஆன்மசொரூபத்தில் அமிழ்ந்து,
அவிரோத ஞானனுபவ வாழ்க்கை அளவுற்றதெனல்.

327. கவிகா ரிருள்சூழ் கனவே நனவா
விவகா ரமனப் பிழைசேர் வெறிவிட்
டவிகா ரசொரு பவகத் திலமிழ்ந்
தவிரோ தமெய்வாழ் வளவுற் றதுவே. ௮௫

சற்குருவான சதாசிவன் புண்டரீகபுரமான புத்தியிற் புக்குச்
சுடர்விட்டொளிர்தலால், ஆன்ம சொரூபம் அற்புதமாக
விளங்கலாயிற்றெனல்.

328. சிந்தைப் பரியூர்ந் துசதா சிவனென்
புந்திப் புரிபுக் கவருட் பொலிவால்
சொந்தப் பரமார்த் தசொரு பவகம்
விந்தைப் படநன் குவிளங் கியதே. ௮௯

ஆருயிரை ஆன்மசொரூபநிழல் அடைவிக்கின்ற ஆண்டானது
சிங்முத்திரையால், அகத்தே தாபந் தணியக் கெடுக்கின்ற
சாந்தி தழைத்ததெனல்.

329. நீடும் பரமான் மசொரு பநிழல்
கூடும் படிகாட் டியசிற் குறியால்
வாடும் பரிதா பவறட் சியறச்
சாடும் பதசாந் திதழைத் ததுவே. ௮௭

பரசிவ பத்தியாற் பசுபாசப் பற்றறலால்,
உள்ளம் அசஞ்சல சாந்தி அடைந்ததெனல்.

330. அசையா தவருட் பரமா னசிவப்
பசையாற் பசுபா சமயற் பசைபோய்
விசையா மலயல் விடயத் திலுளம்
திசையா துபசாந் திசெறிந் ததுவே. ௩௰

குருவருட் பிரசாதத்தாற் குளிர்ந்து, மனம்
உபசாந்தியுற்றதெனல்.

331. கொட்புற் றகுராக் குமனம் குரவோன்
பெட்புற் றவருட் பிரசா தமருந்
துட்புக் கதுமற் புதமோ தவொணுத்
தட்புற் றுபசாந் திதழைத் ததுவே. ௩௧

13. உலகோர்க்கிரங்கல்

ஐம்புல வசப்பட்ட மனத்தால் ஆடம்பரமான அகந்தை வாழ்வை அவாவுற்றோர், மோகவசப்பட்டு, சாசுவத மான முத்திப்பரவாழ்வை மறந்தொழிந்தோராவரெனல்.

332. ஓடும் புலனோ டுறவாய் உலகத்
தாடம் பரவாழ் வையவா வுறுவோர்
மூடும் புலைமோ கவசத் தினராய்
நீடும் பரவாழ் வைநினைந் திலரே. ௩௨

சிற்சொரூபத்தே சுகித்தலின்றி
மாயப்பிரபஞ்ச விஷயங்களில் மகிழ்ச்சிகொள்வோர்
மயக்கவறிவாற் பிறந்திறந்து குலைகின்றனரெனல்.

333. அறிவா முருவூ டகமின் புறலற்
றுறவா விடயத் துவகை கொளுவோர்
மறவா நினையா மருள்சே ரறிவாற்
பிறவா விறவாப் பிதிர்கின் றனரே. ௩௩

அறிவைப் பறிகொடுத்து, காமதேனுவைப் போன்ற சுக சொரூபத்தை மறந்து பிரிந்து, வறட்சியான உலக விஷயங்களில் அறவைப் பிணமாக அழிந்தொழிதல் அந்தோ என்ன மடமையெனல்.

334. அறிவைப் பறிபோய் அருளா ரமுதக்
கறவைப் பசுவாங் கனசிற் சொருபத்
துறவைப் பிறிவுற் றுலகப் புலனூ
டறவைப் பிணமா வழிவென் மடமே. ௩௩௪

வெறும்புலத் தோற்றத்தை மெய்யாகப் பற்றி யுழல்வதனுல் உள்ளத்திலுள்ள உண்மைப்பொருளைப் பறிபோக விழத்தல் பரிதாபமெனல்.

335. கள்ளப் புலனு யகனு வுலகை
உள்ளிப் பொருளா கவுழல் வதனுல்
உள்ளத் துளலற் றுளவைப் பதனை
எள்ளிப் பறிபோ கவிழப் பதுவே. ௩௩௫

14. உலகோர்க்குபதேசம்

மெய்ஞ்ஞான விசாரம்

336. *உடல்யா னெனுமவ் வுணர்வே உளமேற்
படர்பல் லுணர்வுந் தொடரும் மொருநாள்
உடல்யா னுணர்வுக் குதயத் தலமெவ்
விடமென் றிதயத் தடைதல் விதியே. ௩௩௬

---

* இந்தப் பாடலும் அடுத்த பாடலும், பகவா னருளிய "ஊனு ருடலிதுவே" என்னும் ஆன்ம வித்தைக் கீர்த்தனச் சரணத்தோ டொப்பிட்டுணரத் தக்கன.

அவ் விசாரத்தால் உள்ளத்தில் உண்மையுணர்வு உதிக்குமெனல்.

337. இதயத் தடைவா லுணர்வெல் லவையும்
சிதர்வுற் றிடவவ் விதயக் குகையு
டதர்வச் சிகையா கவகம் மகமென்
றுதயச் சுடர்போ லுறு(ம்)மெய் யுணர்வே. ௬௩௭

வாசனலக்ஷணங் கூறல்

338. மதுகண் டுமடுக் குறுவண் டெனமுன்
எதுகண் டிடிலெண் ணமிலா மலெழுந்
ததுதன் மயமா வெதிர்பா யுமவா
இதுகாண் பழவா தனையென் பதுவே. ௬௩௮

சுத்தான்ம சொரூப மாட்சி

339. ஒருமைப் படவுத் தமருள் ளதனில்
மருமத் தொளிர்மந் தணசற் குருவாய்
இருமைக் கிடமின் மெயிலக் குவதவ்
வருமைப் பரதெய் வவகம் பொருளே. ௬௩௯

பரமார்த்த சொரூபம் பாவனாதீத மாதலால், உள்ளத்திற் சும்மா வுறைதலே ஞானநிலையா மெனல்.

340. உள்ளும் பரிசன் றெனவோர்ந் துணர்வால்
கள்ளம் படுபா வனையா னகழன்
றுள்ளந் தனிலூன் றியுறைத் திடலே
தெள்ளும் பரஞா னநிலைத் திறனே. ௬௪௰

ததேகத் தியான நிஷ்டாநுபூதியே சதாசிவ பதமாமெனல்.

341. குறியா துகுறிக் கொடுதன் னுருவாம்
அறிவா கவகத் துநிலைத் துமனம்
பிறியா துறைதல் பிர(ம்)மா னுபவச்
செறிவா னசதா சிவமாப் பதமே. ௬௯

நேதி களைந்தபின் அறிவுருவாக மிஞ்சும் அகம்பதார்த்தமே பரமார்த்த தத்துவமெனல்.

342. கதுவுண் டவெலாங் கவனித் தறிவால்
இதுவன் றிதுவன் றெனநீக் கியபின்
எதுவொன் றரிதெஞ் சிடுமவ் விதயப்
பொதுவொன் றகமெய்ப் பொருடத் துவமே. ௧௦௦

அகந்தையற்று ரகத்தே சுயானுபவமாகச் சுடரும் சொரூபம், அயலவர்க்குத் தீண்டவொண்ணாத் திருமேனி யெனல்.

343. பூண்டோ டுமகந் தைமதிப் புலைபோய்
மாண்டார் மருமத் தொருதன் மயமாய்த்
தூண்டா துசுடர் சொருபம் பிறராற்
றீண்டாத் திருமே னிதிளைத் திடவே. ௧௦௧

மனம் வாசனாக்ஷயத்தால் அசஞ்சலசாந்தி யடைந்து சுத்தான்ம சொரூபமாக நிலைக்கப்பெறலே நிஜசித்தி யெனல்.

344. உலைக்குற் றவுடல் லுலகோ டுணர்பல்
கலைக்கற் றைகளா னகடும் புயலால்
அலைக்கப் படலற் றக(ம்)மெய் யகமாய்
நிலைக்கப் பெறல்கா ணிஜசித் தியிறே. ௧௦௨

உடலே நானென்று உள்ளத்தினின்று கிளம்புகின்ற அகந்தை அழிந்தொழிதலே, மனமயக்க மற்ற உண்மைப் பரவொளி வாழ்க்கையெனல்.

345. **ஊ**னென் றுடலின் வடிவே யளவே
யானென் றெழுகந் தையிறந் திடலே
மானென் றுமனப் பிரமா தமகல்
வானென் றுமொளிப் பரவாழ்க் கையிறே. ௩௪௫

உடல்உயிர் முதலான எண்ணமனைத்தும் இறந்தொழியப்பெற்ற இதயத்தில் இயல்பாக விளைகின்ற சிவானந்தத்தெளிவே, பரவெளியாகப் பரந்த மவுனப் பதமெனல்.

346. **ஊ**னற் றுயிரற் றுணர்வற் றுளமற்
றியானற் றெனதற் றிதயத் தியல்பாய்த்
தேனைத் தசுவைத் தெளிவாம் விளைவே
வானத் துருவா(ம்) மவுனப் பதமே. ௩௪௬

'அருள்' முதலாக 'மலிவு' ஈறாக, ஈங்கு எடுத்துரைக்கப்பட்டன யாவும், அகந்தைமனக் குற்றமற்ற அம் மவுனப் பதத்தையே குறிப்பனவாமெனல்.

347. **அ**ருளே யமுதே யகமே சுகமே
தெருளே திருவே சிவமே தவமே
பொருளே புணர்வே பொலிவே மலிவே
மருளே தமிலா மவுனப் பதமே. ௩௪௭

உலகு, அறிவுருவான சிவத்திற்கு அயலாகத் தெரிவதன் காரணம், அகமுகமாய்த் தவத்திற் படராது பகிர்முகமாய்க் கற்பனையிற் பட்டுக் கலங்குகின்ற சுட்டறிவாமெனல்.

348. **ப**வத்திற் கிடனுப் படர்கற் பனையூ
டவத்திற் படர்சுட் டறிவுண் முகமாய்த்
தவத்திற் படராத் தவரும் உலகு
சிவத்திற் கயலாத் தெரிகிற் பதுவே. ௩௪௮

அகிலங்களும், மிகநுண்ணிதாய்க்
குறிகுணம் முதலிய யாவுந் தீர்ந்த சுத்தஞான
சொரூபமான சிவமயமாமெனல்.

349. குறியொன் றுமறக் குணமொன் றுமறப்
பிறிதொன் றுமறப் பிழைபட் டொழியச்
செறிவொன் றுமகண் டசிவச் சிறுவா
லறிவொன் றுருவாம் அகிலங் களுமே. கὁஎ

உயிருக்குயிரென்றும் அறிவுக்கறிவென்றும்
உரைக்கப்படும் அவ்வுயிரும் அறிவுமே உண்மையில்
அன்னவையாக, அவற்றிற் பிறவான உயிரும் அறிவுமோ
உண்மையில் உடலும் மடமுமே யாமெனல்.

350. உயிருக் குயிரென் றுரைசெய் திடுமவ்
வுயிரே யுயிரா உடலாம் பிறிதோ
மயர்சே ரறிவோ மயலாம் அதனுள்
ளியல்வா லறிவே யறிவா மெனவே. கὁஅ

ஆங்காங்கும் ஏற்றத்தாழ்வோடு பலதிறப்பட்டாற்போலக்
காணப்படினும், சர்வாத்மாவான சிவன் சிற்பராசத்தி
விலாசம் இடையீடில்லாது சர்வ வியாபகமெனல்.

351. எங்கெங் குமனங் கவரேற் றமிகப்
பொங்குந் திருவின் பொலிவங் கதிகந்
தங்கும் பரிசாத் தகுமென் னினுமெங்
கெங்கெங் கு(ம்)நிறை வதிறை யொளியே. கὁகூ

அபரோக்ஷ ஞானமான ஆன்மநிஷ்டையே
ஸர்வப் பிராயச்சித்தமெனல்.

352. வழுவாய் பொழுதிற் கழுவா யுயிருக்
கெழுதா மறையா மிதயப் பொருளே
வழுவார்க் கெனுமான் மவிசா ரணையாற்
றழுவா நழுவா துதரித் திடலே. ககὁ

சிவலிங்க சொரூபமான ஜீவனது பரமார்த்தந் தேருது பாவிகளாகத் தம்மை நிந்தித்துக்கொண் டழுங்கலே சிவாபராதம் போலு மெனல்.

353. சிவலிங் கமெனப் படுஜீ வனைநான்
எவனென் றிதயம் புகு(ம்)நுண் ணறிவாற்
கவனங் கொடுகாண் கலர்பா விகள்போல்
அவலங் கொடழுங் கலறத் தவறே. கசங

ஆண்டவனை பரமேசுவரன்பாதம் அன்புடை யடியரால் அறியப்படு மாயினும், அறிபடல் அவர்தம் பாவனையின் வண்ணமாமெனல்.

354. உளதென் பவருக் குளதா மொளியாய்
இலதென் பவருக் கிலதா மிருளாய்
உளலற் றுளவொண் கழலுள் குறுவார்
உளலின் படிகா ணுணரப் படலே. கசஉ

மெய்யன்பரகத்திற் புதிதுபோல விளங்கும் பேரின்பப்பத வாழ்வு சுத்தசைதன்ய சொரூபமாக, என்றுமுள்ள சுபாவமேயெனல்.

355. மறவா துநினைந் துவணங் கிவழுத்
துறவா னதொழும் பருளத் தொளிரும்
பிறவா விறவாப் பெருமாண் பதவாழ்
வறிவா னசொரு பவகத் தியல்பே. கசரு

கதியறியாமற் கர்மமே பரமாகக் கலங்கினோர் பின்னர் உண்மையுணர்ச்சியால் இறைவனோடு இரண்டறக் கலத்தலான பேரின்ப வாழ்வு உபசாந்தமேயெனல்.

356. கருமத் துவழிக் கணிழந் துலகத்
தெருமத் தியினின் றுதிகைப் பவர்மெய்த்
தருமத் தொளியாற் றனையோர்ந் துதெளிந்
தொருமைப் படுவாழ் வுபசாந் தமிறே. கசச

சுத்தான்ம சொரூபம் பளிச்சிட்டொளிர, காணுரென நாடும் ஞானவிசாரணையே குரு சீடர்க்கு உணர்த்தும் உபதேசமுறையெனல்.

357. உளங்கொள் ளவுணர்த் துபதே சமுறை
பளிங்கின் னொளிபோன் றுபளிச் செனமெய்
விளங்கச் செயுளத் துவிசா ரணைகாண்
களங்கப் படகங் கரனு ரெனவே. ௧௧௫

அறிவுக்கறிவான சுத்தான்ம சொரூபப் பிரம்மத்தில் அறிவைச் செறிவித்தலே, பிரம்மஸாக்ஷாத்காரம் பெறுமுபாயமெனல்.

358. அறிவுக் கொளிதங் தகமென் றதனுட்
பிறிவற் றொளிரும் பிர(ம்)மப் பொருளின்
மறியத் தனகத் துமடக் கியதைச்
செறிவித் தல்சிவப் படுமெய்த் திறமே. ௧௧௬

புத்தி இதயத்திற்சேர்ந்து சும்மாவிருத்தலே சொரூபஞான சாதனையெனல்.

359. அயலற் றதனைத் தனினின் றயல்போல்
மயலுற் றுமதிக் குமனத் துமதிச்
செயலற் றிதயஞ் செறிவே சொருபத்
தியல்கற் றிடலன் றிமதிப் பலவே. ௧௧௭

அகந்தைமுனைப் பகன்றொழிதலே ஆற்றக்கடவ சாதனையெனல்.

360. சதியா னவகந் தைமுனைப் பறலால்
எதுவும் *பதிபந் தகமற் றியல்பாய்
அதுவே யவிர்தற் கவகா சமளிப்
பதுவே புரிசா தனைமற் றலவே. ௧௧௮

---

* பதிபந்தகம் - பிரதிபந்தம்.

தன்னை அகத்தே முழுக்குவதான அந்தப் பூஜையே பூரண நிலைக்கான நேர்வழியெனல்.

361. சூறைவெண் ணமுளங் குறுகா விதுவே
நிறைவெண் ணுமவர்க் குறு(ம்)நேர் வழியாம்
இறைகண் ணுதலுக் கியல்பூ சனையின்
முறைதன் னையுளத் துமுழுக் குதலே. ௩௬௧

சுத்தான்ம சொரூபத்தை உழுவலன்போடு கூடிய அருளறிவால் உள்ளத்தே யாராய்ந்தறிதலே, மாருதவுண்மைக் கடவுள் நிலையாமெனல்.

362. உழுவற் பழமைப் யுரிமை யொடுளம்
கெழுமக் கிளர்தன் னருளாந் தெருளாற்
றழுவிற் றணவா வொருதன் மயமாம்
கழுமற் கடவுட் கனமெய்ந் நிலையே. ௩௬௨

விசாரணையால் விளங்கும் சுத்தான்ம சொரூபம் பிரபஞ்சலயத்தில் மிஞ்சும் பிரம்மமேயெனல்.

363. விஞ்சைப் படுமான் மவிசா ரணையால்
நெஞ்சத் தியல்பா கநிகழ் சொருபம்
வஞ்சப் படுமிம் மகி*மாய்ந் துழிதான்
மிஞ்சும் பரமா னவிழுப் பொருளே. ௩௬௩

யோகசாதனையாற் கர்த்தத்துவ புத்தியை யொழித்தலே சாதகர் செய்யக்கடவதான முதற்கடமை யெனல்.

364. ஒருத்தர்க் குளதா னமுதற் கடனுப்
பொருத்துங் கனபோ தனைகேள் மனனே
கருத்தத் துவமா னகருத் தழியத்
திருத்தும் பரயோ கதியா னமதே. ௩௬௪

---

*மாய்தல் - மறைதல்.

உள்ளுறையும் உண்மைப் பொருளைத்
திட்பம்படத் தேர்தலே உயிர்க்கு உறுதிபயப்பதாமெனல்.

365. நிலையில் லதனை நிலையென் றுணரிற்
குலைவல் லதுளங் குணமொன் றுமிலை
உலைவில் பொருளா வுயிருள் ளுறையும்
தொலைவில் சொருபந் துணிதல் குணமே. கஉரு

விசாரணையால் உள்ளத்தொளிர்கின்ற
சுத்தான்ம சொரூபத்தை அபரோக்ஷமாகப் பார்ப்பவரே
உண்மையிற் பார்ப்பாரும், மற்றோர் தூராத வயிற்றுக்
குழியைத் தூர்க்க வீணுக்கு உழைக்குந் தொழிலாளிகளுமே
யாமெனல்.

366. ஓர்க்கின் றவுளத் தொளிர்தன் சொருபம்
பார்க்கின் றவர்பார்ப் பனர்மற் றயலார்
ஊக்கந் தளரா மலுழைத் துதரந்
தூர்க்கின் றவவத் தொழில்வாழ் வினரே. கஉசா

அனுபவஞானமுள்ள ஆன்றோர்பால் ஆராய்ந்து
வைராக்கியத்தோடு உள்ளத்தி லொடுங்கிப்
பிரம்மபதம் பெறுதற்குரியதெனல்.

367. பிறிதிற் கவனம் பிறியத் திகழ்மெய்
யறிவுக் குறிசே ரவரைக் குறுகிச்
செறிவுக் குநெறித் திறனோர்ந் திதயத்
துறுதற் குரிதா முயர்மெய்ப் பதமே. கஉரு

உரையுணர்வு ஒடுங்கின வுள்ளம்
தானே பரதத்துவமாய் அமுதானுபவம் தேக்குமெனல்.

368. போக்கும் வரவும் புணர்வும் பிரியத்
தாக்கும் புரணப் பரதத் துவமாய்
வாக்கும் மனமும் மறிவுற் றவுளம்
தேக்கும் பரவா னமுதத் தெளிவே. கஉசா

அவிச்சைவடிவான அகங்காரவாசனை அழிந்தொழிந்தவகத்தே
முயற்சியற்ற மோனானுபவம் மூண்டெழுமெனல்.

369. கயமா னவுடற் களிசே ரகமாய்
மயல்சேர் தருவா தனைமாய்ந் தொழியின்
முயல்போ யறுமோ னசிவா னுபவத்
தியல்வாழ் விதயத் துவிசைத் தெழுமே. கஉஎ

புலன்வழிப்பட்ட மயக்கமனம் துன்பப் பிறப்பிற் சுழல்வதாக,
உண்மையுணர்ச்சியுற்ற உள்ளம் தத்துவங்கடந்த
சிற்பரமாகத் தங்குமெனல்.

370. இடர்மண் டுபிறப் பினிடைச் சுழலும்
மடமண் டுபுலத் துமயங் குமனம்
திடவுண் மையுணர்ச் சிதிகழ்ந் தவுளம்
கடவுண் மயமாங் கனசிற் பரமே. கஉஅ

மனம் தன்னைவிட்டு அயற்புலஞ் சுட்டலாற் காணப்படும்
பலதிறப்பட்ட அறிவான அறியாமையை உண்மையில்
அறிவென்றே மயங்குமளவும் ஆணவநோய் ஒழியாதெனல்.

371. மறியா மலுளத் துமனம் புறமாங்
கிறியா லெதிர்காண் கிறபல் லறிவாம்
அறியா மையைநல் லறிவென் றுமயங்
குறிலா ணவநோ யொழிவெங் ஙனமே. கஉகூ

பல்வகைத் துன்பமும் ஒருங்கு பறிபோக
ஞானவரம்பாக நண்ணும் மோனச் செழும்பதம்,
சொல் வக்கணையால் விளக்கவொண்ணுதெனல்.

372. பல்விக் கினமும் பறிபோக் குறுமெய்க்
கல்விக் கரையாங் கனமோ னவருட்
செல்வத் திருவோங் குசெழும் பதமோ
சொல்வக் கணையாற் சொலவொண் ணுவதே. கங

ஆசைப்பாடுற்ற நெஞ்சம் நிலையற்ற அவ்வவ் வாசைப் பொருளிடமாகச் சலித்து வருந்தலின், இதயத்தே சொரூபாநுபூதி யடைந்தா லல்லது, ஜீவர்க்குச் சித்தோபசாந்தி சேர வொண்ணாதெனல்.

373. எதன்பா லெவர்நெஞ் சிளகப் பெறுமோ
அதன்பா லவர்நெஞ் சசைவுற் றிடுமால்
இதம்பா டுறலோ விதயப் பொருளாம்
அதன்பா லனுபூ தியடைந் திடிலே. ௩௭௩

ஆய்ந்தறிந்தா ரகத்தில் அறிவின்பமாக அண்ணிக்கின்ற ஆண்டா னருட்சேவடியை உள்ளியுருகாதா ருள்ளம் உள்ளமன்றெனல்.

374. எண்ணித் தெளிவா ரிதயத் துணர்வா
அண்ணித் திடுசே வடியே நினைவா
நண்ணித் தவஞா னநடை யொளிர்வுற்
றுண்ணெக் குருகா ருளமென் னுளமே. ௩௭௪

மெய்யன்பு கலந்த தியானமே ஆண்டானருளை யடைவிப்பதன்றி, அது கலவாத வெறுங் காயிகத்தொண்டு பயனின்றாமெனல்.

375. பூண்டார் வமுறப் புரிபூ சனையே
ஆண்டா னருளை யடைவிப் பதலால்
வேண்டா தவிருப் பொடுசெய் வழிபா
டீண்டா யிரமா யினுமென் பயனே. ௩௭௫

கேவலப் பரம்பொருளே சொரூபத்தியல்பு என்று, விசாரணையாலுண்டான அநுபவத்தாற் றுணிந்த முனி துவிதபயம் இலனாமெனல்.

376. தூருவுற் றிதயந் துருசோ தனையால்
சருவத் திலுமிக் கதனிப் பரமே
சொருபத் தியல்பென் றுதுணிந் தமுனி
வெருவற் கிலன்மற் றொருவேற் றுமையே. ௩௭௬

சைதன்ய சொரூபத்துக்கு ஊனுய்த் தன்மயமாயிடினல்லது, அது மதிகொண்டுமட்டில் அறிந்தடைய முடியாதெனல்.

377. தானு வொளிர்தற் பரமா னதனக்
கூனு வொழிவுற் ருெருதன் மயமாய்ப்
போனு லொழியப் புலமோர் மதியாற்
ருனு னதனைத் தழுவத் தகுமே. கா௫

விவாதிக்கும் வினைமுதலான 'நான் யார்' என்று ஆய்தலுறின், அவ் விவாதம் அறக் கெடுமெனல்.

378. வினுவுற் றவினை முதல்யா னெவன்மற்
றெனுதுற் பவமெங் கெனவுண் முகமாய்த்
தனுதுண் மைதலைப் படவா யலுறின்
வினுவுற் றவிவா தமறக் கெடுமே. கா௬

எவற்றிலுமொப்ப உண்மைப் பொருளை யுணர்ந்து சுவஸ்தநிலைபெற்ற தத்துவஞானிக்கு, தன் சொரூபத்தில் விவர்த்தமாகவே இவ்வுலகு தோற்றுவதாமெனல்.

379. எவற்றின் கணுமெய் யினையொப் பவெவன்
தவத்தின் பயனுத் தரிசித் தனனே
சுவத்தம் பெறுதத் துவஞா னிதனில்
விவர்த்தம் படமே விடுமிவ் வுலகே. கா௭

நாமரூப மாத்திரமாக நின்றே, ஆவரணவிருளில் உண்மைபோலச் சுழல்கின்ற கற்பனைகள், சிற்சுகானுபவமான சாந்தநிலையிற் சின்மாத்திரமாகத் தெரிவனவாம் எனல்.

380. அன்மாத் திரவா வரணத் திலுருச்
சொன்மாத் திரமாச் சுழல்கற் பனைகள்
சின்மாத் திரமாத் திகழ்கிற் பசிவந்
தன்மாத் திரமாத் தவழ்சாந் தியிலே. கா௮

இம்மை மறுமை முதலான எல்லா இருமைக் கற்பனைகளும் ஒருங்கொழிய, எம்மையிலும் ஒத்த ஒருமையான உண்மைப் பொருளாக விளங்குவது சிற்பரச் செம்பொருளான சிவசொருபமொன்றே யெனல்.

381. **இ**ம்மை மறுமை யெனுமவ் விருமைப்
பொய்ம்மை யுறுகற் பனைபொன் றிடவே
எம்மை யிலுமெய் யொருமை யிதுகாண்
செம்மை யுறுசிற் பரமாஞ் சிவமே. கஙஅ

ஆண்டானருளான துரீயஞானுனுபவம் அகண்டமாக வளைதலும், கற்பனு ஜாக்ரஸ்வப்நசுழுப்திகளான புரத்திரயம் பொடியாகப் பொன்றலால், அந்தத்துரீயமே அதீதமாயிற்றெனல்.

382. **பி**ரியா துபுணர்ந் தபிரா னருளாம்
துரியா னுபவச் சுடர்சூழ் தலு(ம்)முப்
புரியா னவைபொன் றவெறும் பொடியா
அரிதா னவதீ தமதா யினதே. கசo

ஆன்ம சொரூபமான இறைவன் 'நான்' என்பதே தன்னியற்பெயராக உயிர்தோறும் உறைந்தொளிர்தலால், அதுவே மந்திரமாக உருவெண்ணினும், அவ்வெண்ணமே அவ் வான்ம சொரூபம் விளங்கும் உள்ளத்தில் மனத்தைக் கொண்டு சேர்க்குமெனல்.

383. **யா**னென் பதுதன் னதியற் பெயரா
ஊனென் றுயிர்தோ றுமுறைந் தொளிர்வான்
யானென் றுருவெண் ணினுமந் திரமாத்
தானென் றுமுளத் தவிசுய்த் திடுமே. கசக

விசாரத்தால் விளங்கும் ஆன்மானுபவக் கிளர்ச்சியால் மனம் உபசாந்தமுறுமெனல்.

384. பளிரென் றுவிசா ரவகம் பரமாக்
கிளரும் புரணக் கெழுமல் லெழலால்
தளரும் பரிதா பமனந் தணிவுற்
றுளமோன் றுபசாந் தியிலாழ் வுறுமே. கசஉ

ஆண்டானைப் பொதுநீக்கி நினையும்பொழுது, அவன் அருள் விளக்கத்தால் அடியரகத்திற் பரகதி தானாக விளங்குமெனல்.

385. கதிநோக் குகருத் தினராய் அடியார்
பொதுநீக் கிநினை பொழுதிற் றனையே
பதிநோக் கருள்பாய்ந் திடலால் இதயத்
திதுநோக் குதியென் றெதிருங் கதியே. கசங

உலகம் ஜடமதிகளுக்கு இடமாகவும் பௌதிகமாகவும் தோன்றுநின்றே, இதயத்தில் இருந்தொளிர்கின்ற சொரூப நிஷ்டாபரரான ஞானிகளுக்கு, அசைபடக்காட்சியில் ஆதாரத் திரைபோன்ற அவ் வான்மசொரூபமேயாக விளங்குமெனல்.

386. சடமாஞ் சடலச் சதிசேர் மதியர்க்
கிடமாய் உலகோ வியல்பௌ திகமாம்
படமாஞ் சொருபப் பரமோர்ந் திதயத்
திடமா நிகழ்கண் ணிமையோர்க் ககமே. கசச

அநான்ம வகந்தையை இதயத்தினின்று எற்றிவிடில் உண்மைநனுவான சுத்தாவஸ்தை இயல்பாகவுற, உன் பரமார்த்த சொரூபம் பளீரென விளங்குமெனல்.

387. அனியப் படநான் மவகந் தையையின்
னினியொக் கவகற் றினுளத் தியல்பா
நனியொத் தவகண் டநனு வுறநின்
றனியற் பரமார்த் தமொளிர் தருமே. கசரு

மயக்கவகந்தை மடிந்தொழிந்தாலே, உள்ளத்தில் உண்மையான உபசாந்தவுணர் வுதிக்குமெனல்.

388. இருவா தனையற் றியல்சாந் தவுணர்
வொருவா திதயத் தொளிரப் பெறுதல்
குருவா வொளிருங் குணநல் லடியிற்
கருவா னமயக் கவகங் கெடிலே. கசகூ

வேள்விகளிற் பெய்யப்படும் பூரணாகுதிகளுள், ஆன்ம ஸமர்ப்பணமே, அரனார் மகிழ்வதாகத் தலைசிறந்ததாமெனல்.

389. தேற்றத் தொடுதேர் சிவனார் மகிழச்
சாற்றப் படுசாத் திரவேள் விகளில்
போற்றத் தகுபூ ரணவா குதிநன்
காற்றப் படுமான் மசமர்ப் பணமே. கசஎ

அதன்பின் ஆற்றக்கடவதொன்றும் இல்லாமையால், அதனை ஆற்றியவர் உண்மையில் பூரண கிருதகிருத்தியரா மெனல்.

390. அவ்வொன் றனையாற் றியவர் தருமத்
தொவ்வொன் றுமுனாற் றிமுடித் தவர்காண்
எவ்வொன் றினுமேற் றமிதன் பெருமைக்
கிவ்வொன் றுபிறென் றுமிலா ததுவே. கசஅ

சிவபோதத்தாற் சீவபோதங்கெட்ட உள்ளத்திலுறைதல், இந்திரபோகத்தினும் மிகப் பேரின்பம் பயப்பதாமெனல்.

391. தியானச் செழுஞா னசிவாக் கினிசேர்ந்
தியானென் னுமுணர் வெரியும் முளமாம்
மயானத் துறுவாழ் வுமகேந் திரனார்
உயானத் திலுமிக் குவகை தருமே. கசகூ

ஜீவபோதச் சேஷ்டை யழிந்த நிலையில், அத்துவிதசொரூபம் தன்னிற்றானகத் தழைத்தொளிருமெனல்.

392. ஊகத் தினிலெட் டவொணா துயிரோ
டேகப் பதமா கவியல் சொருபம்
மோகத் துணர்வா னவகந் தைமுனைப்
போயச் சுடர்விட் டொளிருந் தனிலே. கருo

துரியமே அதீதமான ஏகான்ம சொரூபத்தில் துவிதமின்மையால், அதுவே துளக்கமற்ற துருவப்பதமாகச் சுடர்கின்றதெனல்.

393. துருவச் சுடர்தன் சொருபத் துரியத்
திருவத் துவிலா வியல்பால் அதுதான்
வெருவற் கிடமற் றுவிளங் குமொரே
துருவப் பதமாச் சுடர்கின் றதுவே. கருக

அதீதரான சகஜநிஷ்டர்க்கு அடியராகத் தொண்டுபட் டொழுகல் சாதகர்க்குச் சால்புடைத்தாமெனல்.

394. துரியச் சுடரா னசுவச் சொருபம்
பிரிவற் றியல்பாப் பிறவற் றினிலும்
விரிவுற் றுவிளங் குவியன் சகஜப்
பெரியர்க் கடிமைப் படல்பெட் புறவே. கருஉ

குறையற்ற குருபதமாக இதயவெளியில் நிராமயம் நிறைவுற்றதெனல்.

395. பிறிதொன் றுமறப் பெறுசித் தளவாச்
செறிவொன் றியசித் தவருள் வெளியிற்
குறையின் றியமௌ னகுருப் பதமாய்
நிறைகின் றதுகாண் கநிரா மயமே. கருங

விசாரணையில் சித்தத்துரு சித்துருவாகவே முடிதலால், அந்நிலையில் பேதஞானத்துக் கிடமின்றாகப் பரமோனம் விளையுமெனல்.

396. **சி**த்தத் துருயா தெனவே தெரியிற்
சித்தத் துருசித் துருவா முடியும்
சுத்தத் தெளிவா னசொரு பவியன்
முத்திப் பரமோ ன(ம்)முயங் குறுமே. கருச

ஆன்மானுபவ முண்டாக அபவாத விசார ஞானமளித்த ஆண்டா னருட்சிந்தை என்று மகலா தெனல்.

397. **ப**வவா தனைமாய்ந் துபடப் பரதத்
துவபா சதுரீ யசிவோ கமெனு
அபவா தவிசா ரணைநன் கருள்செய்
உபகா ரியுணர் வொழியா துளமே. கருரு

அகத்தே முளைத்த வகந்தையை இதசத்துருவாக வெண்ணி, அதனைப் பூண்டோ டகழ்ந்தெறிய வேண்டுமெனல்.

398. **ஆ**லத் தைநிகர்ப் பவகந் தையுரு
மூலத் தவரு கமுளைத் ததனைத்
தாலத் திலுனக் கிதசத் துருவா
ஏலப் படுபூண் டொடுகீண் டெறியே. கருசா

ஆன்மசொரூப ஸ்ச்சித்தான தனக்கு அயலாக அறியப்படுவதெதுவும் அநிருதஜடமாகத்தேறி, அதனைக் கடிந்தொழியெனல்.

399. **அ**றிவா யதனு லறியப் படுமெப்
பிறிதுஞ் சடமாய்ப் பிழைபட் டொழியும்
அறிவே பிறியா வகமெய்ப் பொருளேற்
பிறிதோ பிறிதாம் பொயெனப் பிறியே. கருள

எனவே, உடலும் மடமுமன்றி மெய்யான உயிரும் அறிவுமே 'நான்' ஆகலின், அவற்றுக் கயலான உடலாமுயிரும் மடமாமறிவும் உண்மையில் தன்னுரு அன்றான உடலும் மடமுமாகவே தீர்ந்தொழிகவெனல்.

400. உடலோ வகமன் றுயிர்நா னெனிலவ்
வுடலா முயிரை யுடலென் றெழியாய்
மடமா மறிவை மடமென் றெழியாய்
மடமன் றக(ம்)மற் றறிவா மெனிலே. கருஅ

இதயத்தில் எண்ணமற்று இயல்பாக இருந்தொளிருந்தன்னை எண்ணத்தால்உள்ளவாறெண்ணல்அசங்கதமாம்என்றறிந்து பாவனையை விட்டொழியெனல்.

401. எண்ணங் கெடநள் ளிதயத் தியல்பால்
வண்ணம் பளிரென் றுவயங் குதனை
எண்ணங் கொடுமெய்ப் படவெண் ணுவதெவ்
வண்ணம் படுமென் றுமதிப் பொழியே. கருகூ

பாராதிகளைப் பாராமல், அவற்றைப் பார்ப்பானுன நின் னுண்மையை நேர்பட் டறிதியெனல்.

402. பாரா தியபஞ் சகமே பொருளா
ஆராய்ந் தறிவுற் றகமே கெடுவாய்
கூரா னமதிக் கொடு*'கோ க'மெனு
நேராய்ந் தறிநின் னிஜதத் துவமே. ககூ0

இயல்பான சொரூபானுபவம் இதயத்தில் உனக்கில்லா தொழியக் காரணம் அநாத்மகோசங்களில் வைத்த ஆத்மபுத்தியே யாக வறிந்து, அதனை யகற்றுதியெனல்.

403. அளியங் களைநி யகமென் றுமனத்
துனியங் குழலுந் திறமே இதயந்
தனிலின் பவுணர்ச் சிதழா மையுனக்
கெனநீங் கிடவற் றிலகம் மதியே. ககூக

---

*கோகம் (க: அஹம்)—நான் யார்?

அனைவர்க்கும், ஆன்ம சொரூபமான தானே அன்புக்குரித்தாகலால், சுகசொரூபமே நின் இயல்பு என்று துணிந்துகொள் எனல்.

404. இன்பப் பொருளா வியலா விடின்மெய்
யன்புக் குரிதா வகமா வதிலை
அன்புக் குரிதா வகமா வதுகொண்
டின்பப் பொருளென் றறிநின் னியல்பே. கசுஉ

அக்ஷரசொரூபத்தை ஆய்ந்தறிவோர் கைவல்யமான பிரம்மபதம் காண்பரெனல்.

405. எழுதா தியல்பா லிதயத் தொளிரவ்
வழியா தவெழுத் தெவராய்ந் தறிவார்
பழுதார் பசுபா சமயற் படர்போய்ப்
பழுதில் பிர(ம்)மப் பத(ம்)மே வுவரே. கசுங

மடம்பட்ட மதியால், வாலறிவொழிந்த மற்ற எதிலேனும் விபரீதமாக, 'அகம்' புத்தி வைப்போர், கருமகதியான பிறவிச் சிறையிற் பட்டுக் கலங்குவரெனல்.

406. மறவிப் பிரமா தமதிப் பிழையால்
அறிவிற் பிறிதை யகமென் றுறழ்வோர்
வெறியுற் றுவிளிந் துவினைப் பிறவிச்
சிறையிற் படலுற் றுயிர்தேம் புவரே. கசுச

இதுவதுவென்று மனத்தாற் பாவிக்கப்படும் எதுவும் உண்மையன்றாகவொழிய, பாவனாதீதமாக உள்ளத்தொளிரும் பரிசுத்த வுணர்வொளியே பரமார்த்த வுண்மையெனத் தெளிந்தோர் அச் சிவசொரூபமே யாவரெனல்.

407. இதுவென் றதுவென் றுமனத் தெணுமெவ்
வெதுவும் பொருளின் னியல்பன் றிதயப்
பொதுவொன் றுமொளிப் புரணத் துருவே
யதுவென் றுணர்வுற் றவர்மெய்ச் சிவமே. கசுரு

சுத்த ஞான சொரூபமே யானெனதுஎன்பவற்றின்
பொருள் எனத் தேறத் தெளிந்தோர்,
பலதிறப்பட்ட உலக விவகாரங்கள் பயிற்றுங்காலும்
சொரூபநிலையிற் சோர்வுபடாரெனல்.

408. யானு வெனதா வியல்கின் றவுமத்
தானு மெனுமெய்த் தகவோர்ந் துணர்வோர்
நானு விதமா(ம்) நடைசே ருலகத்
தானு வறிவா மதைநீங் கலரே. கசுசு

திருவருள் வண்மையான திடஞானானுபவம் உற்றோர்,
உண்மையொளி சமீபத்திலும் சமீபமான தம் சொந்த
சொரூபமாகவே உள்ளத் தொளிரப்பெறலால்,
ஆகாயநீலம் போலக் கற்பிதமான உலகத்தோற்றத்தை
மெய்யென்று மயங்காரெனல்.

409. விண்மை யுருமெய் யெனவே யருளின்
வண்மை யுடையோர் மயரார் இதயத்
தண்மை யிலுமிக் கணிமைப் பொருளா
உண்மை யொளிதம் முருவா கலினே. கசுஎ

ஆன்மா பிரம்மத்தினின்றும் பிறிதன்மையாலே, தன்னை
யறிந்தோர் தற்பரமான பிரம்மானுபவம் பெறுவரெனல்.

410. அறிவார் தனையா ரவர்மெய் யுருவாச்
செறிவா லிதயத் தியல்சிற் சொருபம்
பிறியா வுறவாம் பிர(ம்)மப் பொருளாய்
நிறைவா மனுபூ திநிகழ் வுறுமே. கசுஅ

ஆன்மவிசாரத்தால் அகந்தைமதி யழிவோர்
அருட்பரவெளியான அகண்டவைபவம் அடைவரெனல்.

411. நானென் பவனா ரெனநா டியகத்
தூனென் றுமுணர் வொழிவா ருறுவார்
தானென் றொளிரான் மசதா சிவமாய்
வானென் னநிரம் புறுவை பவமே. கசுகூ

தாரகமாகக் குருபாதங் குறுகிய அடியார் சமுசாரதாபந் தணிந்து சாந்திபதஞ் சார்வரெனல்.

412. தமர்தா ர(ம்)மகார் சதமன் றெனநீத்
தமர்தா ரகமெய் யடிசா ரடியார்
சமுசா ரவழற் படுதா பமகன்
றமுதா னுபவத் திலமுந் துவரே. கஎ०

பெரியோரைப் பேணி யொழுகலால் சிறியோர் பெரும்பதம் பெறுவரெனல்.

413. யானற் றநிலைக் கணியல் வுறுமம்
மோனத் தவரா ஜமுனீந் திரரைத்
தீனச் சிறுதொண் டர்செறிந் தொழுகின்
ஞானப் பெருமாண் பத(ம்)நண் ணுவரே. கஎக

சிவோகமெனத் தேர்ந்த திடஞானிகள் ஸித்த பரமேஷ்டிகளா மெனல்.

414. யாவற் றிலுமொக் கவிருந் தொளிரவ்
வோர்வத் துவுருத் தமதுண் மையெனத்
தேர்வித் தகர்சிற் பரமுத் தர்களாய்ப்
பாவித் தலொணுப் பரமேட் டிகளே. கஎஉ

சிவஞானிகளே நிரதிசயானந்தங் கண்டவ ரெனல்.

415. வெளியா கவிளங் குவிழுப் பொருளைத்
தெளிவா கவுணர் சிவஞா னியர்தாம்
இளிவா னமனக் குறைதீர்ந் தியல்பாம்
களியார்ந் தபராங் கதிகண் டவரே. கஎங

"அகக்கதவத்தை யலர்த்தி அருட்கழலை உள்ளபடி காட்டு" என்று அடியர் ஆண்டவனைப் பிரார்த்திக்கக் கடவரெனல்.

416. இதயத் திலிருக் குமிறை வவகக்
கதவத் தைமலர்த் தியருட் கழல்காட்
டுதியத் தகவென் றுதினந் தொறு(ம்)மெய்ப்
பதியைத் தவரு துபஜித் திடவே. கஎசு

15. அடியார்க்குபதேசம்

உடலே வடிவாகக் களிகொண்டுழலும் கயவர் அழுங்குவ ராகலான், அடியரானோர் உலக நோக்கொழிந்து அமுதப்பதமே அன்போ டாராயக் கடவரெனல்.

417. மாயக் களிகொண் டுமயங் கியுழல்
காயக் கயமாக் களழுங் குறுவார்
நேயக் கசிவோ டுநினைந் தடியார்
ஆயக் கடவா ரமுதப் பதமே. கஎரு

ஆண்டவன் சந்நிதியி லுண்டான சாந்தியால் அன்புக்கனிவுற்ற அணுக்கத்தொண்டரே, பிறவித்துன்பமறப் பேரின்பவாழ்க்கை பெற்றுப் பிறங்குவோரெனல்.

418. துன்பக் கவல்வா தைதொலைந் தகல்பே
ரின்பக் கடலா வியல்பாக் கியர்கள்
தன்பக் கலெழத் தவழ்சாந் தியின்மெய்
யன்புக் கனிவுற் றவணுக் கர்களே. கஎகூ

விஷயவேட்கை யகன்று அருளுக் குருகுகின்ற அன்பருளத்தில் ஆண்டவன் மெய்ப்பதம், பேரின்பப் பரவெளியாகப் பரந்து பகல் போலப் பளிச்சிட்டு விளங்குமெனல்.

419. நகலாய்ப் புலனூ டுநவைப் படலற்
றுகலாய் அருளுக் குருகன் பருளத்
தகலாப் பரபோ கவகண் டவெளிப்
பகலா வொளிர்கிற் பதுமெய்ப் பதமே. கஎஎ

16. அகப்பொருள்

உடையான் உள்ளத் தொளிர்தல், தலைவி பெருமிதம்படக் கூறல்.

420. கண்ணு னவருட் கதியா கவிளங்
குண்ணு ரமுதப் பெருமா னுடையான்
பெண்ணு னமடச் சிறுபே தையுளத்
துண்ணு யகமா வொளிர்கின் றனனே. கஎஅ

தலைவி வாழ்வுகண்டு தாய் மகிழ்ந்துரைத்தல்.

421. திருப்பூட் டியொர்தெய் வமணு ளனருட்
புரிப்பூட் டியுளம் பொலியக் களிசேர்
விருப்பூட் டுமகிழ் விளைவிப் பதனுல்
நரிப்போட் டுயர்வாழ் விவள்நண் ணினளே. கஎகூ

17. நெஞ்சறிவுறுத்தல்

நெஞ்சமே! நீ ஏகாக்கிரமாக உள்ளொடுங்கி, குருபத்தியா லுண்டான அறிவுத்திட்பத்தால் அகந்தை மமதை மயக்கத்தை அழித்திடெனல்.

422. செறிவை மனமே சிதரு மறவாக்
குறிவை யொளிகூர் குருபத் திமையால்
அறிவின் வெருவா வமைதித் தெளிவுற்
றெறிவை முளைநா னெனதென் மயலே. கஅ0

நெஞ்சமே! ஆண்டா னடிக்கு உணவாக அழிந்த அகமே சர்வாதாரமான சுத்த ஞான சொரூபமாமெனல்.

423. காணுய் மனமே கதிகேள் இறைதாட்
கூணு விளிவுற் றுதியா வகமே
பேணுய் அதுவே பெருமாண் பதமாந்
தூணு வொளிர்நின் சொருபத் தியல்பே. கஅக

18. பிரார்த்தனை

உயிர்க்கினிதாக அகில ஜீவராசிகளிதயத்தும் விளங்கும் இறைவன் சொரூபம் என் மயக்கவினைகெட வென்று எனது நெஞ்சத்தே நிலைத்தொளிர்வதாக என வேண்டல்.

424. என்றென் றுமுயிர்க் கினிதா விதயந்
துன்றும் பெருமாண் புறுதன் சொருபம்
வென்றென் று(ம்)மயக் கவினை கெடவே
நின்றென் றுமொளிர்ந் திடநெஞ் சகமே. கஅஉ

பற்றற்ற பொருளைப் பற்றுவதில்
அருட்கை கொடுத்துக் காக்க ஆண்டவனைப் பிரார்த்தித்தல்.

425. பராலம் பமுறப் பரிபக் குவருக்
கொராலம் பனமா னவுளத் தொளியாய்
நிராலம் பவருட் பரமா நிறைநின்
கராலம் பமெனக் கருளங் கணனே. கஅங

அவிச்சையிருளில் அகப்பட்டலமராமல்
கைவல்ய ஞானமுதவக் கடவுளைப் பிரார்த்தித்தல்.

426. கன்னங் கருமாற் கணமிழ்ந் தடிநாய்ச்
சின்னஞ் சிறியேன் தெருமந் திடவோ
தன்னந் தனிமெய்ப் பரதத் துவமாம்
பென்னம் பெரியாய் அளிநின் னொளியே. கஅச

பரபக்திநிலை பாலித்தருள ஆண்டவனைப்
பிரார்த்தித்தல்.

427. உனையா னொருகா லு(ம்)மறந் தொழியா
நினைவா னவியற் பரபத் திநிலை
எனையா ளுடையெம் பெருமா னிதுநான்
இனையா மலெனக் கினிதீந் தருளே. கஅரு

என்னுள்ளம் உனக்கே யுடைமையாக
உன் திருவடிக் கன்பளித்து என்னை யாண்டருளெனல்.

428. கடையா மெனைநின் கருணைக் குரிதா
வுடையாய் உளமென் னுழைநன் கியலத்
தடையா துமிலேன் சரணஞ் சரணத்
திடையார் வமளித் தெனையாள் பரனே. கஅசு

19. நன்றி கூறுதல்

நின் கழலே கதியாகக் குறுகி,
சமதரிசனமான உண்மையுணர் வுற்றேனெனல்.

429. அதிரா வடிகேள் அடியே னுனது
கதிரார் கழலே கதியாக் குறுகிச்
சதிரார் சமதர் சனமெய் யுணர்வாம்
பிதிரா நிலையிற் பெருகுற் றனனே. கஅஎ

தன்னைத் திருவடிக் காண்டுகொண்ட திருவருளை எண்ணி
யெண்ணி உள்ளம் பராமிர்தமேயாகப் பாகுபோற்
கரைவுற்றதெனல்.

430. ஆவா வெனவென் னையடிக் குரிதா
ஏவாப் பணிகொண் டவியற் கருணைக்
கோவா துடையா யுளநெக் குருகிப்
பாவா னபரா வமுதா யினதே. கஅஅ

யாவுமாம் பரமே!
நீ என் சொரூபமாகவே உள்ளத்தொளிர்தலின்,
உன்னை நான் எவ்விதத்திலும் எண்ணுதற் கில்லையெனல்.

431. கண்ணே மணியே கதிர்வா னொளியே
விண்ணே வளியே வெளியாம் பரமே
எண்ணே னுனையா னெவிதத் திலுமென்
னுண்ணே ருயிரா வொளிர்மெய்ச் சுடரே. கஅசு

உன்னுருவே என்னுருவாக ஒளிர்கின்ற வுள்ளத்தில் யானென்னு மகந்தை இறக்க நிற்றலன்றி, வேறு நான் என்ன செய்யக் கடவேனெனல்.

432. **வா**னென் றருள்வா ரிவழங் கியநீ
தானென் னுருவாத் தழைகின் றவுளத்
தியானின் றியிறந் திடலன் றியுனக்
கியானென் னசெயக் கடவே னினியே. கசும்0

20. சரணம்

பாவநாசமாக்கி அடியார்க்கு உபசாந்தி யருளும் ஆண்டவன் குருரமணன் சரணமே ஆருயிர்க்குச் சரணமெனல்.

433. **அ**ர ண வடியா ரகவல் வினைசெற்
றுர ண முபசாந் தவுணர்ச் சிதரும்
பர ண ரியனைப் படர்மா ரமணன்
சர ண லயமே சரணாத் தகுமே. கசுக

சொரூபாநுபூதி பொருந்த அகத்தே சுடர்விட் டொளிர்கின்ற ஆன்மநாதனே சரணமெனல்.

434. **ம**ருளாற் றுவிதத் துமயங் கிமனம்
சுருளா தொருதன் சொருபப் பரமெய்ப்
பொருளா மனுபூ திபொருந் தவுளத்
தருளா லவிரான் மபிரான் சரணே. கசுஉ

அருட்கடலாக வமைந்த ஆண்டானது தம்மபதமே அகந்தை வெறிகொண்ட ஆருயிர்த்தாபந் தணியத் தமக்குச் சரணமெனல்.

435. **வெ**ளிரு னவகந் தைவெறிப் படுபேய்க்
களிரு கவழன் றுகலங் குமனம்
குளிரா கவருட் குணமாக் கடலாந்
தளிரா வொளிர்தம் மபதஞ் சரணே. கசுங

துரீயமான தனது சுத்தான்ம சொரூபத்தோடு
என்னைப் பரிவர்த்தனை செய்துகொண்ட
இறைவன் பாதமே எனக்குச் சரணமெனல்.

436. பிரிவித் தகொடும் பிரமா தமறத்
தெரிவித் தகமெய்த் திறமென் னுளமூர்
துரியத் தொளிர்தன் சொருபத் தொடெனைப்
பரிவர்த் தனைசெய் தபதஞ் சரணே. ௪௩௬

தன்னை வணங்கிய நான் குறையுடையனாய்ப் பின்னும் பிறரை
வணங்காதபடி பூரணானுக்கிரகம் புரிந்தாண்டுகொண்ட
இறைவனடியே எனக்குச் சரணமெனல்.

437. தனையென் றலைசாய்த் துவணங் கியநான்
பினையொன் றுபெறப் பிறர்பா லணுகிப்
புனைவொன் றியசொற் புகலா தபடிக்
கெனையாண் டருள்செய் யிறைதாள் சரணே. ௪௩௭

21. வாழ்த்து

சூக்ஷ்மமான பரமார்த்தம் அகத்தே யனுபவமாக, நோக்கா
லுளத்தைத் தாக்கி யுணர்த்திய ஆண்டானருட்கழல்வாழ்த்து.

438. வாக்கால் வருணிக் கவொணா மறையை
நோக்கால் வருணித் துநுழை யவுளந்
தாக்கா சிரியன் சதிர்மா ரமணன்
மாக்கா ருணியக் கழல்வா ழியவே. ௪௩௮

இறைவனே இதயத்திலிருந்து தன்னைப்
பாடுவித்தானெனல்.

439. அதுவென் றவனென் றவளென் றுலகாய்
இதுவென் றறிதற் கியலா வுணர்வாய்
எதுநின் றிடுமவ் விறையே யிதயப்
பொதுநின் றுதனைப் புகழ்வித் ததுவே. ௪௩௯

5. மெய்யகம்

கலிவிருத்தம்

440

எதுவே பகலா யெதுவே யிரவாய்
எதுவே நனவா யெதுவே துயிலாய்
எதுவே யவைதேர்ந் தியல்சாட் சியுமாம்
அதுவா லறிவா வவிர்மெய் யகமே. ௧

441

எதுவே கனவூ டெதிர்கின் றதுபோல்
எதுவே யிடமா யெதுவே பொழுதாய்
எதுகா ரியமா வியல்கா ரணமாம்
அதுவா லறிவா வவிர்மெய் யகமே. ௨

442

எதுவந் தரியா மியெவற் றிலுமாய்
எதுவே யறிவுக் கறிவா மியல்பால்
எதுவே யததற் கததா யிடுமோ
அதுவா லறிவா வவிர்மெய் யகமே. ௩

443

எதுவே பொறியா யெதுவே புலமாய்
எதுவே மனமா யெதுவே நினைவாய்
எதுவே மதியா யெதுநிச் சயமாம்
அதுவா லறிவா வவிர்மெய் யகமே. ௪

444

எதுவே யருளா யெதுவே பொருளாய்
எதுவே தவமா யெதுவே சிவமாய்
எதுசா தனமா யெதுசாத் தியமாம்
அதுவா லறிவா வவிர்மெய் யகமே. ௫

445

எதுசக் கரமா யெதுவக் கரமாய்
எதுமந் திரமா யெதுதந் திரமாய்
எதுபா வனையா யெதுதே வதையாம்
அதுவா லறிவா வவிர்மெய் யகமே. ௬

446

எதுவே நவநா கரிகப் புலமாய்
எதுவே யிதயத் தியல்சிற் பரமாய்
எதுபந் தனமுத் திகளுக்*கெதுவாம்
அதுவா லறிவா வவிர்மெய் யகமே. ௭

447

யானு ரெனவென் னியல்சாற் றிடிலோ
ஊனு ருடலோ டுயிர்புந் திமனம்
தானே தறியாத் தமமே துமலாத்
தானே யறிவாத் தகுமெய் யகமே. ௮

448

இதுநா னதுநா னெனலற் றிதயத்
தெதுதா னதுவே யதுவா வொளிரும்
பொதுவாம் பரமோ புணர்கே வலமாம்
அதுவா லறிவா வவிர்மெய் யகமே. ௯

---

* ஏது எதுவெனக் குறுக்கல் விகாரம்.

449

இதுவென் றதுவென் றெதுவுங் கதுவப்
பொதுவா நிகழும் பரிபூ ரணமா
மெதனிற் பிறிதொன் றிலேயோ வியல்சத்
ததுவெற் றறிவா வவிர்மெய் யகமே. ௧௦

---

6. உவகையுரை

450

துவரமற் றெல்லாந் துறந்துநின் பாதத்
துணையே தொழுதிறைஞ்சும்
தொண்டர்நற் ருெண்டர்மெய்த் தொண்டர்க் கெழுமையுந்
தொண்டரோ மென்றெமது
பவரமெ டுத்துப் பகர்ந்து வணங்கிநின்
பாதத் தயலொதுங்கிப்
பாமர மக்களோம் பாகதச் சொல்லினெம்
பாக்கியங் கூறுகின்ருேம்
சிவரம ணய நமோநம வென்று
சிரத்தை யுறத்தொழுது
சிக்கென வாற்றிய செய்தவத் தாலருள்
சேர்தலின் மாநிலத்தோர்
அவரவர் தத்த மபீட்ட மனைத்து
மடைந்து வழுத்துறுமவ்
வாசி தனைச்செவி யார்ந்தடி யோங்க
ளகக்களி பொங்கினமே. ௧

---

7. பாதானுசந்தானம் என்னும் பாதமாலை

மங்கலம்

451

யாதானு மெண்ணி யிசைக்கும்பே ரின்பவருட்
பாதானு சந்தானப் பாதவொளி மாலைக்கு
மீதான மாக விளங்குபரஞ் சோதியருட்
பாதார விந்தமதே பாதுகாப் பாயிடுமே. ௧

452

இதயப் பரவெளி யென்னுள் விளங்கச்
சதிர்படக் காட்டிய சற்குரு பாதம். ௧

453

கொள்ளலு மில்லை கொடுத்தலு மில்லையென்
றுள்ளத னுண்மை யுணர்த்திய பாதம். ௨

454

படரு(ம்) மனக்கற் பனைகெடி லாங்கே
சுடர்விடு சொந்த சொருபமெய்ப் பாதம். ௩

455

அத்தமி யாத வருட்பெரு வாழ்வருள்
சுத்தமெய்ஞ் ஞானச் சுடரொளிப் பாதம். ௪

456

என்னியல் யான்கண் டிதயத் தடங்கலுந்
தன்னியல் பாகத் தழைத்தொளிர் பாதம். ௫

457

ஞானப் பரமா நடத்தலிற் சுட்டறு
மோனப் பரமா முழுமுதற் பாதம். ௬

458

பழுத்த மனத்திற் பாரற்பர மாகச்
செழித்தொளிர் தெய்வத் திருவருட் பாதம். எ

459

யானென் செயினு மெலாந்தன் வழிபாடாத்
தானுவந் தேற்றருள் சற்குரு பாதம். அ

460

சாந்தி விலாசச் சதிரொளி பொங்குறு
காந்த வசீகரக் கமனியப் பாதம். கூ

461

எங்கு(ம்) நிறைந்தபே ரின்பப் பரவெளி
இங்கென் னகமா வியன்றொளிர் பாதம். கo

462

திருவடி யுண்மை தெரியவென் னுள்ளத்
தொருபடித் தாக வொளிர்திருப் பாதம். கக

463

வெற்றவெளி யாக விளங்கு சொருபமா
அற்றமற வென்னை யணைந்தகுரு பாதம். கஉ

464

தன்னை விளக்கத் தனக்கயல்மற் றொன்றின்றித்
தன்னாலே தான்விளங்கு சற்குருமெய்ப் பாதம். கங

465

இணைக்கமுற்ற வன்பர்பே ரின்பமெழப் பொங்கக்
கணக்குவழக் கற்றவருட் காருண்யப் பாதம். கச

466

உண்மையே யுண்மையா வொளிரவுளத் தொட்பங்கூர்
வண்மைசேர் சுத்தவருள் வாலறிவாம் பாதம். கரு

467

பத்தியாற் சித்தம் பழுத்தமெய் யன்பர்க்கு
முத்திப் பெரும்பதமா மூண்டசுகப் பாதம். கசு

468

அபாரசம் பத்தா வடியே னகந்தேர்
அபார சிவாம்புதியா வாண்டவன்மெய்ப் பாதம். கஎ

469

இரண்டுமொன் ருன வியற்பரமா வுள்ளந்
திரண்டொளிர்சுத் தான்ம சிவசொருபப் பாதம். கஅ

470

தணந்தொழிய வொண்ணுமெய்த் தன்மையா லுள்ளத்
திணேந்தெனைநன் காண்டபே ராச்சரியப் பாதம். கசூ

471

சுத்தசிவ மாகத் துலங்கு சொருபவியற்
பித்தியிற்பல் சித்திரங்காண் பித்தொளிர்மெய்ப் பாதம். உ0

472

என்னைநா னெண்ணுவதே தன்னைநா னெண்ணுவதாம்
என்னவே தேற்றியவவ் வேகான்ம பாதம். உக

473

நானெனும்பொய்த் தன்மை நலிந்தொழிய மூவிடனுந்
தானெனுமெய்த் தன்மை தழைத்தொளிரும் பாதம். உஉ

474

பின்னை யனைத்துறவும் பேர்ந்தொழிய வென்னகத்துத்
தன்னை யெனக்குறவாத் தானளித்த பாதம். உங

475

இருட்கலிகெட் டோட வினிதெனைக்கண் ணோக்கி
யருட்கொலுவா வுள்ளத் தரசிருக்கும் பாதம். உச

476

அகமே யகமென் றறிந்துகொள்ள வுள்ளத்
தகமமதை செற்றஞா ஞசிரியப் பாதம். உரு

477

கண்மணியா வென்னுட் கலந்துசிவ ஞானவருள்
விண்மணியா வெங்கும் வியாபித்த பாதம், உசு

478

உறுதிபெற வுள்ளத் துழையேன் சொருப
மறதியறப் பொங்கு மகோந்நதமாம் பாதம். உஎ

479

அறிவொளிவாழ் வாக வகத்தெனக்கு வாய்த்த
நிறைவெளியா மோன நிஜானந்தப் பாதம். உஅ

480

தன்னுருவே யல்லதுமற் றென்னுருவே நின்ருகத்
துன்னுமே கான்ம சொருபவொளிப் பாதம். உகூ

481

பரவித்தை யானவருட் பார்வையாற் பாசக்
கரவைக் கடிந்தொளிர்மெய்க் கண்மணியாம் பாதம். ௩0

482

ஏனுதியா னென்ன லிகந்தொழியிற் சொந்த
சனுதனவாழ் வாகத் தலைப்படுமெய்ப் பாதம். ௩௧

483

ஆனந்த மோன வருட்சிற் பரவொளிசேர்
வானங்க மாக மலர்ந்ததிருப் பாதம். ௩௨

484

மோனமெய்ஞ் ஞானவொளி முற்றப் பரப்பியுளத்
தூனவஞ் ஞானவிரு ளோட்டுகுரு பாதம் ௩௩

485

வெருவா வியல்சேர் விசுத்தமெய்ஞ் ஞான
குருபாத வாழ்வெனக்குக் கூட்டிவைத்த பாதம். ௩௪

486

நிறைந்தசிவ ஞானவருள் நிஷ்டையா வுள்ளத்
துறைந்தொளிர்சாந் தானுபவ வுண்மையாம் பாதம். ௩௫

487

பேதமனக் கற்பனையை யபேத சொருபவருட்
போதவொளி யாலறவே போக்கியமெய்ப் பாதம். ௩௬

488

கடக்கலரு மோகவகங் காரமற வுள்ளத்
தொடுக்கலுற்று மோன வொளிபெருக்கும் பாதம். ௩௭

489

பத்தர் தமக்குட் பரகதிகண் டுய்யவவர்
புத்திக் கொளிதருசற் போதவருட் பாதம். ௩௮

490

உள்ளதே தானு வொளிர்சொருபக் காட்சியிலென்
கள்ளமனக் கற்பனையைத் தான்கரைத்த பாதம். ௩௬

491

புண்ணுறுசிந் தாகுலமாம் புழுக்கமற வென்னுளத்துத்
தண்ணிலவா மோனந் தழைப்பித்த பாதம். ௪0

492

கற்பனு மோகக் கருத்தை யடர்த்திந்த
வற்பனை யாண்ட வருட்செழும் பாதம். ௪௧

493

மாலறி வாக மயங்கத் திரிபுடி
வாலறி வாக வளரொளிப் பாதம். ௪௨

494

ஆட்டி யலைக்கு மகப்பேய் மயலற
வோட்டி யொழிக்கு மொளிவெளிப் பாதம். ௪௩

495

உருவெளித் தோற்ற மொடுங்கக் கிளரும்
பரவொளி யாகப் படர்சிவப் பாதம். ௪௪

496

ஏற்ற சிவத்தென் னியல்வடி வொன்றலால்
வேற்றுமை யின்றி விளங்குறும் பாதம். ௪௫

497

அடியேன் றலைக்கோ ரழகிய செம்பொன்
முடியா விளங்கு முழுமணிப் பாதம். ௪௬

498

வெளியே யுளமா வுளமே வெளியா
வொளிர்பரஞ் சோதியா வோங்குறும் பாதம். சஎ

499

ஆழ்கலமாய் மோகத் தமிழ்ந்தொழியா தென்னகத்து
வாழ்முதலாப் புக்கு வளரொளிமெய்ப் பாதம். சஅ

500

திருவருளாத் துன்றுபர தெய்வவொளி யாலே
வெருவரல்சேர் புன்மயக்க மிச்சைகடி பாதம். சகூ

501

இறைபதத்திற் சிந்தை யிறந்தொழியிற் பொன்று
வறிவுருவா வுள்ளத் தவிர்சொருபப் பாதம். ருo

502

சிவசொருப மானவருட் சிற்பரத்தே நானற்
றவசமா நிற்கவென்னை யாண்டுகொண்ட பாதம். ருக

503

அத்துவித வுண்மை யறிவன்றி யாருயிர்க்கு
மெய்த்துணைமற் றின்றாய் விளங்குறுமெய்ப் பாதம். ருஉ

504

மோனவொளி யாலிந்த முப்புடியு மொன்றுபட
நானறியக் காட்டியமெய்ஞ் ஞானகுரு பாதம். ருங

505

தனித்த சொருபவருட் சைதன் னியவொளியால்
அனைத்துலகுந் தாங்குமெய்ஞ்ஞா னனந்தப் பாதம். ருச

506

அருட்சிற் பாத்தை யடைந்தமெய்ஞ் ஞானி
திருக்கண்ணேக் காகச் செழித்தொளிரும் பாதம். ருரு

507

வெருக்கொள் படர்சேர் வியாமோக வாழ்வாங்
கருக்கெடமெய் யன்பர் கருத்திலொளிர் பாதம். ருசு

508

எண்ணற் கரிதா விதயத் தொளிர்சொருப
வண்ணக் கலாமோன வாழ்க்கையருள் பாதம். ருஎ

509

ஏதமறப் பொங்கும்பே ரின்பவாழ் வுக்குத்தன்
போதமே மிக்கவுயர் சாதனமாம் பாதம். ருஅ

510

பரவித்தை யானவருட் பார்வையாற் பாசக்
கரவைத் தகர்க்குங் கடுவெளியாம் பாதம். ருசு

511

மோனக் கலேபுகட்டி முத்திப் பரசொருப
ஞானச் சதிரெனக்கு நல்கியமெய்ப் பாதம். சுo

512

சதிர்சேர் மனுதீதத் தற்பரமாய் நின்றே
கதிர்சேர் சகல கலாநிலயப் பாதம். சுக

513

மாய்ந்த மனத்தே மலர்ந்தொளிர்சுத் தானந்த
சாந்திவடி வான சதாசிவமாம் பாதம். சுஉ

514

திறனறிந்து செய்யு மகந்தைத் தியாக
நிறைதவத்தா லன்றியுரு நேர்தலரும் பாதம். ௬௩

515

சுத்தவெளி யாகச் சுடர்சொருப மோனநிலை
இத்தமியே னுள்ளத் தினிதளித்த பாதம். ௬௪

516

சித்தமல மான செருக்கழிவித் தென்வடிவு
சுத்தசிவ மாகத் துலக்கியபொற் பாதம். ௬௫

517

தனக்குரிமை யாகத் தடுத்தாண்டு தன்னை
எனக்குரிமை யாக வினிதளித்த பாதம். ௬௬

518

அளிசே ருடையா னருளா லகத்தே
தெளிவா விளங்கு சிதம்பரமாம் பாதம். ௬௭

519

யோக வியோக மொருங்குமனக் கற்பனையாப்
போகவென்று மொன்றேயாம் போதவெளிப் பாதம். ௬௮

520

சிவஞான மோனத் தெளிவாம்பே ரின்பத்
தவவாழ் வெனக்கினிது சாதித்த பாதம். ௬௯

521

சச்சிதா னந்த சதாசிவ்மோ னுனுபவ
நிச்சயமா வென்னுளத்து நின்ருெளிர்மெய்ப் பாதம். ௭௰

522

ஒருமைசேர் மோன வுணர்வே யுளத்திற்
பெருமைசேர் சுத்தப் பிரம்மமாம் பாதம். எக

523

நினைந்து நினைந்து நினைவொழிந்த நெஞ்சில்
அனந்த சொருப வவிரொளியாம் பாதம். எஉ

524

அடைந்தமெய் யன்பர்க் ககந்தையுணர் வோயக்
கடந்தவுண்மை யாகக் கருத்திலொளிர் பாதம். எங

525

சுத்த வருள்வடிவாத் துன்றுஞா ஞனந்த
வத்துவே நாஞ மலர்ந்தொளிர்மெய்ப் பாதம். எச

526

நெஞ்சிலே நின்ற நிறைவான தன்சொருப
விஞ்சையா லோங்கு விசுத்தவெளிப் பாதம். எரு

527

தெள்ளிதா மோனத் திறத்தாலென் றென்றுமுளத்
தொள்ளிதா வோங்குபர வுண்மையொளிப் பாதம். எசா

528

பரவெளியாந் தன்சொருபப் பார்வையெனக் கூட்டி
உரவொளிசேர் தன்பதத்தி லூன்றுவித்த பாதம். எஎ

529

உணர்வை யொருமுகமா வுள்ளத் தொடுக்கிப்
புணர்வதே போதவருட் பூரணமாம் பாதம். எஅ

530

பற்றிக் கிடந்தமயற் பாசமறச் சிற்சொருபப்
பற்றுக்கோ டாகயான் பற்றியமெய்ப் பாதம். எசுா

531

புல்லியவெம் பாழவிச்சை பொன்றவடர்த் தாண்டுகொண்ட
நல்லகுரு நாதன்மெய்ஞ் ஞானவருட் பாதம். அ0

532

பூரிப்பா லிதயமிகப் பூரிக்க வென்பால்
விருப்பா லெழுந்தருளி வீற்றிருக்கும் பாதம். அக

533

பெருமைசேர் சுத்தப் பிரம்மமா வென்னோ
டொருமைசேர் மோனவுணர் வூற்றான பாதம். அஉ

534

ஈனமொன் றில்லா வியற்பர மான்மவாழ்
வானமெய்ஞ் ஞான வனுபவப் பாதம். அங

535

தன்னைநா னாகத் தடுமா றியமனத்தூ
டென்னைத்தா னானன் கிலக்கியபொற் பாதம். அச

536

இன்றாக வன்றாக வென்றுமே யாகவுளத்
தொன்றாக யார்க்கு முரியபொற் பாதம். அரு

537

திருத்தமாத் தன்னைத் தெளிந்தநல் லான்றோர்
கருத்தா டொளிர்சொருபக் கண்மணியாம் பாதம். அசா

538

குருமணிதன் மோனக் குறிநிற் பவர்க்குப்
பெருநிதியா வுள்ளவருட் பேரின்பப் பாதம். அஎ

539

அடிக்கீ ழடங்கினுர்க் கான்றமைந்த வாழ்வாக்
கிடைக்கலுற்ற மோனக் கிழமைசேர் பாதம். அஅ

540

குறைவிலா மோனக் குலாவா லிதய
நிறைவிலே யுண்மை நிலேயுணர்த்தும் பாதம். அகூ

541

தனக்கடிமை யாகச் சரண்புக்க நாளே
எனக்குடைமை யாக விதயநிறை பாதம். கூ0

542

பட்டியா வெங்கும் பரந்துழன்ற வென்னே
நிட்டையாற் சிற்பதத்து நிற்பித்த பாதம். கூக

543

மிகமிகமற் றெல்லா விளக்கங் களிலும்
அகமகமென் றேநன் கவிர்சொருபப் பாதம். கூஉ

544

புல்லறிவு போகத்தன் பூரணசுத் தாத்துவித
நல்லறிவு நல்கியமெய்ஞ் ஞானவருட் பாதம். கூங

545

தன்னினும்வே ருகத் தணந்த வகந்தையைச்செற்
றென்னுருவு தன்னுருவா யிலக்கியபொற் பாதம். கூச

546

அறிவான மோனமே யாருயிருக் குண்மை
யுறவாக வென்னு ளுணர்த்தியபொற் பாதம். ௫௫

547

பாசபந் தங்கெடக்கூர் பார்வையா லென்னுளத்து
நேசபந் தஞ்சேர் நிஜசொருபப் பாதம். ௫௬

548

சற்போத மான சதாசிவத்தோ டென்மனத்தை
எப்போதுஞ் சேர்த்தொளிர்பே ரின்பவருட் பாதம் ௫௭

549

ஒளிவெளி யாக வுளத்தி லொளிர்மெய்த்
தெளிவியல் சான்ற சிவோகமாம் பாதம். ௫௮

550

பரத்தையே நம்பிப் பயின்ருெழுகுஞ் சித்த
விருத்தியிற் சிற்பரமா மிக்கொளிர்மெய்ப் பாதம். ௫௯

551

தனக்குணவா முற்றச் சமைந்தமனத் தோர்பாற்
பிணக்கணமும் பேராப் பெருவாழ்வாம் பாதம். ௬௦

552

ஒன்றுபட்ட மோன வுணர்வொளியி லன்றிவளந்
துன்றுபர மார்த்தந் துலங்காத பாதம். ௬௧

553

தன்னடியார் சித்தோப சாந்திபெற நானுதியாத்
தன்னிழப்பா லெய்து சதாமௌனப் பாதம். ௬௨

554

அங்கணேக் கத்தா லடியோமுக் கார்ந்தபெரு
மங்களவாழ் வான மனோதமெய்ப் பாதம். கОாட

555

ஆயதன மாக வனைத்துக்கு முள்ளபெருந்
தாயகமா மேகபர தத்துவமாம் பாதம். கОச

556

ஓாலம்ப மாகவெனக் குள்ளத்தி லுற்ற
நிராலம்ப மோன நிலையான பாதம். கОரு

557

பாசிவ தத்துவ பாசகமா வுள்ளத்
தாசியற்று மின்ப வருள்வடிவப் பாதம். கОசு

558

தாக்கியகக் கட்டைத் தகர்த்தெறிந்து தன்னியல்பாத்
தேக்குசிவா னந்தவருட் சிற்பரமாம் பாதம். கОஎ

559

உதய வொடுக்க முருதசற் போத
விதயவெளி யாக வியல்சொருபப் பாதம். கОஅ

560

பொய்த்தொழிய வூனப் புலையகந்தை யென்வடிவு
சுத்தவறி வாகத் துலக்கியமெய்ப் பாதம். கОகூ

561

அத்துவித மான வருட்சிற் பரசொருப
வித்தையா லென்மயக்க வேற்றுமைதீர் பாதம். ககО

562

அருட்சிற் பரவாழ் வடியரகந் தேறத்
தெருட்டுசிவ ஞானத் தெளிவான பாதம். கககக

563

நேயமுற்ற மெய்யடியர் நெஞ்சத்து மாமயக்க
நோயகற்று மெய்ஞ்ஞான நோக்கமாம் பாதம். ககஉ

564

அப்பனுக்கு நான்முற் றடிமையாக் கூட்டியருட்
செப்பமுற வென்னைத் திருத்தியபொற் பாதம். ககங

565

அந்தமிலா மோன வருட்சிற் பரசிவத்திற்
சிந்தையிறந் தன்பு செழிப்பித்த பாதம். ககச

566

சொந்தவீ டான சொருபத்தை யோர்த்துணர்ந்து
வந்தவழிச் சென்று மடுப்பித்த பாதம். ககரு

567

விட்டொழிய வொண்ணுவென் மெய்யா யகந்தைமனச்
சுட்டுணர்வற் றேங்கு சொருபவொளிப் பாதம். ககசு

568

சிக்கெனத் தன்னோ டெனக்குச் சிறந்தொளிர்
ஐக்கிய ஞான வனுபவப் பாதம். ககஎ

569

மருள்சேர் மனக்கவலை மாறவெனக் குள்ளே
யருள்சேர் சிவானுபவ மாகவொளிர் பாதம். ககஅ

570

சுரிதலுற்ற புன்மனத்தைத் துங்க சொருபத்
தூரியவெளி யாகத் துலக்கியபொற் பாதம். கககூ

571

நானென வெண்ணமெய்ஞ் ஞானநு பூதியாற்
றூனாக மாற்றித் தழைத்தொளிர்பொற் பாதம். கஉ௦

572

கடக்கலரு மோகக் கருத்தை யகத்தே
மடக்கியதன் மூலத்து மாய்வித்த பாதம். கஉக

573

அற்பனு மென்னை யருள்வெளியிற் கூட்டிமனக்
கற்பனு சத்தியைக் கண்டித்த பாதம். கஉஉ

574

கள்ளவுணர் வானவகங் காரமறக் கெட்டவுளத்
துள்ளவுணர் வாகவொளி ருண்மையுருப் பாதம். கஉங

575

முளைத்த வகந்தை முனைப்பைக் கெடுத்தோர்
திளைத்தலுற்ற சுத்தவருட் சிற்சொருபப் பாதம். கஉச

576

மயற்படுபாழ் மானுபி மானமறச் செற்றூர்க்
கியற்பரவாழ் வானபே ரின்பவருட் பாதம். கஉரு

577

சிவாத்துவித வாழ்வு செழிக்கவெனக் குள்ளே
சுவேத்தியமாத் துன்று சொருபவொளிப் பாதம். கஉசா

578

அன்னியமா வொன்று மறியாவா றென்னகத்துத்
துன்னியவே கான்ம சொருபவொளிப் பாதம். கஉஎ

579

ஊன மனச்சுட் டுணர்வறவென் னுள்ளத்து
மோனவருட் பார்வையா மூண்டொளிர்மெய்ப் பாதம். கஉஅ

580

கல்வியாக் கேள்வியாக் கற்றுங்கு நிற்குநிஷ்டைச்
செல்வமா வென்னுட் சிறந்தொளிர்மெய்ப் பாதம். கஉகூ

581

தெளிவான வுள்ளுணர்வாற் சித்தமலங் கெட்டு
வெளியா வுளத்தில் விளங்குசிவ பாதம். கங0

582

சிக்கெனமெய் வாழ்வு திடம்படவே கைவல்ய
நிர்க்குணமா வென்னுளத்து நின்றொளிர்மெய்ப் பாதம். கஙக

583

சுத்தசிதா காசத் துலக்கமா மோனவருட்
புத்தமுதா லென்னைப் புதுக்கியமெய்ப் பாதம். கஙஉ

584

பேதமனம் மாயமாப் பேர்ந்தொழிய மிக்கவ்ருட்
போதவெளி யாகவுளம் பொங்குவித்த பாதம். கஙங

585

சூரவான மோகவகங் காரமறச் செற்றுப்
பரவாழ் வனுபவமாப் பாலித்த பாதம். கஙச

586

அயலாக நோக்கி லறிவரிதாய்த் தன்மெய்
யியல்காண லுற்றுங் கியற்பரமாம் பாதம். கரு௫

587

அறிவுருவாந் தானே யதீதவருட் கைவல்யக்
குறியென் றுணரிலன்றிக் கூடலரும் பாதம். கருசு

588

எண்ணலரு மொன்று மிரண்டற்ற தன்னுருவே
வண்ணமிலா மோனவருள் வாலறிவாம் பாதம். கருஎ

589

அஞ்ஞான மோக வலமரல்செற் றென்னகத்து
மெய்ஞ்ஞான வாழ்வா விளங்குசிவ பாதம். கருஅ

590

அருட்சிற் பரத்தை யலாதெனக்கு மற்றே
ருருச்சற்று மின்றென் றுணர்த்தியபொற் பாதம். கருசு

591

அதிசுத்த மான வபரிமித மோனப்
பதியிற் கருத்தைப் பதிப்பித்த பாதம். கசo

592

நிட்டானு பூதி நிகழ்ச்சியா லன்றிமற்
றெட்டா தெவர்க்கு மியற்பரமாம் பாதம். கசசு

593

பேதமில்சாந் தானுபவப் பெற்றியால் வெற்றிசேர்
போதவெளி யானவருட் பூரணமாம் பாதம். கசஉ

594

திருவருட் போதத் தெளிவால் மயக்க
வெருவரல் போக்கிய மெய்ப்பொருட் பாதம். கசரு

595

அசுத்தமா மோக வகந்தை மனத்தை
விசுத்தமாத் தேற்றி விளங்குசிவ பாதம்: கசச

596

மற்றுங் ககன்று மனவுணர்வை யுள்ளொடுக்கிக்
கற்றுங்கு நிற்பார் கருத்திலொளிர் பாதம். கசரு

597

தாணு ரெனத்தன்மெய் சாதிக்கிற் றன்சொருப
ஞானு னுபூதியா நண்ணுமியற் பாதம். கசசு

598

உள்ளதே நாணு வொளிர்சொரு பானுபவ
வெள்ளமா மோன வெளியான பாதம். கசஎ

599

சிற்பரவாழ் வான சிவானுபவ மோனவருட்
கற்பகமா நானுளத்திற் கண்டுகொண்ட பாதம். கசஅ

600

அறிவுக் கறிவா வகமகமென் றென்னுட்
பிறிவறநிற் கின்ற பெருங்கருணைப் பாதம். கசகூ

601

உள்ளமே கோயிலா வுள்ளலற் றுள்ளதா
லுள்ளமென் றேமறை யோதுமெய்ப் பாதம். கநo

8. ஆண்டான் அடிச்சிறப்பு

(கலி வெண்பா)

602

ஊனமின் ருக வுயிர்த்தொகையைக் காத்திடுமெய்ஞ்
ஞானபண் டாரகுரு நாதனடி—வானவரும்
போற்றி வணங்குமடி பொங்குசுக வாரிதியாத்
தேற்றிமெய் யன்பர் திளேக்குமடி—நாற்றிசையும்
கூடுநடுத் தானமாக் கொஞ்சிக் குலாவுமடி
ஈடு மெடுப்பு மிலாதவடி—வீடு
துருக்மா வுள்ளதுதற் சோதனேயா லன்பர்
சொருபமே யாகத் துலக்கும்—விருபவிழிச்
செம்மலடி ஜிவன் சிவலிங்க மாத்திகழப்
பொய்ம்மயல் போக்குசிவ போதனடி—வெம்மைசேர்
மாளுபி மான மயக்ககற்றும் மெய்ஞ்ஞான
மோனனு பூதி முகத்தனடி—தானுன
தன்மயமா விவ்வுலகைத் தாங்குமடி சுத்தசிவ
தன்ம சொருபமாத் தங்குமடி—பன்மையனேத்
துள்ளு மொருமையா வுற்றவடி உள்ளத்தே
யுள்ளமா வுள்ள வொருவனடி—கள்ளமனத்
தாப மகற்றுமுப சாந்தவருட் சோதியடி
பாப மனேத்துமறப் பாற்றுமடி—தாபரமா
லிங்கவுருக் கொண்டவடி லேசமுமே துக்கமற
எங்கு மனேந்தியல்பே ரின்பவடி—மங்களமாய்

என்றுங் கொலுவீற் றிருக்குமடி எல்லோர்க்கும்
தொன்றுதொட் டுள்ள சொருபவடி—ஒன்றிரண்டென்
றோதுவார் வாத வுரைகடந்த மோனவடி
தீதுசே ராதபர தெய்வவடி—பேதுபடு
பேதவா திக்குப் பெருந்தூர மானவடி
போதமோ னத்திற் பொருந்துமடி—நீதவருட்
பார்வையாற் பாச விமோசனம் பண்ணுமடி
ஆர்வமுறத் தக்க வமுதனடி—கூர்வசியச்
சொக்கக் குழகனடி சொற்பரமன் றுகவெறுந்
தர்க்கக் கருத்தைத் தகையுமடி—சிக்கெனவே
தேடமிகத் தக்கபெருந் தெய்வவருட் செல்வவடி
கேடருமெய்ஞ் ஞானக் கிளர்ச்சியால்—பாடமிகச்
செஞ்சொ லெனக்குச் சிறக்க வளிக்குமடி
அஞ்சலஞ்ச லென்றெனைநன் காண்டவடி—நெஞ்சிலமர்ந்
தன்புசிவ மாக வனுபூதி யானவடி
தன்பரமா வென்னுயிரைத் தாங்குமடி—அன்பை
நினைக்க நினைக்கவென் னெஞ்சம்பூ ரிக்கத்
தனக்குறவா வென்னைத் தழுவி—நினைக்கப்
பொருத்தமில் லாதமனப் புல்லியே னுள்ளத்
துருத்தநோக் காலூ டுருவிக்—கருத்தாற்
கணிக்கலா காதவருட் காட்சியளித் தென்னை
யணுக்கனு வாண்டா னடி. க

முன்னுரை

மலர்தலை ஞாலத்தில் அலைகடல்போன்ற வுலகியலூடே யமிழ்ந்தொழியாமல் அவிச்சைவடிவான வகப்புறப் பற்றுக் களையும் அவற்றின் விளைவான வனர்த்தங்களையு மகற்றி, (உண்மையுணர்தற்க ணூரங்கொண்ட வார்வமும் குற்றநோக் கத்தாற் புலநுகர்ச்சிக்கண் வேட்கை யொழிவும் சாலாத மிகப்பலரான மந்தமத்திமாதிகாரிகட்குப் பிரதானமாக வுரிய வியாவகாரிக திட்டியைப் பூர்வபக்ஷமாக வனுவாதம்பண்ணிச் சிச்சடக்கிரந்தி வடிவான அகந்தைமதிக்குப் புலனு மகிலத் தோற்றத்தால் அவ் வெல்லாவற்றோடு மொருங்கியைந்தாற் போல ஞான நூல்களிலும் ஆங்காங் கான்றோராற் பிரசித்த மாகக் கூறப்படினும் உள்ளபடி அத்துவித ஸச்சித்தான ஏகான்ம சொருபமாந் தன்னைத் தவிர்த்துத் தனக்கயலாக யாதுமே யின்மையிற் பாரமார்த்திகத்தி லொன்றோடுஞ் சற்று மியைபின்றி யசங்கமாய் அசைபடக்காட்சியி லாதாரத்திரை போற்) கேவலசொருபமான சிற்பரஞானமுஞ் சித்தோப சாந்தியும் தமக்குப் பாலித்துதவிய வாண்டான் கழல்,— அதன் சொருபமான அருள்—அவ்வாறே மற்றை யடியார்க் கும் பிறவித்துன்பத்துக் கேதுவாகப் பிரமாதத்தா லுண்டான கலக்கமலக்கங்களை மனத்தினின்று கடிந்து சுத்தஞான சொருபானுபவத்தால் மறவா நினையா மகிழ்ச்சி வடிவான மாண்பதந் தருவதாமென, தாமடைந்த பேற்றை அதற்கு நிதரிசனமாக்கி ஆசிரியர் கூறுகின்றார், இவ் வாண்டான் கழலெழுபதும் அடுத்துவரும் அருளெழுபதும் என்க.

அர்ப்பணம்

நேரிசை வெண்பா

603

என்மையல் போக விதயத் தெழுந்தருளித்
தன்மையி னுண்மைநிலை சார்வித்த—நன்மையால்
ஆண்டான் கழலெழுப தாண்டா னருளெழுப
தாண்டான் கழற்கர்ப் பணம்.

9. ஆண்டான் கழலெழுபது

I பாயிரம்

604

ஆண்டான் கழலின் சொரூபம் உண்மையிற்
பரவெளியேயா மெனல்

உருவாப் புலப்படினும் உண்மைதேர் பார்ப்பார்க்
கருவாம் பரவெளியே யாமால்—குருவாச்
சதிரோங்க முன்னின்றே சச்சிதா னந்தக்
கதிரோங்க வாண்டான் கழல். க

605

தன்னிழப்புற்ரு ருள்ளத்தில் இறைவன் கழல்
இன்புருவாகத் தங்குமெனல்

தன்னுளத்தோ டொப்பச் சரிக்குமனப் பான்மைசேர்
தன்னிழப்பூ டின்பமெழத் தங்குவதாம்—என்னுளத்தே
சிற்பரமா னந்தமுறத் தேக்குங் குருரமணக்
கற்பகமா வாண்டான் கழல். உ

606

அன்பரகத்திற் பிரிவற்ற வின்பம் பிறக்க
ஆண்டான் கழல் ஆங்கே அமருமெனல்

தன்னிற் பிரிவிலாத் தன்மைசே ரின்பமகிழ்
தன்னன்பர் சாரவுளந் தங்குவதாம்—தன்னிற்
றிளைப்புறுபே ரின்பஞ் செழிப்பித்துச் சிந்தைக்
களைப்பொழிய வாண்டான் கழல். ங

607

அடியர் அவிச்சைப்பிணிக்கு ஆண்டான் கழல் அருமருந்தெனல்

நித்த(ம்) மகிழ்ந்து நினைந்துருகு(ம்) நெஞ்சருற்ற
மத்தமற மாற்று(ம்) மருந்தாமால்—சித்தம்
தறைப்படுபுன் மோகச் சலவிடயப் பற்றுற்
கறைப்படா தாண்டான் கழல். ௬

II தடைநீக்கம்

608

ஆண்டான் கழல், தன் அருள் விஞ்சையால் அடியர்பாலுண்டான அஞ்ஞான மயக்கம் அகற்றுமெனல்

வீறியமெய்ஞ் ஞானவருள் விஞ்சையால் அன்பருளத்
தேறியவஞ் ஞானவிரு ளெற்றுமால்—சீறிக்
குருடனு வென்மதியைக் கொன்றமயல் பொன்றக்
கருடனு வாண்டான் கழல். ௧

609

அடியர் கற்பனைக்காட்சியிற் கலங்காமல், ஆண்டான் கழல் அவரகத்தில் அவிச்சையிருள் அகற்றுமெனல்

பொய்ஞ்ஞாலக் காட்சியிற் பொன்றுதே செஞ்சுடராய்
அஞ்ஞானக் கங்கு லகற்றுமால்—மெய்ஞ்ஞானப்
பட்டயவா ளீந்தெனக்குப் பைந்தமிழிற் பாடுந்தன்
கட்டியத்துக் காண்டான் கழல். ௨

610

அடியர்பாற் பேதைமையா லுண்டான பிழை பொறுத்து, ஆண்டான் கழல் அவர்க்கு மெய்யுணர்வு கூட்டுமெனல்

மன்னியமெய் யன்பரை மன்னித் தபசாரந்
துன்னிருள்சாய்த் துண்மை துலக்குவதாம்—இன்னருளாற்
பொய்யனென் றெள்ளிப் புறக்கணியா திந்தமடக்
கையனைநன் காண்டான் கழல். எ

611

ஆண்டான் கழல் அடியர்க்கு உண்மை விளக்கமுற அகப் பிரமாதம் அகற்றுமெனல்

விடியாநின் றுண்மை விளங்கலுறக் காமங்
கடியாநின் றற்றமறக் காக்கும்—அடிநாயேன்
மாண்புறவென் னுள்ளத்து மன்னுபெருந் தன்னொளியைக்
காண்புறநன் காண்டான் கழல். அ

612

ஆண்டான் கழல், அடியார்க்கு உண்மை யுணர்ச்சியால் உள்ளக் கலக்கம் அகற்றுமெனல்

ஒன்றான வுண்மை யுணர்ச்சியால் அன்பருளத்
தின்றுத் தெருமரலை யெற்றுவதாம்—பொன்று
நிலவரமா முண்மையையென் னெஞ்சுறுத்திப் புந்திக்
கலவரந்தீர்த் தாண்டான் கழல். கூ

613

ஆண்டான் கழல், துர்க்குறியான அகந்தையைத் தொலைத்து, அன்பரகத்தே சுகசொரூபமாகத் தோயுமெனல்

முன்னருற் பாதமா மூண்ட முனைப்பையெற்றி
நன்னலப்பே ரின்புருவா நண்ணுவதாம்—தன்னருட்பே
ராவலா லேய்ந்த வடியனே ணருயிர்க்கோர்
காவலா வாண்டான் கழல். க0

614

ஆண்டான் கழல், தன்னை யடைந்தார்க்குத் தண்ணிலாவாகத் தாபமகற்றுமெனல்

நண்ணலு(ம்)மெய் யன்பர் நலிவகற்றி நல்லமதித்
தண்ணிலவா முற்றத் தலையளிக்கும்—எண்ணலு(ம்)நான்
அட்டியா தென்னுள்ளத் தண்ணிக்குந் தீங்கருப்பங்
கட்டியா வாண்டான் கழல். கக

615

ஆண்டான் கழல், நானு ரென்னும் ஞானவிசாரணையால் அடியார் கலியகற்றுமெனல்

அன்மைசே ராணவநா னுரெனத்தற் சுட்டுவித்து
வன்மைசேர் பாழ்க்கலியை மாற்றுவதாம்—தன்மெய்ந்
நிலைதேற வுய்த்தகத்து நீடியமா மோகக்
கலிதீர வாண்டான் கழல். கஉ

616

அறிவுருவான ஆண்டான் கழல், அடியரகத்துண்டான பொய்ம்மயக்கம் போக்குறுமெனல்

மேலவச் செய்கை விளையாதே பொய்ம்மயக்க
மூலவிச்சைத் தான்வறுத்து மொக்குவதாம்—மாலவிச்சைப்
பொய்க்கணியாத் துன்றுமென் புந்திப் புலத்தொளிசேர்
கைக்கனியா வாண்டான் கழல். கரு

617

ஆண்டான் கழல், அடியர்தம் ஜீவபோத முனைப்பை அகண்டமான சிவபோதத்தால் அடர்க்குமெனல்

உகண்டெழா துள்ளத் தொடுங்கவகப் பேயை
அகண்டசிவ போதத் தடர்க்கும்—அகண்ட
சொருபவொளி யான சுவானுபவத் தாலென்
கருவமற வாண்டான் கழல். கச

618

ஆண்டான் கழல், தன்னை நம்பி யடைந்த ததியர் கர்த்தத்துவ புத்தியைத் தகர்த்தெறியு மெனல்.

தன்னுள்ளி வந்த ததீயர்கர்த் தத்துவத்தை
முன்னெள்ளி முற்ற முறியடிக்கும்—என்னுள்ளத்
தாணியா வூன்றித்தன் ஞற்றலால் யான்வெறுங்கண்
காணியா வாண்டான் கழல். கஙி

619

ஆண்டான் கழல், அடியர் பொருட்டு வினைப்பகையைச்
சாடி வெற்றிமுரசு எறியுமெனல்

அன்பொடுதன் பாலே யடைந்தார் வினைப்பகையை
மொய்ம்புடைய வென்று முரசெறியும்—என்பாற்
பிணக்குற் றெழுந்தவல் வெவ்வினையின் பண்டைக்
கணக்கொழிய வாண்டான் கழல். கசு

III கொடையாக்கம்

(i) பொது

620

ஆண்டான் கழல், அடியர்தம் சித்தக் கலக்கந்
தெளிவித்துப் பாவநாசம் பண்ணுமெனல்

திளைத்தமெய் யன்பர் திகையாதே சித்தந்
தெளித்துவெம் பாவமறத் தீர்க்கும்—உளத்து
நழுவா தருளியமெய்ஞ் ஞானமே மிக்க
கழுவாயா வாண்டான் கழல். கஎ

621

ஆண்டான் கழல், அடியர்பால் அவப்பணி யகற்றித்
தவப்பணி தருமெனல்

அவப்பணியா மாணவச்சுட் டாற்றலறச் சாடித்
தவப்பணியா லின்பமுறத் தாங்கும்—சிவப்பணியை
வற்புறுத்தி மெய்யன்பில் வாடா தொளிர்ஞானக்
கற்புறுத்தி யாண்டான் கழல். கஅ

622

ஆண்டான் கழல், அடியரைப் பிறப்பி லழுந்தாமல்
அருட்கண் ணேக்குமெனல்

படிமி துழன்றுவெம் பாவப் பிறப்பிற்
படியா தடியரைக்கண் பார்க்கும்—அடியேன்
வெருக்கொளா வாறு வெறுவிதா மோகக்
கருக்குழிதூர்த் தாண்டான் கழல் கசு

623

ஆண்டான் கழல், அருட் பார்வையால்
அடியார்க்கு மெய்ஞ்ஞான மடைவிக்குமெனல்

காமாரி யானவருட் கண்ணேக்கச் செங்கதிரால்
ஆமாறு ஞான மடைவிக்கும்—காமாதித்
தெவ்வையடர் ஞானவெற்றிச் சீரொளியிற் புன்மயக்கக்
கவ்வையற வாண்டான் கழல். உ0

624

ஆண்டான் கழல், ஆபத்தடையாமல்
அன்பர்க்கு அருள்பாலிக்குமெனல்

தொற்ருபத் தென்றுந் தொடராது நம்பித்தற்
பற்ருர்வத் தோரைநனி பாலிக்கும்—முத்தாபத்
திப்பாற்றித் தண்ணருள்செய் சித்தோப சாந்தத்தாற்
காப்பாற்றி யாண்டான் கழல். உக

625

ஆண்டான் கழல், துரியவாழ்வில்,
அன்பர்தம் மனக்கவல் கெடுத்து மகிழ்ச்சியளிக்குமெனல்

வெளித்துரிய வாழ்வில் வியாகுலத்தைச் செற்றுக்
களித்தலுறக் காதலரைக் காக்கும்—உளத்தை
வெறுவிதாப் போர்த்த வியாமோகப் பாழைக்
கறுவியடர்த் தாண்டான் கழல். உ௨

626

ஆண்டான் கழல், அடியர் மனத்தைக் கவர்ந்து
அருட்பரவெளியாக விளங்குமெனல்

கூரன்ப ருள்ளங் குதூகலிக்கப் புன்மனத்தைச்
சோரம் புரிந்துவெளித் தோன்றுமால்—பேரின்ப
வெள்ளனு வென்னுளத்தை வித்தகமாக் கொள்ளைகொண்ட
கள்ளனு வாண்டான் கழல். உ௩

627

ஆண்டான் கழல், அசஞ்சலமான சரந்தியுண்டாக
அன்பருக்கபயமளிக்குமெனல்

நெஞ்சிலுஞ்ச லாட்டமற நிம்மதிதந் தன்பருளத்
தஞ்சலஞ்ச லென்றுங் கருள்வழங்கும்—சஞ்சலஞ்சேர்
சங்கையற நல்கியதன் சாந்தவருள் என்னுளம்பாய்
கங்கையா வாண்டான் கழல். உ௪

628

ஆண்டான் கழல், அறவோரான அன்பரகத்தில் அருளமுதம் தேக்குமெனல்

அறத்திலே யூன்றியமெய் யன்புசா லான்றோர்
திறத்தே யருளமுதந் தேக்கும்—புறத்தில்
உடல்காட்டி நின்றே யுளத்திற்பே ரின்பக்
கடல்காட்டி யாண்டான் கழல். உஅ

629

ஆண்டான் கழல், அருளமுதத்தால் அன்பரகத்தை இன்புறுத்துமெனல்

அளித்தேற லான்மெய் யடியா ரகத்தைத்
தெளித்தே சிவானுபவஞ் சேர்க்கும்—வெளித்தோற்றும்
மெய்ப்படமுன் னின்றே விளங்கொளிசே ரின்பவகம்
கைப்படநன் காண்டான் கழல். உசு

630

ஆண்டான் கழல், அன்பர்தம் பிழை பொறுத்து அவர்க்குப் பெருநலஞ் செய்யுமெனல்

பொல்லாங் கனைத்தும் பொறுத்துமெய் யன்பர்க்கு
நல்லாங் கியல்சுபங்கள் நல்குவதாம்—பொல்லான்
விருத்தனிவ னென்று விலக்கா திரங்கிக்
கருத்தினில்வந் தாண்டான் கழல். உள

631

**ஆண்டான் கழல், உபாசிக்கு மடியார்க்கு
உண்மைசேர் ஆக்கமளிக்குமெனல்**

ஊக்கமே லீட்டா லுபாசிக்கு(ம்) மெய்யடியார்க்
காக்கமேன் மேலு மளிப்பதாம்—யார்க்குமே
சாமியா நின்ருன் சதியா வெனைத்தனக்குக்
காமியா வாண்டான் கழல். உஅ

632

**ஆண்டான் கழல், அடியரை விரும்பியேற்று
அவருயிர்க்கு உரன்செய்யுமெனல்**

ஈன்ரு ரினுமிக் கிரங்கி யெளியரைநன்
கேன்ரு தரித்துறுதி யிவதாம்—சான்ரூோரால்
அம்பலையுற் றேங்கி யழிந்தவென் புன்கண்ணீர்க்
கம்பலைதீர்த் தாண்டான் கழல். உகூ

633

**ஆண்டான் கழல், ஆராதிக்கும் அடியார்க்குக்
கல்வி கேள்விகளோடு சொல்வன்மை தருமெனல்**

அவையேறு கல்வியறி வான்றமைந்த கேள்வி
சுவையேறு சொல்வன்மை நல்கும்—சவைதேர்
செவியார்ந்த கேள்வியிலேன் சிற்பதத்தைப் பாடும்
கவியாக வாண்டான் கழல். ௩0

634

ஆண்டான் கழல், பேதையர் மேதையராக
அவர்க்கு உள்ளுணர்வுறுத்துமெனல்

பேதையரா மன்பர் பிறங்குஞா னுனுபவ
மேதையரா விஞ்சை விளக்குமால்—பேதைமனக்
கேதனு மென்னைத்தன் கேள்வியாற் ரேட்புற்ற
காதனு வாண்டான் கழல். ௬௧

635

ஆண்டான் கழல், அன்பர் கற்பனையிற் கலங்காது
சற்போதத்தில் அவரைச் சால்புறுத்துமெனல்

ஏதத்திற் சிந்தையினைத் தேங்கா திரண்டறுசற்
போதத்தி லன்பரைமீப் பொங்குவிக்கும்—பேதத்திற்
ருழ்ப்புரு தேதன் சமரசமெய்ஞ் ஞானத்திற்
காழ்ப்புறநன் காண்டான் கழல். ௬௨

636

ஆண்டான் கழல், அன்பரகத்தில் அவிச்சையிருள் கெட
மெய்ஞ்ஞான வொளி வீசுமெனல்

சூரியமா மோகங் குலைந்திடமெய் யன்பர்பால்
வீரியமெய்ஞ் ஞானவொளி வீசுமால்—சீரியஞா
ஞரியனு முன்னின் றடியேனை யாதரஞ்சேர்
காரியமா வாண்டான் கழல். ௬௩

637

ஆண்டான் கழல், அன்பர்தம் சுட்டறிவு வெட்க அருள்வெளியாக அதிக்கிரமிக்குமெனல்

தட்கு மகந்தைமலச் சஞ்சலஞ்சேர் சுட்டறிவு
வெட்க வருள்வெளியா விஞ்சுவதாம்—உட்கி
விலவிலக்க வென்னுயிரை வீக்கியவன் மையல்
கலகலக்க வாண்டான் கழல். ௩௪

638

ஆண்டான் கழல், அன்பர்க்கு மௌனோபதேசத்தாலே மாட்சியளிக்குமெனல்

சாதனைசெய் யன்பரைத்தன் சந்நிதியின் மோனவருட்
போதனையாற் பொக்கமறப் பொற்புறுத்தும்—வாதனையால்
மைப்புரு நின்றமன மையற் படிறனெனக்
கைப்புரு தாண்டான் கழல். ௩௫

(ii) ஞானம்

639

ஆண்டான் கழல், அடியார்க்கு உள்ளக்கவல் கெட உண்மை யுணர்வளிக்கு மெனல்

ஆகமக மென்றுங் கழுங்கு மகந்தைமனச்
சோகமற வுண்மை துலக்குங்காண்—மோகமதிச்
சுட்டறுத் தங்கட் சுடர்வாளால் வன்பாசக்
கட்டறுத் தாண்டான் கழல். ௩௬

640

ஆண்டான் கழல், அடியர்தம் பிறவித்துன்பம் அகல
அவரகத்தில் உண்மை யுணர்த்துமெனல்

கருக்கடைக்கண் ணின்றடியர் கண்கலங்கா துள்ளத்
தொருக்கமுடை யுண்மை யுணர்த்தும்—திருக்கடைக்கண்
வேல்வாங்கி யாங்கே வினையென் னகத்தினின்று
கால்வாங்க வாண்டான் கழல். ௬௭

641

ஆண்டான் கழல், உள்ளூரத் தன்னை யுபாசிப்பார்க்கு
உள்ளவாறே உண்மை யுணர்த்துமெனல்

உண்முகமாத் தன்னை யுபாசிப்பார்க் குள்ளபடி
உண்மையைநன் குள்ளத் துணர்த்துவதாம்-உண்மயல்போய்
மண்மயமாத் தொக்கபல மட்கலம்போற் காண்பவெலாம்
கண்மயமா வாண்டான் கழல். ௬௮

642

ஆண்டான் கழல், தருமதயாதத்துவம் சார்ந்த வுள்ளத்தே
சுத்தஞானம் சுடர்விக்குமெனல்

தன்னளத்த லில்லாத் தருமதயா தத்துவ(ம்)மீத்
துன்னுளத்து ஞானஞ் சுடர்விக்கும்—என்னுளத்துச்
சாலத்தன் னின்னருளாற் சார்ந்தபரி பாகசம
காலத்தி லாண்டான் கழல். ௬௯

643

**ஆண்டான் கழல், அடியர்பாற் பேதஞானப் பிழையகற்றி
அபேதமான மெய்ஞ்ஞானநிலை யளிக்குமெனல்**

அன்னியச்சுட் டாட்சி யறப்பாற்றி யத்துவித
நன்னயமெய்ஞ் ஞானநிலை நல்குமால்—என்னகத்தின்
மாலையா மத்து மயக்கமறத் தான்புலரிக்
காலையா வாண்டான் கழல். ௪௦

644

**ஆண்டான் கழல், அடியார் துவிதமோகந் துரந்து
சிவாத்துவித ஞானம் தெளிவுறுத்துமெனல்**

துவாத்துவித மோகமறத் தன்மயமா வோங்கு
சிவாத்துவித ஞானவொளி தேற்றும்—அவேத்தியமா
எண்காத மன்றி யிதயத் தியல்பாவென்
கண்காண வாண்டான் கழல். ௪௧

645

**ஆண்டான் கழல், அடியார்க்கு அகந்தை முனைப்பற்ற
அத்துவிதபோதம் புகட்டுமெனல்**

ஏதமலி தொந்த மியைந்தமுனைப் பற்றொளிர்சற்
போதமடி யார்க்குப் புகட்டுமால்—பேதமதிச்
சுட்டுணர்வற் றுள்ளத்துட் சும்மா பொதிந்தடங்கென்
கட்டுரையா லாண்டான் கழல். ௪௨

646

ஆண்டான் கழல், ஜீவபோதச் செருக்கழித்து சுத்தஞான சொரூபநிஷ்டை அடியார்க் களிக்குமெனல்

ஊன வகந்தை யுணர்ச்சியைச்சுட் டொட்பங்கூர்
ஞான சொரூபநிட்டை நல்குங்காண்—மோன
வுரையேற்றி யுள்ளத் துறுதிசே ருண்மைக்
கரையேற்றி யாண்டான் கழல். சுங

647

ஆண்டான் கழல், சுஞ்ஞான சொரூபசித்தியால் உற்றுருளத்தை உலகமயக்கமறத் தெளிவிக்குமெனல்

சொந்தஞா னுன்ம சொருபசித்தி யாலுலகச்
சிந்தனு மோகமறத் தேற்றுவதாம்—அந்தனேன்
கண்ணுடையே னுகக் கடைக்கணித்த ஞானவருட்
கண்ணனு வாண்டான் கழல். சுஎ

648

ஆண்டான் கழல், அன்பர் அவிச்சையில் அமிழ்ந்தழியாது சொரூபஞானஞ் சுடர்விக்குமெனல்

விளியா திருட்கடலின் மெய்யன்பர்க் குண்மைத்
தெளிவாம் பரசொருபந் தேற்றும்—ஒளிசேர்
அருணைவாழ் வான வடிகளா வென்னைக்
கருணையா லாண்டான் கழல். சுஅ

649

ஆண்டான் கழல், அடியரகத்தே சச்சிதானந்த சொரூபசாக்ஷாத்காரந் தருமெனல்

மனாதிகளுக் கெட்டா மகத்துவஞ்சேர் சச்சிற்
கனோதயமா மின்பவுருக் காட்டும்—எனாதுகரு
மாலழுத்த மான மனத்தைப் பராற்பரமாம்
காலெழுத்தா லாண்டான் கழல். சசு

650

ஆண்டான் கழல், அடியரகத்தே நிலைக்கண்ணாடியாக அவர் நிஜசொரூபம் காட்டுமெனல்

உண்ணாடு மெய்யன்ப ருண்மையுருத் தேற்றுநிலைக்
கண்ணாடி யாவகத்திற் கானுமால்—மண்ணூடே
விண்ணுள நாயேன் வியன்பரந்தேர் வித்தவருட்
கண்ணுளன் செம்பொற் கழல். சஎ

(iii) இன்பப் பயன்

651

ஆண்டான் கழல், ஆணவப்பே யாட்டங்கெட அடியர்க்குப் பரசுகம் பாலிக்குமெனல்

மதமிக்க வாணவப்பேய் வல்லாட்டு மாளப்
பதமிக்க வின்பம் பயக்கும்—கதமிக்க
துட்டனா மென்னகந்தைத் துள்ளலறக் கண்ணோக்கிக்
கட்டமற வாண்டான் கழல். சஅ

652

ஆண்டான் கழல், திடஞானத்தால் அடியர்க்குச் சாசுவதமான வீட்டின்பம் சார்விக்குமெனல்

உரமான வுண்மை யுணர்ச்சியால் உய்தித்
திரமான வீட்டின்பஞ் சேர்க்கும்—பிரமாதப்
பேதைமையால் யானுற்ற வெம்பிறவிப் பீழைவெறுங்
காதையா வாண்டான் கழல். ௪௯

653

ஆண்டான் கழல், ஆன்மசொரூபம் அறிவொளிமாத்திரமாக அடியரைத் தேற்றி, அவர்க்குத் துன்பமற்ற வின்பஞ் சுரக்குமெனல்

மயரறுமெய்ஞ் ஞானவொளி மாத்திரமாத் தேற்றித்
துயரறுபே ரின்பஞ் சுரக்கும்—உயிரை
அழற்றியெழு தாபமற வாபாச கோசம்
கழற்றியெனை யாண்டான் கழல். ௫௦

654

ஆண்டான் கழல், அடியரகத்தே, அவரிறுமாக்க இடைவிடாவின்பம் சுரக்குமெனல்

இடரற் றடியருளத் தேமாப்ப நாளுந்
தொடர்வுற்ற போகஞ் சுரக்கும்—படருற்
றளியனுன் பொய்யி லழுங்குரு துண்மைக்
களியனு வாண்டான் கழல். ௫௧

(iv) வாழ்க்கைப் பேறு

655

ஆண்டான் கழல் அடியரைத் தன்பாற்படுத்தி, அவர்க்கு இன்பவாழ்க்கை எய்துவிக்குமெனல்

அன்பாலே தன்பா லடைவித்துத் தன்மயப்பே
ரின்பான வாழ்வடியர்க் கெய்துவிக்கும்—தன்பாலே
சாந்தமா வென்மனத்தைத் தான்கவர்ந்து மிக்கவருட்
காந்தமா வாண்டான் கழல். ௫௨

656

ஆண்டான் கழல் அன்பரை அஞ்சலென்றருளி, தன்னருளாட்சியில் அவர்க்குப் பரவாழ்க்கை பாலிக்குமெனல்

அன்பரைத்தன் ஞட்சிக் ககப்படுத்தி அஞ்சலெனத்
தன்பரத்து வாழ்க்கையுறச் சார்விக்கும்—புன்புலத்தைப்
பெட்டலேயா துள்ளொளியைப் பேணென்று மோனவருட்
கட்டளேயா லாண்டான் கழல். ௫௩

657

ஆண்டான் கழல், அன்பரகத்திற் போதசொருபம் புணர்த்தி, அவர்க்கு அமரவாழ்க்கை அளிக்குமெனல்

புந்தமுதாம் போத சொருபப் புணர்ச்சிதந்
தத்தமியா வாழ்க்கையகத் தாக்குமால்—நித்தமாஞ்
செம்மைசேர் மங்கலநாண் சேர்த்தியென் கண்டத்தில்
கைம்மையுரு தாண்டான் கழல். ௫௪

658

ஆண்டான் கழல், ஐயமேற்றுண்ணும் அடியரகத்தில்
அழிவிலாச் செல்வம் அடைவிக்குமெனல்

கூழ்க்கையி லேந்திக் குடிக்கு(ம்)மெய் யன்பருளத்
தூழ்க்கையிலாச் செல்வ முறுவிக்கும்—வாழ்க்கை
பதராக வீண்பாழ் படாமலுயிர் திட்பக்
கதிராக வாண்டான் கழல். ருரு

659

ஆண்டான் கழல், அடியரகத்தில்
பிறவித்துன்பமறப் பெருவாழ்வளிக்குமெனல்

ஊனஞ்சே ருத்தை யுடற்பிறவித் துன்பமற
வானஞ்சேர் வாழ்க்கை வழங்குங்காண்—மோனஞ்சேர்
அம்பரமா நின்றஞா னன்ம சொருபத்திற்
கம்பமற வாண்டான் கழல். ருசு

660

ஆண்டான் கழல், அன்பர் ஆணவமலத்தி லழுந்தாமல்
அவரை மெய்யுணர்வில் வாழ்விக்குமெனல்

ஊனகமென் றூத்தைமலத் தூழ்த்தலறச் சிற்பாநல்
வானகமா(ம்) மெய்யுணர்வில் வாழ்விக்கும்—யானெனும்புன்
மங்குலா லீண்டு(ம்) மலக்கமா(ம்) மெய்ம்மறதிக்
கங்குலற வாண்டான் கழல். ருஎ

(v) முத்தி

661

ஆண்டான் கழல், தத்துவஞான வாயிலாக அடியார்க்குப் பரமபத மடைவிக்குமெனல்

தாக்கற் றியல்சொருப தத்துவ ஞானத்தான்
மேக்கற் றுயர்ந்தபத(ம்) மேவுவிக்கும்—நோக்கிற்
கடகாதி யாவுங் கனகமே யாகக்
கடவதா வாண்டான் கழல். ருஅ

662

ஆண்டான் கழல், அதீதமான சிவஞானபதம் அன்பரகத்தில் அத்துவிதமாக அளிக்குமெனல்

சித்துவமெய்க் காட்சிச் சிவபத(ம்)மெய் யன்பருளத்
தத்துவித மாக வளிப்பதாம்—தத்துவமேற்
ருண்டிநின் ரேங்கு சதாசிவமாந் தன்மபதம்
காண்டியென் ருண்டான் கழல். ருசு

663

ஆண்டான் கழல், அஞ்ஞானக் கலக்கமற அன்பரகத்தே சாந்தபதம் சார்விக்குமெனல்

துன்னிருள்கூர் மோகச் சுழற்சியறக் காதலரைத்
தன்னியல்சேர் சாந்தபதஞ் சார்விக்கும்—தன்னருளாற்
றெருண்டுபடு நாயேன் சொருபமாத் தன்னையுளம்
கண்டுகொள வாண்டான் கழல். சூ0

664

ஆண்டான் கழல், ஆணவத்தை யகழ்ந்தெறிந்து அடியரைத் தம்மபதம் சார்விக்குமெனல்

ஊனகந்தை யான வுடற்சிசே ராணவத்தைத்
தானகழ்ந்து தம்மபதஞ் சார்விக்கும்—தானுகந்
தேவலனு வென்னை யிறைபணியிற் கூட்டியுயிர்க்
காவலனு வாண்டான் கழல். சா௪

665

ஆண்டான் கழல், துவிதக் கலக்கமறக் கடிந்து அடியரைத் துரிய சொரூபத்தில் நிலைநாட்டுமெனல்

கனுவாந் துவிதமயற் காட்சியைச்செற் றுண்மை
நனுவாந் துரியநிலை நாட்டும்—கனுவால்
அலைத்தாட்டி வைத்த வவிச்சைத் துயிலைக்
கலைத்தோட்டி யாண்டான் கழல். சா௫

666

ஆண்டான் கழல், அடியர்தம் பாசபந்த மகற்றி அவர்க்குப் பரமுத்தி யளிக்குமெனல்

நிகழ்ந்தமெய் யன்பர்தந் நெஞ்சுறுவெம் பாசம்
அகழ்ந்துபர முத்தி யளிக்கும்—அகந்தைத்
தொடர்ப்பாடு தீரத் துறப்பித் துளத்திற்
கடப்பாடா வாண்டான் கழல். சா௬

667

**ஆண்டான் கழல், அபரோக்ஷமாக
அடியர்க்குக் கைவல்ய ஞானானுபவம் அளிக்குமெனல்**

தனக்கென் றெதுவுமிலாத் தன்ம சொரூபம்
இனைத்தென் றனுபவ(ம்)நன் கீயும்—எனக்கெளிதின்
மெய்கெடத் துன்று வினைக்கடலின் மீளவருட்
கைகொடுத் தாண்டான் கழல். ௬௪

(vi) சாந்தி

668

**ஆண்டான் கழல், சிவஞானவொளி சேர்வித்தலால்
அன்பரகத்தே ஆர்வம் மிக்க அமைதிதருமெனல்**

நன்சிவமெய்ஞ் ஞானவொளி நண்ணுவித்த லாலிதயத்
தின்சுவைமிஞ் சுள்ளமைதி யீவதுகாண்—முன்செய்
விருப்புவட்டா தென்னுளத்து மேன்மே லினிக்கும்
கருப்புவட்டா வாண்டான் கழல். ௬௫

669

**ஆண்டான் கழல், உண்மைவாழ்வால் உள்ளங்குளிர
அடியரகத்திற் பளிச்சிட் டொளிருமெனல்**

பளிங்கொளிபோ லுண்மை பளிச்சிடக்கண் டன்பர்
உளங்குளிர்வாழ் வோங்க வொளிரும்—விளங்கருட்பே
ராட்சியா லென்ற னகத்தே சுடர்சொருபக்
காட்சியா லாண்டான் கழல். ௬௬

670

ஆண்டான் கழல், விஷயபோக வேட்கைவெப்பந் தீர அடியரை அமைதிநீராட்டி அகங்குளிர்விக்குமெனல்

வெயர்க்கும் பரிதாப வேட்கையறத் தண்ணென்
றயர்க்கையறு மோனநீ ராட்டும்—உயிர்க்கு
நிழலா முபசாந்த நீர்மைநெஞ்சத் தென்றும்
கழலாதே யாண்டான் கழல். சுஎ

671

ஆண்டான் கழல், அடியார்க்குச் சிந்தாகுலமற்ற சித்தோபசாந்தி செழிப்பிக்குமெனல்

வெப்பமுறு மோக வியாகுலந்தீர் மெய்ஞ்ஞானச்
செப்பமுறு சாந்தி செழிப்பிக்கும்—ஒப்பமுறு
விண்மணியா வெங்கும் வியாபித்தே யென்னகத்தின்
கண்மணியா வாண்டான் கழல். சுஅ.

672

ஆண்டான் கழல், அடியர் மனமயக்கமற மாற்றி அவரகத்திற் கவலையற்ற சாந்தி கலப்பிக்குமெனல்

மனப்புன் கவல்சேர் மயக்கமற மாற்றி
நினைப்பரிய சாந்தி நிகழ்த்தும்— முனைப்பச்
சுலாமோக வாதனைச் சூதுசேர் துன்பக்
கலாமோய வாண்டான் கழல். சுகூ

673

ஆண்டான் கழல், அடியர் அகப்பேயை அகற்றி அவருளத்தில் உபசாந்தக்கடல் ஊறுவிக்குமெனல்

ஓட்டியகப் பேயை யுளத்திநின்று தன்சொருபங்
காட்டியுப சாந்தக் கடல்சுரக்கும்—ஆட்டி
யலைத்திடுவிக் கேபஞ்சு ராவரண மோகங்
கலைத்தெனைமிக் காண்டான் கழல். எ0

674

ஆண்டான் கழல், அடியரது தாபந் தணிய உவாமதிபோல் உபசாந்த முறுவிக்குமெனல்

சஞ்சலந்தீர் சித்தோப சாந்தநிலை மெய்யன்பர்
நெஞ்சிலிந்து போல நிகழ்த்துவதாம்—வஞ்சச்
சதிகாட்டு மாயைச் சதிரழியத் துன்றுங்
கதிகாட்டி யாண்டான் கழல். எக

ஆண்டான் கழற்சீர் அனவரதம் வாழ்க!

10. ஆண்டானருளெழுபது

நேரிசை வெண்பா

பாயிரம்

I. ஆட்சித்திறங்கூறல்

675

உதாரமா வோங்கு முபசாந்தத் துக்கோர்
நிதானமாந் தன்சந் நிதிக்கண்-மதாலசஞ்சேர்
வண்டெனு வின்ப மலர்ப்பதத்து வாழ்க்கையெனக்
குண்டெனு வாண்டா னுவந்து. க

676

ஆணவப்பே யாட்ட மகற்றினு னனந்தத்
தாணிழற்கே யென்னைத் தலையளித்தான்-நீணிலத்தே
வானகத்து வாழ்க்கையடைந் தூனகத்தே பாய்ந்ததென
யானகத்தே வாழ வினிது. உ

677

தன்னையலால் யானொருவன் சார்வதாப் பேதுற்ற
என்னிதயக் காரிருளை யெற்றினுன்-மன்னியதன்
சச்சிதா னந்த சமத்திலே மற்றனைத்தும்
பொய்ச்சதா லுள்ளம் புலர்ந்து. ௩

678

கூரவா வாய்த்துக் குதூகலித்து மற்றையார்
ஆரவா ரிக்க வடியேனான்-பார
வருட்பெற்றி யாலே யகந்தெளிந்து மோனத்
திருப்புற்றே னாட்கீ ழினிது. சா

II. ஆண்டானருட்பேற்றைக் கொண்டாடல்

679

தப்புவ தல்லாத் தலைவனருள் என்னையடிக்
கொப்புவ தாயிற் றுழையருள்ளே-செப்புவதற்
கேலா ததனா லெளியே னடைந்தமகிழ்க்
கோலா கலத்தின் குலா. ரு

680

யாதோர்சிந் தாகுலமற் றென்பாற்பே ரின்பமா
வாய்தோறன் ணிக்கு மமுதனருள்—சூதோர்வார்
நெஞ்சம்புற் கென்றிருள நீடுதன்மெய் யன்பரகங்
கொஞ்சும்பே ரின்பக் குலா. சா

681

குமனமாம் பாசக் கொழுந்தழல்செய் தாபம்
சமனமா யின்பந் தழைத்தேன்—ரமண
வுடையா னருட்கண் ணொளிக்கடல்வா யாடிக்
குடையாநின் றுள்ளங் குளிர்ந்து. எ

III. நூற் சிறப்பு

682

உருவா வருவா வுருவருவா வோங்குங்
குருவா மொளிரமணக் கோமான்—திருவருள்பொங்
காண்டா னருளெழுப தன்பர்க் கநுபூதி
தூண்டாநிற் குங்கருத்திற் றேய்ந்து. ௮

IV. நூற்பயன்

683

ஈண்டவே கற்போ ரினிதா ரமணப்பே
ராண்டா னருட்சீ ரமைந்தொளிர்வார்—வேண்ட
அளிதரும்பே ராண்டா னருளெழுப தென்ற
களிதருதீம் பாவைக் கனிந்து. ௯

நூல்

I. அருளிலக்கணம்

நேரிசை வெண்பா

684

திருவருள் சிவபோதத்தால் அனுபவிக்கப்படுவதன்றி, ஜீவபோதத்துக் கெட்டாதெனல்

அப்படியென் றிப்படியென் றுணவத்தோர் சுட்டுவதற்
கெப்படியு மில்லா வியல்பிற்றால்—முப்புடியும்
புற்புதத்தோ டொப்பப் புணர்வனவாத் தான்கடலாம்
அற்புதச்சி ரம்மா னருள். ௬

685

திருவருள் கற்பனைகடந்த இயல்பிற்றெனல்

பேச்சற்றுக் கற்பனையின் விச்சற்றுப் பேதமதி
நீச்சற் றுயர்ந்த நிலைமைத்தே—நாச்சற்றும்
சொல்லலறு மோனத் துலக்கத்தான் மாலவிச்சை
யல்லலற வாண்டா னருள். ௨

686

திருவருள் புலனுணர்ச்சியைக் கடந்ததெனல்

காட்டுக் கரிதுபுலங் காண்பரிது கேட்பரிது
தேட்டுக் கரிதுசிந் திப்பரிது—வீட்டு
நிலைக்கணுறு சாந்த நிறைவளத்தால் ஆசை
யலக்கணற வாண்டா னருள். ௩

687

திருவருள் வஞ்சவிருள் கடியும் ஞானவிளக்காமெனல்

மாதிமைசேர் வஞ்ச வழக்கழிய மன்னுந்தன்
மீதிமையா விஞ்சை விளக்கமாம்—பேதைமையால்
ஆவியாத் துன்று மகந்தையைச்செற் ருங்கதற்கோர்
ஆவியா வாண்டா னருள். ௪

688

திருவருள், பிறவனைத்தும் தன்னிற் கற்பிதமாக அவற்றுக்கெல்லாம் ஆதாரமான அறிவொளியாமெனல்

பற்பலதிட் டாந்தம் பகர்வதெவன் யாவுமொளிக்
கற்பலகை யாமதன்மேற் கற்பிதமாம்—அற்ப
வெழுத்தோ வியங்களா வேய்ந்த மனத்தை
யழித்தென்னை யாண்டா னருள். ௫

689

திருவருள் மெய்யன்பரைத் தன்னிடமாகத் தாங்குமெனல்

புகலிடமா மெய்யன்பின் பூட்கைசேர் புந்தித்
தகவினரைத் தன்னகத்தே தாங்கும்—இகலி
இடையூர் வினையை யிடித்துமற் றென்னை
அடைவாக வாண்டா னருள். ௬

690

திருவருள் ஐந்தெழுத்துள்ளுவார்க்கு
உள்ளொளியாமெனல்

சிவாயநம வென்றுதினஞ் சிந்திக்குஞ் சீல
வுபாயத்தோ ருள்ளொளியா வோங்கும்—அபார
மகத்துவமா மோன மறைப்பொருளிவ் வேழை
யகத்தகமா வாண்டா னருள். எ

691

திருவருள் ஆசையற்றார்க்கு வற்றாத
அமுதவூற்றாமெனல்

மண்ணாதி யாசை வறந்தார்க்கு வற்றாத
உண்ணா ரமுதமகி ழூறலாம்—எண்ணாமல்
எண்ணிக் கருத்தமைபே ரின்பக் கழலிதயத்
தண்ணிக்க வாண்டா னருள். அ

692

திருவருள், அன்பரிதயத்தில், அவரெண்ணற்குமுன்,
'இதா'வென் றெதிர்ப்படுமெனல்

கண்ணைத் திறப்பித்துக் காதலர்க்குத் தன்னையுளத்
தெண்ணற்கு முன்னிதா யானென்னும்—கண்ணின்
நுணுக்கமாத் தன்பதத்தை நோக்குவித் தென்னை
அணுக்கமா வாண்டா னருள். கூ

693

திருவருள், ஆதாரங்களுக்கெல்லாம் மூலாதாரமாமெனல்

பற்றுக் கெலாமடிப் பற்ரு வுளனென்னத்
தெற்றத் தெளியகமாச் சேருமால்—மற்றவற்றுக்
காதியாத் தோன்று மகந்தை யெழுச்சிக்கும்
ஆதியா வாண்டா னருள். கஎ

694

திருவருள், உள்ளமே இன்பக்கடலாக ஒளிர்விக்குமெனல்

பொருந்தொளிசே ரின்பப் புணரியே தானுத்
திருந்துளமா முண்மைநிலே தேற்றும்—இருந்தொளிர்பே
ரின்பரு மோன வியல்சேர் பதத்திலெனக்
கன்பரு தாண்டா னருள். கக

695

திருவருள், அடியார்க்கு வேண்டும் பேற்றையருளி, அவரகத்தில் ஆல்போலத் தழைக்குமெனல்

யானடைந்த பேற்றைமற் றேனவர்க்குந் தம்முளத்துத்
தானடைவித் தால்போற் றழைப்பதாம்—மானகந்தைப்
போக்கையற மாற்றித்தன் போதத்தான் மோகஞ்சே
ராக்கையற வாண்டா னருள். கஉ

696

திருவருள், சொரூபவஞ்ஞானத்தைப்
பரிகசித்துத் தொலைக்குமெனல்

என்வியலை யானறியே னென்றடிய ரேங்குமதி
தன்னைநகை யாடித் தடிவதாம்—துன்னுமன
மாசறுஞ்சிந் மாத்திரமா மாண்சிரிப்பா லென்மடமைக்
காசியஞ்செய் தாண்டா னருள். கரு

697

திருவருள், தன்னைச் சிந்திப்பவர்க்கு
மோனநிலை தருமெனல்

தேனென்ன வுள்ளத்துச் சிந்திக்கு மன்பர்க்கு
வானென்னு மோன வரைப்பாமால்—யானென்னத்
தோற்றலுற் ருங்கே துடிக்கு மகந்தைமுனைப்
பாற்றலற வாண்டா னருள். கச

II. அருளிருக்கை

698

திருவருள், அடியார்க்கு ஞானவீட்டுரிமை
நல்குமெனல்

இன்னலத்துக் கெல்லா மிருப்பிடமா மெய்ஞ்ஞான
நன்னிலத்துக் கோருரிமை நல்குமால்—என்னுளத்தைக்
கூரளியா லின்பக் குதூகலஞ்சே ரின்னமுத
வாரொளியா வாண்டா னருள். கரு

699

திருவருள், அடியருளத்திற் சிற்பரவெளியாகந் திகழுமெனல்

சொரூபசுக போதந் துலங்க வுளத்தில்
விருபவெளி யாக விளங்கும்—அருப
வமுதவொளி யாலிவ் வனைத்துமொளித் தென்னை
அமைதியுற வாண்டா னருள். கசு

700

உதித்தவகந்தை ஒடுங்கும் உள்ளத்தில் திருவருள் காட்சியளிக்குமெனல்

நூலகத்தே நோக்கி நுடங்கு மகந்தையின்மூ
லாலயத்தே காட்சி யளிப்பதாம்—சாலரத்தூ
டோட்டமுறும் புன்புலச்சுட் டுக்கத்தை மாற்றியுளத்
தாட்டமற வாண்டா னருள். கஎ

701

திருவருள்—மறைகளாலும் கூறவொண்ணாதாயினும், அன்பரகத்தில் அநுபவமாக விளங்குமெனல்

அவாச்சியமே னுந்தா னருமறைக்கன் பர்க்குத்
தவாச்சிவமாத் தம்மிதயஞ் சாரும்—அவாச்செயிர்தீர்
உள்ளத் தலத்தூ டுபசாந்த போகமெனக்
கள்ளித்தந் தாண்டா னருள். கஅ

III. அருளளிப்பு

702

திருவருள், மயக்கவுணர்ச்சியை மாற்றி உண்மையுணர்ச்சி யுதவுமெனல்

பிதிர்சேர் மயற்காட்சி பேரத் துரீயச்
சதிர்சேர் விழிப்புத் தருங்காண்—எதிர்சேர்
நனந்தலைஞா லப்புலத்து நாட்டத்தின் மூல
வனந்தலைமாய்த் தாண்டா னருள். ௧௯

703

திருவருள், அடியரை வலியப்பற்றி அவர்க்கு மனமகிழ்ச்சி தருமெனல்

எட்டி யிகந்துதன்னை யேங்கா தடியவரோ
டொட்டியியைந் தோகை யுதவுவதாம்—நிட்டையுற
நெஞ்சிலொன் றாக நிகழ்த்தித்தன் ஞேடென்னை
அஞ்சலென் றுண்டா னருள். ௨௦

704

திருவருள், மெய்யன்பர்க்கு அவர் வேண்டிய போகந்தருமெனல்

கோணு துளத்துமகிழ் கூரமெய் யன்பர்க்கு
வேணவா முற்ற விளைத்துதவும்—காணு
துளைந்துநான் கூவ வுதுக்காணென் றுள்ளத்
தளைந்தென்னை யாண்டா னருள். ௨௧

705

திருவருள், மெய்யன்பர்க்குத் திருவடிநீழலிற் பேரின்பந் தருமெனல்

கள்ளங் கரவறுமெய்க் காதலர்க்குத் தன்கழற்கீழ்
உள்ளரும்பே ரின்ப முதவுவதாம்—உள்ளம்
திருந்துவதா யீண்டு சிவானந்தத் தேறல்
அருந்துவதா வாண்டா னருள். உஉ

706

திருவருள், அன்பரைக் குற்றமறக் கண்ணேக்குமெனல்

சீயென்னு தன்பரைத்தன் சேவடிக்கீ ழின்பமுற்று
நோயேத மற்றிடக்கண் ணேக்குவதாம்—நாயேனைக்
குற்றந்தீர்த் தின்பமுறக் கோதாட்டித் தன்கழற்கீழ்
அற்றந்தீர்த் தாண்டா னருள். உங

707

திருவருள், அன்பர்க்குப் பூரணமான அத்துவிதமாட்சி யளிக்குமெனல்.

துன்னியர்தந் தாழ்மையறச் சுட்டெரித்துத் தன்னினுமற்
றன்னியமில் சீர்மை யளிப்பதாம்—என்னைக்
கெடுக்கலுற்ற வாணவப்புன் கீழ்மையைச்செற் றன்போ
டுடுக்கலில்வந் தாண்டா னருள். உச

708

திருவருள், அன்பரகத்திற் பேரின்பப்பொருளை விளக்குமெனல்

நீச்சற்ற வின்ப நெகிழ்ச்சிசேர் தத்துவ(ம்)நன்
கேச்சற்ற வன்பர்க் கிலக்குவதாம்—பேச்சற்ற
போதனையா லுண்மைப் புலந்தெரித்துப் பொங்கொளியா
ஆதனையிங் காண்டா னருள். உ௬

709

திருவருள், அன்பர்தம் பிழைபொறுத்து அவர்க்கு மகிழ்ச்சிதருமெனல்

உன்னித்தன் பாத முவக்கின்றார் செய்பிழையை
மன்னித்தன் பாக மகிழ்செய்யும்—என்னைத்தன்
மார்பணைபே ரின்பநிலை மாட்சியான் மேன்மேலும்
ஆர்வமெழ வாண்டா னருள். உ௬

710

திருவருள், அன்பரகந் தூய்தாக அவர்க்குக் கழலொளி காட்டுமெனல்

அறத்துப் பணியாற்று மன்பரகந் தூய்தாந்
திறத்துப் பதவொளிமீத் தேற்றும்—புறத்துப்பல்
லாலயமே நோக்கி யலைந்தே னகமேநல்
லாலயமா வாண்டா னருள். உ௭

711

திருவருள், கன்மனத்தைக் கனிவித்துக்
காதலர்க்குக் களியூட்டுமெனல்

கன்மனத்தைச் சாலக் கனிவித்துக் காதலர்க்குத்
தன்மயப்பே ரானந்தந் தந்திடுமால்—புன்மலக்கா
ருழியிலூழ்த் தேனை யுளத்தொளியாந் தன்சிவப்பே
ராழியிலாழ்த் தாண்டா னருள். உஅ

712

திருவருள், அரும்பரம்
அன்பர்க்கெளிதாக அடைவிக்குமெனல்

அம்பரமா வோங்கு மரும்பரத்தை மெய்யடியார்க்
கிம்பரே மிக்கெளிதி லெய்துவிக்கும்—உம்பருமற்
றெண்ணலா காத வெழுச்சிப் பதமெளியேற்
கண்ணலா வாண்டா னருள். உகூ

713

திருவருள், திரண்ட வடியர்க்குத்
தாயரினுஞ் சாலத் தலையளிசெய்யுமெனல்

வான்றோ யுடுக்களினும் மல்கியதன் மாணடியார்க்
கீன்றோ ரினுமகிழ்ச்சி யீவதாம்—சான்றோர்
விரும்புவதாஞ் சிற்பதத்து மெய்யன்பென் னுள்ளத்
தரும்புவதா வாண்டா னருள். கூ0

714

திருவருள், அடிநினைந்தார் நெஞ்சத்தில்
அபரிமித சாந்தியளிக்குமெனல்

இலகுசீ பாதமகிழ்ந் தெண்ணினார் நெஞ்சத்
தலகுசால் சாந்தி யளிக்கும்—உலகூ
டுலேச்சலுறு சிந்தைதன் ஞெண்பதத்து வாழ்வால்
அலேச்சலற வாண்டா னருள். ௩௯

715

பக்தர் பாசத்திற்பட்டுப் பரிதவியாது
திருவருள், அவர்க்கு ஞானவிளக்கந் தருமெனல்

விழுங்குவெம் மாயையின் வெந்துநொந் துள்ளம்
அழுங்குரு தொட்ப மளிக்கும்—புழுங்கி
யவிந்திடா தாவி யகங்குளிர்ந்து தாட்கீழ்
அவிர்ந்திடநன் காண்டா னருள். ௩௨

IV. அருள்வல்லபம்

716

திருவருள். பரவெளிப்பார்வைக் கண்ணே
என் மதியைச் செலுத்துகின்றதெனல்

போக்குவர வில்லாப் பொதுவெளிச்சிற் றம்பலமே
நோக்குவதா வென்மதியை நூக்குவதாம்—பார்க்கும்
இகத்தும் பரத்துமற் றெங்குமாம் பாத
வகத்தென்னை யாண்டா னருள். ௩௩

717

திருவருள், அடியரகத்தில்
எங்கும் ஒருபடித்தாகத் தெளிந்து விளங்குமெனல்

இடவேறு பாட்டா லிகலுமனப் பான்மை
கெடவீறு கொண்டு கிளரும்—அடைவே
பணைத்தெங்கு மாகப் பரந்தசீ பாதத்
தணைத்தென்னை யாண்டா னருள். ௩௪

718

திருவருள், தற்பரவியல் சார
அன்பரகத்தே சமநோக்கம் பாலிக்குமெனல்

தனித்து நிமிர்ந்தொளிர்மெய்த் தாணுவியல் சார
நுனித்தசம நோக்கத்தே யூக்கும்—மனத்தின்
முடத்தெங்கு போன்ற முரண்பாடு போக
வடர்த்தென்னை யாண்டா னருள். ௩௫

719

திருவருள், அன்பரகத்தினின்று
மூலாவித்தையை முற்றக் கெடுக்குமெனல்

அடற்கரும்பற் றுனமூ லாணவத்தைச் சாய்த்துக்
கடக்கரு(ம்)மற் றெல்லாங் கழிக்கும்—உடற்குடும்பத்
துன்புறவு மங்கச் சுடர்சொருபப் பொங்கொளிசேர்
அன்பறிவா வாண்டா னருள். ௩௬

720

திருவருள், அன்பர்தம்
ஆசாபாச மயக்கத்தை யகற்றுமெனல்

தன்பா லடைந்தார் தடுமாறு துள்ளத்துத்
துன்பார்ந்த மோகந் துரக்குமால்—அன்பால்
உருக்கியென் னுளே யுளத்தொளிசெய் ஞான
வருக்கனு வாண்டா னருள். ௩௨௭

721

திருவருள், அன்பர் சுகசொரூபத்திற்
சொக்கும்படி உள்ளத்தே உண்மை துலக்குமெனல்

தொக்கமெய் யன்பருளந் துன்று சொருபத்திற்
சொக்கலுற வுண்மை துலக்குவதாம்—மிக்க
திருத்திதரு மெய்ஞ்ஞானத் தேற்றமளித் தென்னை
அருத்தியா லாண்டா னருள். ௩௨அ

722

திருவருள், அன்பர்தம் மனச்சேட்டையை யழித்து
அவரை மெய்ஞ்ஞானபதத்தில் வாழ்விக்குமெனல்

கலகலெனத் துன்றுமனக் கற்பனையின் மூழ்கா
திலகுபதத் தன்பரையி டேற்றும்—உலகியல்வாய்
மாழ்குறு தென்னை மகிழ்ச்சிகூர் தன்னடிக்கே
யாழ்வதா வாண்டா னருள். ௩௨௯

723

திருவருள் சிவயோகநிஷ்டை வாயிலாக அன்பர்தம் அவஸ்தாபேத மகற்றுமெனல்

சிவத்திலே யூன்றித் திளைப்பிக்கு மாற்ருல்
அவத்தை விகற்ப மகற்றும்—சிவத்தை
இயல்பாக வென்னிதயத் தேய்வித்துச் சிந்தை
அயல்பாயா தாண்டா னருள். ௬0

724

திருவருள், அன்பரை யிழுத்திழுத்துத் தன்பா லியைபுறுத்துமெனல்

அன்பரைக்கோ தாட்டி யகலவிடா தீர்த்தீர்த்து
நன்பதத்தே கூட்டி நயப்புறுத்தும்—முன்பு
நணித்தாக நாணினேன் ஞானப் பதத்துக்
கணித்தாக வாண்டா னருள். ௬௧

725

திருவருள், ஆணவமலம் போக்கி ஆன்மசொரூபந் துலக்குமெனல்

தன்னியலைக் கொல்லத் தலைப்பட்ட வாணவத்தைத்
துன்னியடர்த் துண்மை துலக்குமால்—என்னை
முடக்கியடக் கூர்த்துமுனை மோக வகத்தை
யடக்கியடிக் காண்டா னருள். ௬௨

726

திருவருள், அடியர் மனக்கலக்க மற, அவர்க்கு நிருவிகற்பநிஷ்டை தருமெனல்

வெருவியற்கை தீர விளங்கு சொருப
நிருவிகற்ப நிஷ்டை நிகழ்த்தும்—வெருவா
வொருமைசே ருண்மை யுணர்ச்சியா லென்னை
அருமையா வாண்டா னருள். சங

727

திருவருள், தன்னையடைந்தா ருலகமயக்கத்தை யகற்றுமெனல்

ஜகந்தருமா லோடச் சரண்புக் கவர்க்கு
முகந்தருவ தாலே முடுக்கும்—அகந்தை
புறங்காட்டி யோடவருட் பூரணமா மோன
வறங்காட்டி யாண்டா னருள். சச

728

திருவருள், அறிவொளியாகத் தோன்றி அஞ்ஞானவிரு ளகற்றுமெனல்

அஞ்ஞான மூட மகல்விக்கு(ம்) நல்லறிவாய்ப்
பொய்ஞ்ஞால மோகமறப் போக்குமால்—மெய்ஞ்ஞான
தேசிகனு நின்றென்னைச் சிந்தையறு சாந்திக்கோ
ராசயமா வாண்டா னருள். சரு

729

திருவருள், மலவாழ்வை யொழித்துச் சிவவாழ்விற் சேர்க்குமெனல்

மலஞ்செய்த வாழ்க்கையற மாற்றி மகத்தா(ம்)
நலஞ்செய்து தன்பதத்தே நாட்டும்—சலஞ்செய்து
வாளா மயக்கத்து மாழ்கினேன் மாண்பதத்துக்
காளாக வாண்டா னருள். சசு

730

திருவருள், அஞ்ஞானமோக மகற்றி அன்பரைத் தன் வண்பதத்தில் இம்மையே வாழ்விக்குமெனல்

இம்மையே மோக மெறிந்துமெய் யன்பரைத்தன்
செம்மைசேர் வண்பதத்திற் சேர்ப்பிக்கும்—மும்மைப்
புடிக்கடலின் மூழ்கிப் புலம்பாது தன்மெய்
யடிக்கழலுக் காண்டா னருள். சஎ

731

திருவருள், ஐம்புலவேட்கையகற்றி அன்பரை மெய்ப்பதத்திற் சேர்க்குமெனல்

வையந்தே ரைம்புலத்து வாழ்க்கையிலே வேட்கையறக்
குய்யந்தீ ரொண்பதத்திற் கூட்டுமால்—ஐயந்தே
ரோதனத்திற் புந்தி யுருதே யிதயச்சிங்
காதனத்துக் காண்டா னருள். சஅ

732

திருவருள், அடியர்மனம் தன்னின் வேறுபட்டொழியாது அவரை இதயத்தே நிலைப்பிக்குமெனல்

ஆளப் பெறுமெய் யடியா ரகம்பிறிதா
மீளப் பெருதுளத்து மேவுவிக்கும்—தாளிற்
சமைவதா யென்னுள்ளந் தன்னுளத்தோ டொப்ப
வமைவதா வாண்டா னருள். சசு

733

திருவருள், அடிய ரகந்தைமயக்கத்தை யகற்றுமெனல்

ஊனுக வுள்ளத் துருத்துழலும் போலியுயிர்
மானுகங் காரமற மாற்றுமே—நானெனென்
றேரியல்பா வுள்ளத் துபாதியுணர் வற்றெளிர்மெய்
யாருயிரா வாண்டா னருள். ௩௦

734

திருவருள், அவரது நெஞ்சமே அகிலத்தோற்றங்களுக்கும் ஆதாரப்பொருளாக அடியர்க்கு ஞானனுபவம் கூட்டுமெனல்

நேர்மைப் படுத்தடியர் நெஞ்சைப் படர்நிழல்கட்
கோர்மெய்ப் படமா வுறத்தேற்றும்—தேர்முப்
புடிப்படைகட் கெல்லாம் பொதுப்படையா முண்மை
யடிப்படையா வாண்டா னருள். ௩க

735

திருவருள், அடியர் கவல்கடிந்து அவர்க்குச் சிவானுபவம் அளிக்குமெனல்

தவற்று மனத்தைத் தடிந்துசச் சித்தாம்
சிவத்தை யனுபவமாத் தேற்றும்—எவற்றும்
பிறிவறத் துன்றும் பிரம்ம சொருபம்
அறிவுறுத் தாண்டா னருள். ௫௨

736

திருவருள், அடியர் வருந்தாமல் அவர்க்கு நல்வாழ்வு நல்குமெனல்

குலஞ்சேர்ந்த தொண்டர் குழாங்குழையா தன்பின்
வலஞ்சேர்ந்த வாழ்வில் வளர்க்கும்—நலஞ்சேர்
கறவை புனிற்றிளங் கன்றைப்போற் காத்திவ்
வறவையை யாண்டா னருள். ௫௩

737

திருவருள், மௌனமே உபதேசமாகச் சித்தத்தே சிவபோத விளக்கஞ் செய்யுமெனல்

பகர்ச்சி யிலாதே பரமோப சாந்த
சுகச்சிவ போதமெழத் தூண்டும்—நுகர்ச்சிப்
புலமதிலுங் கல்விப் புலமையிலுஞ் சால
அலமதிதந் தாண்டா னருள். ௫௪

738

திருவருள், அடியர்க்குப் பிறவித்துன்பமறப் பேரின்பமூட்டுமெனல்

எள்ளத் தனையு மிடர்ப்பாட் டுணர்ச்சியற
வெள்ளத் துவகை விளைவிக்கும்—உள்ளத்தே
தேட்டமறு முண்மைத் திருத்தியாற் புன்மனப்பே
யாட்டமற வாண்டா னருள். ருகூ

739

திருவருள், பரவுவார் பாசமகற்றி அவர்க்கு மெய்யுருக்காட்டுமெனல்

பரசிடப் பெற்றார் பசுத்துவமா(ம்) மோகக்
கரிசடர்த் துண்மையுருக் காட்டும்—விரிசுடர்ச்செந்
தீமயஞ்சேர் சுத்தசிவச் சிற்சொருபத் தாலடியேன்
ஆமயஞ்செற் றாண்டா னருள். ருசு

740

திருவருள், அடியர்தம் அஞ்ஞானமகற்றி அவரகத்தே திருவடிக்காட்சி தருமெனல்

விஞ்சைக் கதிரொளியான் மிச்சை யறக்கடிந்து
கஞ்சக் கழல்வடிவங் காண்பிக்கும்—நெஞ்சத்
துறுதியா வுண்மை யுணர்வுருவங் காட்டி
அறுதியா வாண்டா னருள். ருஎ

741

திருவருள், அன்பரகத்தே திடமான சிவாத்துவித ஞானனுபவஞ் சேர்க்குமெனல்

இச்சைக் கிடமிலா வேக சிவாத்துவித
நிச்சயமெய் யன்பர்க்கு நெஞ்சுறுத்தும்—சச்சிச்
சுகத்தியல்பா நூல்களிற் சொற்ற சொரூபம்
அகத்தியல்பா வாண்டா னருள். ௫௮

742

திருவருள், ஞானனுபவந்தந்து கற்பனையகற்றுமெனல்

துன்னுமெய்ஞ் ஞான சொரூபானு பூதியாற்
பின்னுமனக் கற்பனையைப் பேர்விக்கும்—தன்னுண்மை
இப்பால தாக வியல்வித்து மற்றையவை
அப்பாலா வாண்டா னருள். ௫௯

743

திருவருள், அகந்தைநீக்கவாயிலாக அடியர்க்கு மோனவிளக்கந் தருமெனல்

புறவிடயம் பற்றிப் புலம்பு மகந்தைத்
துறவிடமா மோனந் துலக்கும்—பிறவி
வருத்தமற வென்னகத்து மாவாக் கியமெய்
யருத்தமா வாண்டா னருள். ௬௦

744

திருவருள், சிவபோதத்தால் அன்பர் பிறப்பை அறக்கடியுமெனல்

புகழ்சேர் பரசிவ போதத்தா லன்பர்
இகழ்சேர் பிறப்பை யெறியும்—மகிழ்சேர்
சுமுகமா வான்ம சொருபஞா னத்தால்
அமுதமா வாண்டா னருள். சுகு

745

திருவருள், அன்பர்மனக்குறையகற்றி நிறைவுணர்ச்சியால் அவர்க்கின்பந்தருமெனல்

குறைவினு லுள்ளங் குலேவுரு துண்மை
நிறைவினு லின்ப(ம்) நிகழ்த்தும்—அறிவிலாப்
பிச்சனு வேங்கிநான் பேதுரு தற்புதமெய்
யச்சனு வாண்டா னருள். சுஉ

746

திருவருள், அடியர் மலப்பாழ் கெடுத்துப் புந்திக்கிலேசம் போக்குமெனல்

உயிர்மலப்பாழ் மட்கியுளத் தாழ்த்தொழியச் செற்றுச்
செயிர்மனப்பாழ்ப் பையுளறத் தீர்க்கும்—உயிர்முனேப்பைத்
தாழ்த்தித் தமங்கடிந்து சாந்தப் பதவொளியில்
ஆழ்த்தியெனே யாண்டா னருள். சுரு

747

திருவருள், அகந்தைமயக்க மகற்றி அன்பர்க்கு ஞானனுபவம் அளிக்குமெனல்

கன்மனப்புன் காயவகங் காரமறக் காதலர்க்குத்
தன்மயப்பொன் ஞானந் தழைப்பிக்கும்—புன்மலத்தூ
டுனு வுருத்த வுயிர்ப்பால்நான் றன்னையயர்த்
தானும லாண்டா னருள். ௯௪

748

திருவருள், ஐம்புலவேட்கையகற்றி அன்பரகத்திற் சிவபோகவாழ்க்கை சேர்க்குமெனல்

வேகங்கூ ரைம்புலத்து வேட்கையற வோங்குசிவ
போகஞ்சேர் வாழ்வுளத்திற் பொங்குவிக்கும்—மோகங்கூர்
ஏக்கந்தீ ருண்மைப்பே ரின்பஞ்சா லோர்மொழிச்சீ
ராக்கந்தந் தாண்டா னருள். ௯௫

749

திருவருள், அடியர்க்குப் பூரணதிருப்தி யுண்டாகத் திருவடிக்காட்சி தருமெனல்

வேணவா முற்ற விளைந்தாங் கடியருளம்
காணக் கழல்வடிவங் காண்பிக்கும்—மாணக்
குழகுசே ருண்மைக் குலாச்சேர் சொருபத்
தழகிதா வாண்டா னருள். ௯௬

750

திருவருள், அன்பர் துன்பங்களை அறக்கடியுமெனல்

பொருத்திச் சுடர்ப்பதத்தைப் புந்திசெய்யு மன்பர்
வருத்தப் பனிப்பறவே வாட்டும்—கருத்துட்
கனலோங்கு ஞானக் கழலோங்கு வண்சீ
ரனலோங்க வாண்டா னருள். ௬௭

751

திருவருள், ஞானவொளியால் அஞ்ஞானவிரு ளகற்றுமெனல்

காண்டகுமெய்ஞ் ஞானக் கழலொளியாற் கற்பனையா
ஈண்டுமன மாயையிரு ளெற்றுமால்—ஆண்டபடி
எப்படியென் றூர்க்குமற் றிப்படியென் றோதவொணு
அப்படியா லாண்டா னருள். ௬௮

V. அருட்டுணை

752

தோன்றுத்துணையான திருவருள், அடியர் இடர்ப்பட் டழைக்கும்பொழுது தோன்றுந்துணையாக வெளிப்படுமெனல்

ஏன்றமெய் யன்ப ரிடர்ப்பாடொன் றுற்றவழித்
தோன்றுந் துணையாத் துலங்குமால்—ஊன்றியடி
மண்மிசை மிக்க வசீகரத் தோற்றத்தோ
டண்மியெனை யாண்டா னருள். ௬௯

753

திருவருள், அன்பிலாப் பிறர் வருந்தாநிற்கவும் அன்புசேருற்றார்க்கு அருந்துணையாமெனல்

வன்பகத்து மாக்களற மாழ்குங்கால் வையகத்தா
டன்பருயிர்க் கோருறுதி யாவதுகாண்—இன்பதத்தா
டேணியா வேற்றி யிளகாதே யுள்ளதில்வல்
லாணியா வாண்டா னருள். எ0

754

திருவருள், அன்பர் மனக்கலக்க மகற்றி அவர்க்கு உபசாந்தி யுதவுமெனல்

நிலாமோன சாந்திதந் நெஞ்சுறைத்துச் சிந்தைக்
கலாமோயக் காதலரைக் காக்கும்—எலாமோர்
குடைநிழற்கீ ழாகச்செங் கோலோச்சுந் தன்மெய்
யடிநிழற்கீ ழாண்டா னருள். எக

755

வாழ்த்து

ஆண்டா னருள்வாழி வாழியென் னுருயிருக்
கீண்டா தரஞ்சே ரெழுபதுமே—தூண்டா
மணிவிளக்கா வென்னுளத்து மன்னுதிருப் பாதப்
பணியிழைப்பார் வாழி பதத்து. எஉ

அநுபந்தம்

நூலகத்துச் சேர்க்கவேண்டியவை

I

[குரு பத்திப் பேறு என்னும் 2-ஆம் பகுதிக்குப் பின் இந்தப் புதுப் பகுதியைச் சேர்க்கவும்.]

குருவருட் காட்சி

(கட்டளைக் கலித்துறை)

1

குருபாத மேகுறிக் கொண்டமெய் யன்பின் குலாத்திறத்தாற்
கருவா தனைப்பட்டுக் கண்கலங் காவருட் காட்சிபெற்றேன்
வெருவா தகத்தில் விளங்கு சொருப வியன்பதவாழ்
வொருவாத மோன வுணர்ச்சிமீக் கூரவுள் ளோங்கலுற்றே.

2

அயற்பார்வை யான வகந்தை மனச்சுட் டலமரல்சேர்
மயற்பாச நோய்க்கு மருந்தாங் குருவருள் வாலறிவாம்
இயற்பார்வை யாலே யிதயத் தொளிர்மெய் யிறைபதத்தில்
உயப்போவ தன்றி யுலக மயக்கி லுழல்வதென்னே.

II

3. குருவருட் பிரசாதம்

[43-ஆம் பக்கம் ''வான்மருவு தோற்றமா'' என்னும் 230-ஆம் செய்யுளுக்குப் பின் இச் செய்யுட்களை ஒரே தொகுப்பாகச் சேர்க்கவும்.]

1

ஈன வவிச்சை யிருட்பாழ் கெடச்சுடர்மெய்ஞ்
ஞான சொருபகுரு நாதனருட் பாதவொளி
யானெனதென் றேங்கி யிரங்கியுழல் பொய்ம்மயக்க
வூனக் கலக்கமற வோட்டியெனைக் காட்டியதே.

2

மனக்கற் பனைசத்தி மாண்டவகந் தானே
தனிக்கே வலசொருபத் தன்மையா முண்மை
முனைக்கு மகந்தை முதல்கெட் டொழியின்
மனக்கவலை சேரா மகிழ்ச்சியுண் டாமே.

3

நம்பனருட் கூர்மைசேர் நாட்டமென்பா லூடுருவத்
தன்பதமெய்ஞ் ஞானத் தவமியல்பாத் தான்கிளர்மெய்
யன்புணர்ச்சி தானே யமுதவூற் றுகவெனக்
கின்பமெழப் பொங்க விதயம் மலர்ந்ததே.

4

சற்குரு பாதந் தலைப்பட் டதனாலே
கற்க வெனக்கோர் கலைஞானம் வேண்டாது
நிற்கலுற்ற தன்சொருப நிட்டையாற் பாசமற
மிக்கசிவ ஞானம் வெளியா விளைந்ததே.

5

அறிவான வுண்மை யவிர்ச்சியே யான்றோர்
குறிகுணந்தீர் சுத்தசிவக் கோலவொளி யென்பர்
குறைமனப்புன் மோகக் குடிலவகந் தீரின்
நிறைவா வொளிர்சொருப நிஷ்களந்தா னாமே.

6

நீச்சரிய சாந்த நிலைக்களமாம் பாதவொளி
ஆச்சரிய மாவென் னகத்தை யலர்த்தலால்
பேச்சரிய வாழ்வாப் பிறங்குமோ னப்பதத்திற்
பேய்ச்சரியை யானவகப் பேய்க்கூத் தடங்கியதே.

7

ஆண்ட வருட்பதவாழ் வாமெய் யனுபூதி
ஈண்டலா லுள்ளத் திகமே பரமாகக்
காண்டகுமெய்ஞ் ஞானவருட் காட்சியாங் கைவல்யம்
மூண்டதொரு தன்மயமா முற்றும் விழுங்கியே.

8

உள்ளவா றோர்த்துணர்ந்தா ருள்ளத் துபசாந்த
வெள்ளமாப் பொங்கு விசுத்த சொருபங்காண்
கள்ள மகன்றமெய்க் காதலாற் சிந்தைகசிந்
துள்ள மொருங்கி யுபாசிக்க வேண்டுவதே.

9

ஆக்கமா வுள்ள வருட்சிற் பரசொருப
நோக்கமே மிக்கபெரு நோன்பான மெய்த்தவமாத்
தேக்கவென் னுள்ளத்துத் தேற்றியசற் போதகுரு
நோக்கமே மிக்கசிவ பாக்கியமா நோற்றேனே.

10

அருக்கனு வுள்ளவென் ணுண்டவன்ரு ளன்றி
இருக்கவென் னுள்ளத் தெதுவு(ம்)நான் காணேன்
செருக்குமகங் காரமயற் சித்த விருத்தி
உருக்கவொணு தோய்ந்தொழிந்த துள்ளத் தொளியிலே.

11

மொய்ப்புறுமோ காவரண மூலப்பா ழாணவத்தாற்
கப்புமகங் காரமனக் கற்பனு பேதமா(ம்)
முப்புடியை முற்ற முருக்குங் குருபாதச்
சிற்புரணந் தானே திருவருளாத் தேர்ந்தேனே.

12

கூான் பிலேன்சற் குணமிலேன் அன்பரினத்
தாரம்ப ஞமென் னகத்தே யபரிமிதப்
பேரின்ப மோனவருட் பேறளித்த வாண்டவன்பால்
ஓரன் பமோகமா வுள்ளூறப் பெற்றேனே.

13

ஓதக் கடவதோ வோதி யுணர்ந்துபின்
சாதிக்க வேண்டுவதோ சற்றுமின்றி முற்றுமென்னை
ஆதிக்கங் கொண்டவென் ணுண்டா னருட்பதமே
நேதித் திறந்தேர்வார் நெஞ்சிலே மிஞ்சுவதே.

14

செருக்க வொணுது சிவத்தி லழுந்தி
யிருக்கு முணர்வே யெனுதியற் பூஜை
சுரக்குமெய்ஞ் ஞான சொருப சுகத்திற்
கரக்கநா னென்னுங் களிசேர் கருத்தே.

15

எல்லாமொன் ருக வியல்சிற் சொருபவுண்மை
கல்லா தடியேன் கலங்கமனக் கற்பனையில்
வல்லாண்மை சேர்ந்தவருள் வாள்விழியாற் சித்தமலப்
பொல்லாமை செற்றளித்தான் போதானு பூதியே.

16

சித்தமலஞ் செற்றுத் திருவருளா லாண்டவன்சற்
புத்தியோ கத்தாற் பொலியநான் கண்டுகொண்ட
நித்தியவாழ் வான நிரதிசயா னந்தசுப
முத்தியுரு நுட்பவொட்ப மோனப் பரவெளியே.

17

குருப்பரமன்* பார்வைக் குறிதவரு ஞானச்
சரப்பகழி யாற்சிச் சடக்கிரந்தி பேதித்
தருட்பரவிண் ணுக வகந்தெளிந்த வாற்ருற்
கரப்புறுவெம் பாசமறக் கைவல்யங் கண்டதே.

18

உன்னையே யென்மெய் யுருவாக வோர்ந்துளத்து
மன்னியமெய்ஞ் ஞானவருள் வாழ்வடையப் பெற்றதால்
அன்னியமொன் றில்லா வனந்த சிவாம்புதியாம்
உன்னை யடைந்தவெனக் கோர்குறையு மில்லையே.

---

* *பார்வை........பகழி -குறிதவருத ஞானதிருஷ்டியான பிரம்மாஸ்திரம்; சரப்பகழி - இருபெயரொட்டுப் பண்புத் தொகை.*

19

பொருளா வொளிர்சொருபப் பூரணத்தை நானென்
மருளாற் கெடுத்துமனம் மாழ்குதல்கண் டாண்டான்
அருளா லவிச்சை யகன்றொழிய வுண்மைத்
தெருளா லகந்தெளிந்து சேர்ந்தேன் சொருபமே.

20

வென்றிசே ரான்ம விசாரத்தில் யாரேநா
னென்றிதயத் துள்ளாழ்ந் தியைந்த வனுபவத்தால்
ஒன்றியாக் கண்டவென் னுண்மை நிலையிலென்னை
யன்றியொன் றின்மையா லாசைபய மற்றதே.

21

மோனப் பரமா முழுமுதலே யென்னுருவா
நானற் றொளிர்சொருப ஞானனு பூதியா
ஞானப் பிரானகத்து நண்ணலால் யானெனதென்
றூனமயற் பாச வுணர்வற் றொழிந்ததே.

22

பொய்த்தொழிய மோகப் புணர்ப்பான பாசபந்தம்
மெய்த்திறமா முத்தி விளங்கவகத் துள்ளுணர்வால்
உய்த்துணர்ந்து நிஷ்டையா லூன்றக் கடவதுதம்
சித்ததிற் சித்தாத் திகழ்சொருப வுண்மையே.

23

இருளற நோக்கு மிறையருள் பாய்ந்து
மருள்வெரு ளற்ற மனத்தவர் தேற
அருள்வெளி யான வகத்தே யகமெய்ப்
பொருளா வொளிர்வது பூரணந் தானே.

24

ஊன வகந்தைமுனைப் போய்ந்தொழியப் பொங்குசுப
மோனமே ஞானமா மூட்டினு னென்னகத்தில்
வானமே யாக வளர்சொருபக் கேவலமெய்ஞ்
ஞானத்திற் கற்பனைகாண் ஞத்துவஞ்சேர் ஞானமே.

25

மூலக் கனலாக மோனப் பரந்தானே
ஏலச் சுடர்விட் டிதயத் திருப்புணர்வாய்க்
காலதே சக்கருமக் கற்பனையைத் தான்கடிந்து
சாலப் பரமோப சாந்தவியல் காட்டியதே.

26

ஊனு வுனக்குநா னுற்றவுணர் வாலுளத்தில்
வேணவா வாக வியத்தக்க மிக்கபெருங்
காணியா மோனவருட் கைவல்யங் கண்டுகொண்டேன்
பேணுகின்றே னென்சொருபப் பேருக வுன்னையே.

27

தமத்திலே யாழ்ந்து தடித்த செருக்கா
லமர்க்களமே யான வகத்தேன் இறையோ
னமர்த்தலா லென்னை யருட்பதத்தே நானோர்
சமர்த்தனு ஞான சமாதிபெற் றேனே.

28

நன்றுன கேவலமெய்ஞ் ஞான சொருபமா
நின்றுயை யென்னகத்து நிஷ்களமா நோக்கியே
ஒன்றுக வுள்ளநின் னுண்மையுணர் வாலறிந்தேன்
குன்றுத மோனவருட் கோலத் திருப்பதமே.

29

மன்னுயிர்க்குத் தத்தம் மனத்தாலே பந்தமுத்தி
துன்னலன்றி மற்றில்லை சோதனையாற் சிச்சடப்பொய்ப்
பின்னலா(ம்) மாயமனம் பேதிக்கி லந்நிலையே
தன்னியல்பாத் துன்று சதாமுத்தி யென்பவே.

30

துற்குறியா மாணவப்பேய்த் தோற்றமறக் கேவலமெய்ச்
சிற்குறியாப் புக்கவருட் சித்திரத்தாற் புத்திகொண்டு
கற்குறையா துங்காணேன் கற்றுங்கல் லாதவெறுந்
தற்குறியாச் சஞ்சரிக்கச் சார்ந்ததொரு தன்மையே.

31

தன்பெருமை தானறியாத் தன்மைசேர் மாட்சியால்
என்சிறுமை நோக்கா வியல்பாங் கருணையால்
என்செயலெல் லாமோ ரிறைமைசேர் தன்செயலா
விஞ்சவொரு தன்மயமா வேற்றுமைசெற் றுண்டானே.

32

பாழிற் கிடந்து பரிதபித்த வென்னகத்திற்
பாழைக் கடந்து பளீரென் றுளிர்சொருப
வாழ்வலரத் தன்னொடென்னை வாழவைத்த நல்லருட்சீ
ருழையன்றி யுள்ளேன்மற் றோர்தெய்வ முள்ளத்தே.

33

ஒடுங்கொடுங்க வுள்ளத் தொளிர்சொருப மோனம்
மடங்கெடமெய்ஞ் ஞானவருள் வாழ்வளிப்ப தன்றி
அடங்கலற்ற மோக வகந்தைமுனைப் பாலே
தொடங்குவினை நல்காதத் துங்கவருள் வாழ்வே.

34

உய்வடைய வேண்டுந்தா னுரெனத்தன் னுண்மையுசாய்ப்
பொய்வளர்வெம் பாசபந்தப் பூட்டுடையில் வீட்டுலக
மெய்வளர்வாழ் வாக விளங்கு சொருபமென்பர்
தெய்வமா மோனவியற் சிற்பரமாந் தற்பரமே.

35

கருமங் கதியாக் கலங்கினேற் காண்டா
னருமந்த போதனையா *லற்றமறத் தற்றோர்
தருமந் தலைப்படலுஞ் சார்ந்ததுமா மோகக்
கருமங் கழன்றொழியக் கைவல்ய சித்தியே.

36

ஏமவியல் சான்றபே ரின்பவருட் செம்பதமா
யாமளவில் சாந்தியடைந் தென்று மிருக்குநிலை
காமுறுமெய்க் காதலர்க்கெக் காலமுமெய்க் காவலாங்
கோமளமெய்ஞ் ஞானக் கொழுந்தாங் குருபதமே.

37

துவிதமலாச் சொந்த சொருபமா வுள்ளத்
தவிர்தலுற்ற வுன்னை யகங்கிளர்மெய் யன்பால்
துவிதமே போற்பிறர்க்குத் தோன்றத் தொழுதேன்
†விவிதமா வென்னை வெருது பொருயே.

---

* அற்றமறத் தற்றோர் தருமம் - கருமங்களை யாராய்ந்து செய்யுமுன் அந்தக் கருமங்களுக்கின்றியமை யாக் கருத்தாவான தன்னுண்மையை அபரோக்ஷமாக வாராய்ந் தறியவேண்டுவதால் அவற்றினும் முக்கியமாக வுள்ள ஆன்ம விசாரமான சுவதருமம்; கருமங்கழன் றொழிய - ஆன்ம விசாரத்தால் அகந்தை வடிவான கர்த் திருத்துவ புத்தி மயக்கம் கழிதலால் என்க.

† விதவிதமாத் தொழுதேன் எனக்கூட்டுக; விவிதமாத் தொழுதல் - பல்வேறுவகைப் படப் போற்றுதல்.

38

தனையன்றி மற்றெனக்கோர் தாரகமின் றென்னும்
முனையொன் றியநினைவு மூண்டெழுந்த வுள்ளத்
தெனைய நினைவு மெழாதொழிய நானுன்
றனையென் னியல்வடிவாச் சார்ந்துதரித் தேனே.

39

மூசவித்தை யானகொடு மூலப்பாழ் சேர்ந்தமன
மாசகற்றும் போதகுரு மாமணியாற் பொய்ம்மயக்கப்
பாசவித்தை யான பகட்டறிவில் வேட்கையற
நேசமுற்றேன் மெய்யறிவா நின்ற சொரூபத்தே.

40

மருள்வாழ்வா(ம்) மோக மனக்கற் பனைதீர்
அருள்வாழ்வா முண்மைஞா னனுபவ மோனம்
பெருவாழ்வா விஞ்சும் பிரம்மகை வல்யம்
குருவருளா லன்றிக்கை கூடரிதவ் வாழ்வே.

41

சுட்டறுமெய்ஞ் ஞான சொரூபமா(ம்) மோனவியற்
பட்டனருட் பார்வையாற் பாசமாங் கோசமறக்
கெட்டொழியச் சிற்பரமெய்க் கேவலவாழ் வுற்றதுமுன்
விட்டகுறை தொட்டகுறை மேல்விளைந்த பாக்கியமே.

42

மோன வியல்சேர் முழுமுதற்பே ரின்பவருள்
வான வளாகமா வைகு சொரூபநிலை
ஊன வகந்தைமுனைப் போய்ந்தொழியப் பொங்குறுமெய்ஞ்
ஞான விபூதியே நண்ணக் கடவதே.

43

அருட்பதமென் னுள்ளத் தலர்வித்த மோன
குருப்பதமே வெம்பிறவிக் கோடைதீர் தண்ணென்
பருப்பதவாழ் வாகப் படைத்தேன் கிடைத்தேன்
விருப்பருப் பேரின்ப மெய்ப்பதமென் னுள்ளே.

44

ஓட வகப்பே யுளத்தினின்றென் னுண்மையுருத்
தேடியடைந் துய்ந்த திறத்தாற் குருவடிவிற்
கூடக் கிடைத்தவருட் கோலமே யெண்ணமனம்
பாடிப் பணிந்து பயிற்றிடுமென் வாய்தலையே.

45

வெள்ளத் திருவருட்சீர் வேட்கையலால் வேட்கையற்ற
வுள்ளத் துறவா லுயிர்த்தூய்மை யுண்டாகத்
தெள்ளத் தெளிந்துமனந் தேரத்தன் னுண்மையுளத்
தள்ளப் படாமெய் யருட்பெருவாழ் வாயிற்றே.

46

கருவழியா மோகக் கலக்கமறக் காண்சற்
குருவுணர்த்தும் மோனக் குறிவழிச்சென் றென்னுட்
பொருவறுமெய்ஞ் ஞானவருட் போகம் புணர்ந்தேன்
பருவரலில் சாந்திப் பதங்கண்டு கொண்டே.

47

பாதமே மிக்கவருட் பற்றுக்கோ டாகமனக்
கேதமகல் சாந்தி கிளர்தலா லுள்ளத்தில்
வேதமுடி பான விசுத்தவருட் கைவல்ய
மேதகவே யென்சொருப மெய்யா விளங்கியதே.

48

கற்றறிய நம்மாற் கடவதா வுள்ளத்து
வெற்றறிவாத் தானே விளங்கு சொருபத்தில்
மற்றறிவு யாவு(ம்)மனே மாயையாற் றேற்றுவிக்க
லுற்றனவே யத்துவித வுண்மை யுணர்ந்திடிலே.

49

உன்னடியே யன்றியெனக் கோருறுதி யின்ருக
வுன்னருளே தாரகமா வொப்படைத்தே னென்னையெனத்
தன்னினைவே யன்றியெனக் கெந்நினைவு மின்ருகத்
தன்னியலே யாகவெனக் கென்னியல்சார் வித்தானே.

50

பிரமாத மோகவகப் பேய்பிரியுங் காறும்
ஒருமைசே ருண்மை யுணர்வுதியா வாறவ்
வொருமைசே ருண்மை யுணர்வுதிக்குங் காறும்
இருமைதீர் மெய்யன் பிதயத் தெழாதே.

51

வாக்குமனந் தன்சொருப மாண்பதமே யெண்ணிவழுத்
தாக்கமளித் தாண்டா னருள்கொடுநா ஞரெனவுள்
ளோர்க்குமுளத் தொன்ரு வொளிர்சொருபக் கேவலமெய்ந்
நோக்கமே நோக்கரிய நுண்புலமா மொண்பதமே.

52

சச்சித்தாந் தன்னைச் சடவுடலாத் தான்மருண்ட
மிச்சைத்தோ டத்தால் விளைந்தவெம் பாசபந்தம்
விச்சைத்தே சார்ந்த விசாரஞா ஞனுபவ
நிச்சயத்தா லன்றிமற் றெத்தாலு(ம்) நீங்காதே.

53

ஒளிவெளியா வுள்ளத் தொளிர்சொருபக் கண்ணுத்
தெளிவியல்வாழ் வா(ம்)மவுனச் சீர்மையால் யாதோ
ரிளிவரல்சே ராவியற்பே ரின்பமாந் தன்மெய்
யளைவுறவாண் டானருளா லன்புருவா னேனே.

54

கண்புதைந்து வஞ்சக் கணிகைமனக் காதலிற்பட்
டெண்பதத்தா லேங்கி யிறந்துபிறந் தெய்த்தவுயிர்
எண்பது கோடிஜன்மத் தீற்றிலுன் கட்கிலக்காய்
நண்புறவு பூண்டதுமெய்ஞ் ஞான வருட்பதத்தே.

55

எந்தரமல் லாத விறைவனருட் பார்வையால்
விந்தைசேர் மாயா விசித்திரஜா லங்கழன்று
பந்தமுத்தி யெல்லாம் பகற்கனவா மங்கவொளிர்
சொந்தவியல் பான சொருபநிலை கூடியதே.

56

ஆடற் கினிய வருட்கடலா வென்னகத்து
நாடக் கிடைத்ததுமெய்ஞ் ஞானசொரு பானுபவம்
கூடக் கிடைக்கிற் குருபாதம் பாழ்கடத்து
மோடப் புணையா வுய்ப்பதது மெய்ப்பதமே.

57

பங்கமற்ற வுண்மைப் பரவெளியா மோனவுணர்
வங்கமகம் புத்தி யகன்று லவிர்வதன்றி
அங்க மிளைக்க வருந்தவமிக் காற்றினுமத்
துங்க வுணர்வு துலங்கா தெனைத்துமே.

58

உடையாய்நீ தேற்று முசாநெறியா லுள்ளத்
தடையாநின் றேனுக் ககந்தைமுனைப் போயப்
படையான பேதப் பகைப்புலமாம் பாசத்
தடையாது மற்றெளிர்மெய்த் தன்மைவிளங் கிற்றே.

59

துங்கமுறு சுத்த சொரூபவியல் தானதுவா
மங்கணன்மெய்ஞ் ஞான வருள்விழியாற் காணிலல்லாற்
பங்கமுறு பாசப் படலம் படர்குருட்டுத்
தங்கண்ணுற் கண்டடையச் சற்றுமொண்ணு தார்க்குமே.

60

கண்ணுக் கினியவென் கண்ணுளன் காமுற்றே
னுண்ணெக் குருக வுளம்புக்கான் ஞானவருள்
வண்ணக் கொழுந்தா வளர்சொரூப மாட்சியா
லண்ணிக்க நின்று னறிவிற் பிரியாதே.

61

பிரியகில் லேனென் பிரானையே தன்மெய்த்
துரியமே நிளத் தொடர்ந்தென் னியல்பாத்
தெரியவுள் ளத்துத் திகழ்சிற் சொருபப்
பிரியனை விட்டுப் பிரிதலெவ் வாறே.

62

ஆண்டா னருட்சே வடியுணர்வே தன்னுருவாக்
காண்டலா லந்தக் கருத்தே யிதயமாய்
வேண்டார்வம் முற்ற விளைத்த வனுபூதி
ஆண்டா னளித்த வருட்பிர சாதமே.

63

கதுவுபுலக் காட்சியெல்லாங் கற்பனையே யாகலான்
அதுவெனத்தான் சுட்டி யறியப் படுவதோ
ரெதுவுமன்று தான்ருணு வென்றுமுள்ள தன்னையன்றி
அதுவதுவென் ருேதி லதுவென் பதன்பொருளே.

64

கண்ணேதா னுள்ளவுண்மைக் காட்சியல்லாற் சிற்சொருபக்
கண்ணு லெதுவுமென்றுங் காணப் படுவதில்லை
கண்ணு லெதுவெனினுங் காணப் படுமெனிலக்
கண்ணுமுண்மைக் கண்ணன்றிக் காட்சிபோற் கற்பனையே.

65

மித்தையறி வான விகற்பமனக் கற்பனைகள்
சித்தமல மான செருக்கா மகந்தையொடு
சுத்தவறி வான சொருப விலாசத்திற்
பொய்த்தொழியப் பொங்குமியற் பூரணவாழ் வற்புதமே.

66

அறிவான வுண்மையா வான்ற சொருப
நிறைவான மோனமே நேயத் தழுந்தல்
அறிவா லறிவை யறியிலன்றித் தோன்ரு
தறிவான மோனநே யானுபவ வாழ்வே.

67

பொருவண்ண மான புலத்தினின்று தன்மெய்
யுருவண்ணம் யாதென் றுளம்புக்கு நோக்கில்
இருவண்ண மாக விகல்பட்ட வெல்லாம்
ஒருவண்ண மாப்பெற் ருெளிருந்தன் னுண்மையே.

68

கூற்றறிவா லென்னென்ன கைவரினும் கற்பனையிற்
சுற்றறிவா மோகச் சுழற்சியறத் தன்னகத்து
வெற்றறிவா முண்மை விளங்கிலன்றி விஞ்சைசேர்
முற்றறிவா மத்துவித மோனநிலை கூடாதே.

69

தொண்டுகொண்ட வாண்டவன்சொல் சோதனையா
[லுள்ளத்தூ
மண்டுசிவ போதவருள் வாழ்வெழப்பாழ் வாதனைபோய்
உண்டுபோற் றேன்று முருவளவாத் தீர்ந்ததுநான்
கண்டுகேட் டுண்டுயிர்த்துக் காமுற்ற *வைம்புலமே.

70

ஒத்தாங் கனைத்திலுந்தா னூடுருவி யுள்ளதொரு
சுத்தாத் துவித சொருபமா மென்னையன்றி
மெய்த்தாலே போல வியவகரிக் கின்றவென்னைப்
பொய்த்தொழியக் கண்டதனு பூதிப் புலந்தானே.

71

பிச்சையிரந் தேனைப் பிழைநோக்கிப் பிச்சனிவன்
கொச்சைமுழுக் கொத்தையெனக் கூறுது ஞானவருட்
பிச்சையளித் தென்னுயிரைப் பேணினன் ஆர்வலருக்
கச்சயமெய்ஞ் ஞான வருட்கடலாம் பெம்மானே.

---

* *ஐம்புலம் என்றது ஐம்புலச் சேர்க்கை மாத்திரமேயான உலகத்தை - உலகு ஐம்புலன்களுரு வேறன்று (உள் - நாற்), சுவையொளி....கட்டே யுலகு (திருவள்ளுவர்) என்றதும் அது.*

72

என்னிடத்தி லென்னையன்றி யானும்மற்றொன் றில்லாதேன்
தன்னிடத்துத் தன்னையன்றித் தானும்மற்றொன் றில்லாதான்
அன்னவியற் பார வருள்வெளியா மொன்றிலிரண்
டுன்ன துண்மை யல்லா வுபாதி யுணர்வளவே.

73

சொப்பனமே போலச் சுழலுமனச் சுட்டுணர்வாங்
கற்பனையிற் சிந்தை கலங்கி மலங்கலுறார்
சொப்பனத்துக் கேதுவாத் துன்றுமிருட் பாழவிச்சைக்
கப்புறவாழ் வான வருட்கே வலத்தோரே.

74

சித்தக் கலக்கமறத் தேற்றியமெய்ஞ் ஞானவருள்
வித்தகன்பொற் பாத விலாசக் கதிரொளியிற்
பொய்த்தொழிய மோகப் புலமாம் புரத்திரயம்
சுத்தத் துரீய சொருபமே மிஞ்சியதே.

75

உணர்வுசிவ மாக வுளந்தெளிந்த வாழ்வே
புணர்தலுற வேண்டுசிவ போதானு பூதி
அணவுவிசா ரத்தா லகந்தைமுனைப் பாம்பொய்
யுணர்வகன்று ளுள்ளத் தொளிருமது தானே.

76

அகமுடையான் செய்த வருட்கண்ணைக் கத்தா
லகமுடையா னுக்கோநா னற்றொழியப் பெற்றுங்
ககமுடையா னென்னோ டபேதமாத் தீர்ந்தான்
அகமகமே யாக வலர்ந்ததுமெய் யன்பே.

77

உலந்தொழிய நானெனும்பா ழூத்தைநினை வுள்ளத்
தலர்ந்தமெய் யன்பா லகப்பொருள்வாழ் வாக
மலர்ந்ததுபே ரின்பவருள் வானமா மோனம்
மலர்ந்தவியற் பூரணமெய் வாழ்வுசிவந் தானே.

78

மோக வகந்தை முனைப்பா வுருத்தமனே
வேகமறச் செற்றொளிர்மெய் வெற்றியா லாண்டபிரான்
ஆகமவே தாந்தனு னுபவச் செம்பொருளாம்
ஏக சொருபமா வேய்ந்தா விதயத்தே.

79

யானென் றியல்பா வெழுந்த கதிர்முனையே
தானென்று முண்மைத் தடமென் றிறுதிவரை
மோனமா வுள்ளொற்றி மூலத் தலத்தடையின்
வானென் றொளிர்சொருப மாட்சி தலைப்படுமே.

80

தன்னைத் தவிரமற் றொன்றுமறத் தானொளிர்செம்
பொன்னுலக மானவருட் போதப் பரவெளியே
என்னுருவா யான்கண் டியல்சொரூ பானுபவ
வன்னமா மோனமெனக் காண்டான் வழங்கியதே.

81

வரங்கெழுதன் சொந்த சொருபவியன் மாட்சி
கிரந்திபே தத்தாற் கிளர்ந்தெழுந்தா லன்றி
அரந்தைதீ ரின்ப வருட்பெருவாழ் வான
நிரந்தரமா முத்திநிலை நேர்படவொண் ணுதே.

82

அறிவொளியாந் தன்மெய் யகத்தலரப் பெற்றால்
நிறைவெளியா மம்மெய்ந் நிலைக்கட் கனுப்போற்
பிறவுணர்வெல் லாங்கற் பிதமாகப் பேரும்
முறையுளியோர்ந் தாலகத்து மோனமன்றி யின்றே.

83

அருப்பணமா வாண்டவனுக் கற்ற மனத்தால்
இருப்பதுதன் னுண்மை யியல்பான மாட்சி
குருப்பதமா மந்தக் குலாவி லெனக்கு
விருப்பமுறத் தன்னையன்றி வேறென்று மின்றே.

84

வேறென்று மற்ற வெறுவெளியாப் பொங்குவது
வீறென்று முண்மை விலாசமா மோனமே
மாறென்று மற்றமுழு மாட்சிசே ரத்துவிதப்
பேறென்றி யுள்ளம் பிறங்கியது தானானே.

85

தானான வுள்ளவொர்மெய்த் தத்துவமாஞ் சிற்பரத்தில்
யானானென் றாற்போ லிரண்டுபட்ட கற்பனைபொய்
யூன்றனே மெய்யுயிர்போ லுற்றவகப் பேய்மனமே
மான்றவகப் பேயையுசா மந்திரத்தா லுந்துகவே.

86

புள்ளுவஞ்சேர் மாயா விலாசமறப் பொய்க்கவகத்
தொள்ளியதோ ருண்மை யொளிப்பிழம்பு வீசலால்
உள்ளுமயற் கற்பனையற் றுள்ளும் பரவெளியாத்
தெள்ளியது சுத்த சிவானுபவச் சீர்மையே.

87

சிந்தையா வென்னுள் விளங்கு சொரூபசிவத்
தந்தையின்யான் வேறல்லாத் தன்மைதெரித் தாண்டவனவ்
வெந்தையே யாகலின்யா மேக சொரூபமாப்
புந்தியிலே யொன்றுபடப் போயிற்று *வேற்றுமையே.

88

அறிவாக வுள்ளவே கான்ம சொரூபத்
தறைபோக லுற்ற வகப்பிர மாதம்
பிறியாத காறுமோர் பேதமற்ற வுண்மை
நிறைவான ஞேயநிலை நெஞ்சத் துருதே.

89

பொய்க்கா ரவிச்சைப் புணர்ப்பாம் புலநுகர்வைத்
திக்காரஞ் செய்து தெவிட்டாப்பே ரின்பரச
வக்கா ரடலையா வான்மானு பூதிநான்
மிக்கார வூட்டினு னன்னையினும் மிக்கானே.

90

ஊட்டினுன் சாந்தியென் னுள்ளுணர்விற் பேராது
கூட்டினுன் மோனக் குறியான தன்பதச்சீர்
மீட்டுநான் மாயா விலாசமே காணுது
காட்டினுன் வீட்டியலாங் கைவல்ய வுண்மையே.

---

* வேற்றுமை—ஈசுவரன், குரு, ஆத்மா என்ற மூன்றும் தனித்தனி வெவ்வேறு போலப் பிரமாதத்தாற் றோன்றிய பேதம்.

13

91

வென்றிசே ராட்சி விளைத்தானுக் கென்னகத்து
நன்றிநான் கூர்வதுதன் னூட்ட மருமையே
யன்றிவே றில்லைசொரு பாத்துவித வுண்மையால்
ஒன்றியா வுள்ளத் தொளிர்சொருபம் வாழியே.

92

முளைத்த வகந்தைதன் மூலத் தொடுங்கிற்
றனித்தபர மார்த்தநிலை தானே விளங்கும்
மனத்தைக் கடந்துதன் மாத்திரமாந் தன்னை
இனைத்தென் றுரைக்க விலக்கணமொன் றின்றே.

93

உள்ளதுதான் ருனு வொளிர்வதன்றி யுள்ளத்திற்
கள்ளமனக் கற்பனைபோற் காணும் புலமன்று
தெள்ளிதா வுள்ளந் திறக்கவகத் தூடுருவி
யொள்ளிதா நோக்குறிற்றன் னுண்மையொளி வீசுறுமே.

94

குருபோத வுண்மையொளி கூர்தலா லுள்ளத்
தொருபேத மில்லைநா னூனுன தாலே
நிருவாத ஞமோன ஞேயத் தழுந்தி
நிருவாணந் தானு நிலாவலுற் றேனே.

95

அகப்பே யிகப்பேனு னன்ம சொரூப
முகப்பான கைவல்ய முத்திப்பே ருகும்
அகப்பாழ் கடந்தா லனைத்துப்பல் வேறு
வகைப்பாழ் களுமொருங்கு மாயமாப் போமே.

96

ஞானத் தபோதனன்மெய்ஞ் ஞானவருள் கூர்தலால்
தீனக் கருத்தென்றுஞ் சேராப்பே ரின்பவருள்
வானப் பெருவாழ்வா மாட்சிபெற வாய்த்ததுபொய்ந்
நானற் றெளிர்சொருப ஞானானு பூதியே.

97

திசைநோக்கி யெம்மாற் றெழுத்தக்க தெய்வம்
இசையேத்தி வானவர்தா ழெம்மானெம் மன்னேர்
விசையாக்கும் மோகமனே வேகங் கெடுத்தாங்
கசைபோக்கும் போத வருட்சே வடியே.

98

இறுகிறுக்கி யென்னுயிரை வீக்கியவெம் பாசங்
கிறுகிறுக்க லுற்ற கிரந்திபே தத்தால்
மறுகியவென் சிந்தை மயக்கமறப் பொன்ற
நிறைககன மாக நிலாவியது நெஞ்சே.

99

படர்ந்தவற்றை யெல்லாம் படக்காட்சி யாகக்
கடந்தவற்றை வென்ற கடுங்கணு முண்மை
தொடர்ந்தகத்துச் செய்யான்ம சோதனைத்திட் பத்தா
*லடர்ந்தறியி லன்றி யவித்தை யருதே.

100

அறிவுருவா வுள்ளவென் னுண்டா னருளால்
அறிவுருவா வென்னை யறிந்தமைந்தேன் காட்சிக்
கறிவுருவே யாவிவ் வகிலமுந் தோன்றப்
பெறுவதுகொண் டவ்வறிவின் பெற்றியறிந் தேனே.

---

* அடர்ந்தறிதல் - அழுத்தமாக வறிதல்.

101

கந்தையே கட்டிவெறுங் கூழே குடிக்கினுமென்
சிந்தை யுவந்து சிவன்கழலே சிந்திக்க
விந்தைசேர் வாழ்வா விளேசிவஞா ஞனுபவத்
தெந்தையும் யானு மிரண்டறவொன் றுற்ருேமே,

102

அத்துவித மோனஞா ஞனுபவஞ் சேர்ந்தவருட்
சித்த விருத்தி சிவத்திற் பிரியாது
செத்தொழிந்த மோகச் செருக்காலே சித்தவியல்
சுத்தசிவ மென்னிற் ருெழிற்பாடு தோற்றமட்டே.

103

தானதுவாத் தொக்கவியன் சற்குருவால் வானமுதத்
தேனதியாக் கம்பெருகச் சேர்ந்தாங்கென் னுள்ளத்து
நானதுவாத் துன்றுமெய்ஞ் ஞானனு பூதியுறப்
போனதுதூக் கக்கனப்போற் புன்பிறவித் துன்பமே.

104

கொடும்பாடு பட்டுக் குலேந்தொழியா வாறு
திடம்படவே யென்னறிவைத் தேறத் தெளிவித்
துடம்பாடு முற்றவுளத் துண்மையாந் தன்னே
டுடும்புபோற் புத்தியுணர் வூட்டின ஞண்டவனே.

105

உள்ளவோ சற்று முபயமின்றி நானெனும்பொய்க்
கள்ளமனம் முற்றக் கரந்தொழியப் பாழ்கடந்து
தெள்ளத் தெளிந்தவருட் சிற்பரமாப் பொங்குமுளத்
துள்ளேனவ் வுள்ளமே யுண்மையுரு வாகவே.

106

கள்ள மனங்கரையக் கண்ணுலே சுத்தவருள்
வெள்ளம் பெருக்கியமெய் வித்தகன்பொற் பாதமலர்த்
தெள்ளமுத மான சிவானுபவம் பொய்ம்மாயக்
கொள்ளையாங் கூற்றமறக் கூடிற் றறிவகத்தே.

107

ஒற்றிநா னல்லே னுடையாய் பெருவிலையாப்
பெற்றுநான் கொண்டநின் பேரருளுக் கீடாக
விற்றே னெனைநானே மெய்யடிமை யாகவுனக்
குற்றகுற் றேவலென்பா லுள்ளுவந்து கொள்ளுதியே.

108

அருட்சீ ரொளிசேர்மெய் யன்ப ரகத்தில்
இருட்பே யகந்தை யியங்கா தொழியும்
மருட்பா ழகந்தையை மாற்று மனத்தில்
அருட்சீர் விளங்கு மமோகமாத் தானே.

109

தானேயாக் கண்டுபர தத்துவத்திற் செத்தமனத்
தானே றுடலுலகக் கற்பனைமுற் றேய்தலால்
யானே யெனதேயென் றேங்கலறு சுத்தவருள்
வானேயாங் கைவல்ய வாழ்வு தலைப்படுமே.

110

அகமிதமென் றூடே யலைபாய்ந் திடாது
நிகழ்மவுன ஞானமே நிட்டானு பூதி
முகிழ்மனக்கட் டான முரண்கெடச்செற் றூன்ற
வகன்பெருவாழ் வான வருள்வெளிதா னுமே.

111

தத்துவப்பொய்க் குப்பைகளாற் றூன்மறைந்தாற் போன்ற [வென்மெய்த்
தத்துவத்தைச் சித்துவமாந் தன்னொளியே காட்டலாற்
பொய்த்தொழியா மோனவியற் பூரணமாந் தன்மையுற்றேன்
அத்துவிதா னந்தஞா னுனுபவம் பொங்கவே.

112

எம்மா னருளா லிதயத் துபசாந்தச்
செம்மாண் பெரும்பதமாச் சேர்ந்தநிலை நானென்னும்
பொய்ம்மா லகன்றவருட் பூரணமாந் தன்விற்றூன்
சும்மா விருப்பான சுத்தானு பூதியே.

113

தன்னை யறியவோ தன்னு லறிபடவோ
பின்னையொன் றின்றிப் பிறங்குசிவக் கேவலமாம்
உன்னியலென் பாலொளிர்வித்தாண்டாய்பா லென்னுயிர்க்குப்
பொன்னியலிற் பூண்போற் பொலிந்ததொரு தன்மயமே.

114

இமையாத நோக்கமா வெங்கும் பரந்த
எமையா சொரூப வியல்பாந் துரீயக்
கமையார்ந்த காட்சியே கண்ணுக ஞானச்
சிமையமா மோனச் சிறப்படைவித் தாயே.

115

உறுதியா தென்றுநா னோராப் பிழைசேர்
மறதியா லூனமயல் வாழ்விற் களித்தேன்
இறைவனருட் பார்வையா லென்னறிவிற் கூடி
நிறைவெளியா மெய்வாழ்வு நேர்படக்கண் டானே.

116

குருமா மணிரமணன் கூர்த்தவருட் பார்வை
பிரமாத மாம்பிறவித் துன்பமறப் பேரத்
தெருமந் துழலுமனச் சிச்சடத்தைப் பேதித்
தருமந்த மோன வருள்வெளியாக் கண்டதே.

117

சொாந்த சொருபத் துலக்கத்திற் பந்தமுத்தி
விக்தைசேர் மாயா விலாசமாங் கற்பனையாய்
அந்தரமே போக வகப்பேய் அறத்தெளிந்து
சிந்தைமனம் புந்தியருட் சிற்பரத்திற் சேர்ந்தனவே.

118

என்பரமன் றனபே ரின்பவருட் செம்பதத்தைத்
தன்பரமென் றண்டவனே சாதித் தெனக்களித்தான்
நம்பனருட் சீர்மையையே நம்பியதல் லாதுமற்
றென்பரமா நானென் றியற்றிலேன் சாதனையே.

119

யானெனென் றெழுந்தநான் பொய்யாக் கரந்தொழியத்
தானு வொளிர்சொருபத் தற்பரமாஞ் சிற்பரத்தில்
கோனென்றே வன்றிக் குடியென்றே கும்பிடவோ
மேனிமிர்ந்து மேம்படவோ வேறொருத்தர்க் காணேனே.

120

போற்றியெனை யாண்டகுரு புங்கவா சித்தமலம்
மாற்றியெனைத் தன்மயமாத் தேற்றியென் னெஞ்சத்து
வீற்றிருந்தாய் போற்றியருள் வித்தகப்பே ராண்மையாற்
கூற்றமகன் றேடவருட் கொற்றந் துலங்கவே.

121

மறுக்கவொண்ணு மாய மயக்கப் பிறப்பை
யறுக்குமெய்ஞ் ஞான வருட்பார்வை யாலே
உறுக்கியகப் பேயையொழித் துய்யக்கொண் டாண்டான்
மறுக்கமில்சாந் தானுபவ மாட்சியளித் தானே.

122

சேரக் கடவ சிவத்துவத்தின் செந்நெறியா
ஓரக் கடவதுதன் னுண்மையே ஓர்த்துணர்ந்து
நேரக் கடவதுதன் னிட்டையே நிட்டையாற்
சாரக் கடவதுப சாந்தானு பூதியே.

123

ஒருவனுக்கே வாழ்க்கைப்பட் டொன்றியமெய் யன்பால்
ஒருவனையே பற்றினா னுரகத்தே யுள்ளேன்
ஒருவலின்றி யத்துவித வுண்மையா வந்த
வொருவனே யுள்ளுணர்வி லுற்றெளிர்கின் றனே.

124

நானற் றியல்சகஜ ஞான சமாதியால்
வானத் தினுமகத்தா வாழ்சொருப சற்குருவால்
ஊனப் பழமலப்பா ழுத்தையகப் பேயுணர்வா
மீனமற்று லன்றியுயிர்க் கெய்தரிது சாந்தியே.

125

உண்மையாந் தன்னையெனக் குள்ளுணர்வாந் தன்னெளியால்
வண்மைபெறக் காட்டியதன் மாட்சிசேர் சன்னிதியில்
திண்மைசேர் தன்சொருபச் சிற்பரத்தை யன்றியெனக்
குண்மைமற்றென் றின்று வுணர்வு தெளிந்ததே.

126

வறிய வொருவன் வளம்பெற்று வாழச்
சிறுபுன் குடிலிற் பெரும்புதையல் காட்டப்
பெறுவதே போலெம் பிரானருளா லூனச்
சிறுகுடிலிற் செம்பொருளே தேற்றப்பெற் றேனே.

127

ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாத் தேசுறல்போற்
சேருந் திறத்தாற் சிவசொரூப சற்குருவைப்
பேரும் பரமாகிப் பெற்றேன் சிவத்துவமே.

128

ஒற்கமின் றாகவென் னுள்ளத் தலர்ந்தபெரு
நற்கமல மானமெய்ஞ் ஞானப் பரசொருபம்
புற்கென் றொழியமற் றெல்லாப் புலன்களும்பொய்க்
கற்பனையாய்த் தன்மெய்க் கடவுளியல் காட்டியதே.

129

உன்மா ணடியை யுணர்ந்துணர்ந்து நெக்குநெக்குப்
பன்மா ணடுக்கப் பரவித் தொழுதலால்
உன்மாத மானபா ழூத்தையகப் பேயுணர்வு
*கொன்மாய மாகக் குலைந்த தருள்வெளிக்கே.

130

தன்பெருமை தானே யறியாத் தகைத்தெனிலவ்
வுன்பெருமை யானோ வுணர்ந்து வழுத்தவல்லேன்
நன்பெருமை சேர்ந்தமெய்ஞ் ஞானப் பரசொருப
மன்பெருமை கைவல்ய மாண்பான மோனமன்றே.

---

*கொன்மாயம்-பெருமாயம்.

131

பேணக் கடவசிவப் பேரு வகந்தெளிய
மாணக் கிளர்சொருப மாட்சிசே ராட்சியென்பால்
வேணவா முற்ற விளைத்தவென் மெய்யனெதிர்
நாணிக் குலைந்தது பொய்ந் *நானென் னகந்தையே.

132

மறப்பறியா மெய்ஞ்ஞான மாட்சிசே ருண்மைச்
சிறப்பியல்பா வுள்ளந் தெளிந்தளைந்த வாற்றல்
அறச்சிறியே னன்பெழநன் காற்ற வறிந்தேன்
அறப்பெரியா யுன்மெய் யருட்டிறமென் மாட்டே.

133

எண்ணற் கரிய வியல்பான சுத்தவருள்
வண்ணக் களிசேர் வசீகரக்கண் ணேக்கத்தால்
உண்ணைக் குருகவெனக் குண்ணு ரமுதமா
அண்ணிக்க லுற்றுன்மெய் யன்பறிவா வாண்டவனே.

134

இருவினைக்கே யாட்பட் டிருள்சேர் மயக்கக்
கருவழிக்கே சென்ற கருத்தை யொருத்தன்
றிருவடிக்கே யுய்க்கத் திருவருளாற் கூடிற்
றெருருபடித்தா வுண்மை யொளிபடைத்த வீடே.

135

வேடிக்கை சுத்தவருள் விச்சையையென் மெய்த்துணையாத்
கூடித் திளைத்தவென்பாற் கொள்ளியாக் கண்கனன்றே
யூடிக் கலாய்த்தென் னுறவோடு தன்னுயிர்ப்பும்
விடிற் றகூயையால் வெம்பா ழவிச்சையே.

---

*பொய்ந் நானென்னகந்தை-நானென்னும் பொய் யகந்தை.

136

உண்டுபோற் றேன்று முவற்றையே யன்றியவை
கண்டுதேர் தம்முண்மை காணத்தாங் கற்றிடார்
கண்டுதேர் தம்முண்மை காணிலகப் பேய்கழன்று
மண்டுபே ரின்பவருள் வாழ்வாம் பரந்தானே.

137

தோற்றத்தைக் காண்பானுந் தோற்றங்காண் பான்மையிலோர்
தோற்றமே யாகத் துலங்கத் தெரியிலன்றித்
தோற்றமா முப்புடியின் சூதினின்று தப்பியுயிர்த்
தோற்றமற்ற சொந்த சொரூபநிலை சேர்வரிதே.

138

குரூபவகப் பேய்மயக்கக் கோட்டாலை யற்ற
சொரூபவருட் போத சுகானுபவ சாந்தி
சரோவரமாப் பொங்கித் ததும்பவகத் துண்மைப்
பராபரமா முத்தி பலித்ததருட் பாங்கே.

139

இருளிற் கிடந்துழந்த வேழைமையால் ஆண்டா
னருளிலா னென்றன் றபசாரப் பட்டேற்
கருளியஞா ஞன்மசொரூ பானுபவக் கண்ணால்
அருள்வடிவ னென்றறிந்து வெட்கலுற்ற வாறே.

140

வெட்கலுறக் கண்டவருள் வித்தகனெல் லோராலு(ம்)
நட்கலுறத் தக்கமெய்ந் நாகரிகன் றன்னிடத்தே
தட்கலுற வெம்மனோர் தம்பிழையை யாந்துணுக்குற்
றுட்கலுறத் தோற்று முருத்திரமுங் கண்டாமே.

141

எளியனல்லன் மிக்க வரியனுந்தா னல்லன்
அளியனல்லன் சுத்த வருள்வெளியா மெய்யன்
ஒளியுணர்வ னென்னினுந்தம் முண்மையுளத் தோர்ந்து
தெளியினன்றிச் சற்றுந் தெரியவொண் ணுன் ருனே.

142

தெரியக் கிளர்சொருபச் சிற்புரணந் தானே
விரியப் பரந்த வெறுவெளியா முண்மை
அரியவது கேவலசுத் தாத்துவித மென்னிற்
றுரியமாத் தோன்றுமது மெய்யா வதீதமே.

143

இருளற் றெழுந்த விதயமே சுத்த
வருள்வெளியாப் பொங்கு மனந்தசிவ மாகத்
தெருளத் திளைத்தலே ஜீவன்முத் திச்சீர்
அருளும் பொருளும்வே றன்றந் நிலைக்கே.

144

தன்னை மறைத்தகோ சங்களையொவ் வொன்ருகத்
தன்னியலன் றன்றென்று தான்கழற்றிச் சோதனையாற்
றன்னுண்மை காணிற் றலைவன் வெளிப்படூஉம்
அன்னியமல் லாமெய் யருள்வெளியா வொன்றுபட்டே.

145

நோன்பென் பதுதனக் குற்றநோய் நோன்றலோ
டுன்பற் றுயிர்கட் குறுகண் செயாமையென்பர்
தான்பெற்ற சாந்திசுகஞ் சார்தற் கரியதுமற்
றூன்பற் றுயிர்ப்பிறவித் துன்பமற வூட்டினனே.

146

அற்றமறக் காட்டி யருளினன் சுத்தவருட்
*சிற்றம் பலமாச் சிவசொருப மெய்க்காட்சி
மற்றையறி வெல்லாம் மனோமயப்பொய்க் கற்பனையாத்
தெற்றெனவென் னுள்ளத்துத் தேற்றியதக் காட்சியே.

147

காட்சியொன்று கண்டதென்ப தல்லான்மற் றந்நிலையிற்
காட்சியைக் கண்டானக் காட்சியே தானானன்
மாட்சிசே ருண்மை மடுத்தக்க தந்தவெறுங்
காட்சியே யாகக் கலந்ததுகை வல்லியமே.

III

4. குருவருட் குதூகலம்

[இச் செய்யுட்களை அவ்வவற்றுக்குக் குறிப்பிட்ட இடங்களிற் சேர்க்கவும்.]

("இறையும் பிறிதொன்று" என்னும் 300-ஆம் செய் யுளுக்குப் பின்.)

1

துரியவெளியாகச் சுடர்கின்ற சொரூபஞான வடிவாக அனுபூதி யடைந்த தெனல்

இளிவா னவகந் தையெழுச் சியிலா
வெளியா கவுளத் துவிளங் குறுமெய்
யொளியா னசொரூ பவுணர் வுருவாத்
தெளிவா மனுபூ திசிறந் ததுவே.

("அறியா வறிவை" என்னும் 305-ஆம் செய்யுளுக் குப்பின்.)

---

*சிற்றம்பலம்-அதிசூக்ஷ்மமான அருட்பரவெளி.

2

அகம்பரமாகத் தெளிந்த அநுபூதி யறிவால் சிவத்தொடு தமக்கு உண்மைத் திருமண வாழ்வு கூடிற்றெனல்

உணர்வே புணர்வா கவுளத் திலெனக்
கணவும் பரமா னுபவத் தெளிவால்
தணவா நசதா சிவமே யகமாய்
மணவாழ் வுமலிந் ததுமங் கலமே.

("இடர்மண் டுபிறப் பினிடை" என்னும் 370-ஆம் செய்யுளுக்குப்பின்.)

3

அறிவுருவான அகத்திலன்றி ஐம்புலவுருவான உலகில் மனத்துக்கு அமைதியுண்டாகா தெனல்

அறிவா னவகத் திலடங் கிமனஞ்
செறிவா லுபசாந் திதிளைப் பதலால்
பொறிவாய் நழுவிப் புலனு முலகிற்
பிறிவா லலமந் துபிதிர் வுறுமே.

("வானெனன் றருள்வா ரி" என்னும் 432-ஆம் செய்யுளுக்குப்பின்.)

4

அகந்தை மயக்கமற்றுச் சிவமேயகமாகத் தெளியத் திருவருளாற் றவமெய்திய வாற்றை வியத்தல்

அவமா னமயக் கவகந் தையறச்
சிவமே யகமா கமனந் தெளியத்
தவமெய் தியவா தனதின் னருளாற்
பவமா னகனுப் படர்போ யிடவே.

IV

5. மெய்யகம்

[இச் செய்யுளை இப் பகுதியின் கடைசியில்—98-ஆம் பக்கம், "இதுவென் றதுவென்று" என்னும் 449-ஆம் செய்யுளுக்குப்பின் சேர்க்கவும்.]

அதுவா லறிவா வவிர்மெய் யகமாம்
பொதுவா கவிசே டமறப் புணர்வால்
மதுவா னபிரம் மசொரு பவியற்
பொதுவாம் பரிபூ ரணம்வா ழியவே.

V

7. பாதானுசந்தானம் என்னும் பாதமாலை

[இங்கு வரும் செய்யுட்களை இப் பகுதியின் கடைசியிற் சேர்க்கவும்.]

1

உணர்வொளியாந் தன்சொருப வுண்மையால் ஓர்ப்பார்
புணர்வெளிதா வுள்ளத்திற் பொங்குசிவ பாதம்.

2

எனக்கெனக்கென் றேங்கியிரங் கீனவகங் கெட்டாங்
கெனக்கினிக்க நின்றபே ரின்பவருட் பாதம்.

3

நித்தியமா முண்மைநிலை நிட்டைசேர் சுத்தவருள்
வித்தையா லென்னுள் விளைவித்த பாதம்.

4

அருள்வித் தகத்தா லறியிலன்றி யுள்ளத்
தொருபுத் தகத்தா லுணர்வரிதாம் பாதம்.

5

அந்தை யகன்றோர் அருளா லகத்தே
முகந்து திளைக்குமதி மோகனமெய்ப் பாதம்.

6

காண்டலரு முத்திக் கடவுட் பெரும்பதமா
ஈண்டடியே னுள்ளத் திலகுசிவ பாதம்.

7

இருவிதமா மோக வியற்கைதீர் ஞான
குருபதமா நான்கண்டு கொண்டதிருப் பாதம்.

8

மருட்காட்சி யாலே மயங்கியவென் னுள்ளத்
தருட்காட்சி யாக வவிர்சொருபப் பாதம்.

9

இகம்பரமென் றெல்லா மிகந்தொழிய வென்பால்
அகம்பரமா மோன வருள்வெளியாம் பாதம்.

10

அறிவிற் கிளர்ந்தமெய் யன்புணர்ச்சி யுள்ளத்
துறுவித் தகரா லுவத்தலுறும் பாதம்.

11

மோனத்தா லன்றி முழுமுதலாந் தன்னையெந்த
ஞானத்தா லுந்தேர்ந்து நண்ணலரும் பாதம்.

12

எண்ணற் கரிய வியற்கையால் யாருமெண்ணி
வண்ணிக்க வொண்ணு மவுனவியற் பாதம்.

13

மோஞனு பூதி முகப்பவென் னுள்ளத்தே
தாஞ வொளிர்சொருபத் தத்துவமாம் பாதம்.

14

கண்ணுன தன்னையந்தக் கண்கொண்டே யன்றிவெறுங்
கண்ணுடி கொண்டிறையுங் காணவொண்ணுப் பாதம்.

15

பாதானு சந்தானம் பண்ணுமகத் தான்றவருட்
போதானு பூதியாப் பொங்குறுபொற் பாதம்.

16

வண்ணமிலாத் தன்சொருப வண்ணத்தாற் சித்திரம்பல்
வண்ணமாக் கற்பித்த மாயாவிப் பாதம்.

17

மாயமயக் காகக்கா மாலைக்கண் காணுலகஞ்
சாயமறத் தான்வெளுக்கத் தானெளிர்மெய்ப் பாதம்.

18

கனவை நனவாக் கலங்கு மகந்தை
முனைவின் மயல்கெடுத்த மோனவொளிப் பாதம்.

19

அவிச்சை மயக்க வகந்தைமுனைப் பற்ருர்
சுவச்சமாத் தேறு சுவானுபவப் பாதம்.

20

ஏனையுணர் வெல்லா மிழுக்கலுறக் கற்பனையாய்
மோனவுணர் வாவகத்து மூண்டொளிர்மெய்ப் பாதம்.

21

சுத்தவருட் பூரணமாத் துன்றும் பரசொருப
வித்தகமுத் திப்பதந்தேர் வித்தகுரு பாதம்.

22

அறிந்தடையப் பெற்று லறிவுருவாந் தன்னை
மறந்தொழியப் போகாக்கை வல்லியமாம் பாதம்.

23

உருவண்ண மின்றி யொளிர்சொருப மோன
குருவண்ண மாகவுளங் கூடலுற்ற பாதம்.

24

அதுவேதா னாக வவிர்சொருப மோனத்
திதுவதுவென் றோர விரண்டில்லாப் பாதம்.

25

அன்னியத்தைத் தான்விளக்க லன்றித் தனைவிளக்க
வன்னியமொன் றில்லா வறிவொளிமெய்ப் பாதம்.

26

காணப் படுபவெல்லாங் கற்பனையாய்த் தான்பிறபோற்
காணப் படாதொளிர்மெய்க் கண்ணேயாம் பாதம்.

27

தான்றனக்கு வேத்தியமாய்த் தன்சொருப ஞானத்தா
லான்றபர மாகவிளங் கற்புதமெய்ப் பாதம்.

28

கான்றுலே போலப்பல் கற்பனைதன் முற்றோன்றத்
தான்றுனே யாகத் தழைத்தொளிர்மெய்ப் பாதம்.

29

சுஜாதமெனச் சொல்லுவார் சொல்லுகமற் றுள்ளாங்
கஜாதசித் தாந்தமுணர்த் தாச்சரியப் பாதம்.

30

அவாந்தரமாத் தோன்று மகங்கார மோகத்
துவாந்தங் களைந்தவருட் சோதியுருப் பாதம்.

31

முயல்சே ரகந்தை முனைப்பற்று ருள்ளத்
தியல்பா விருந்தொளிர்பே ரின்பநிலைப் பாதம்.

32

ஊனமனப் பாழ்மயல்செற் றுள்ளத் துபசாந்தத்
தேனமர்வாழ் வாகத் தெளிந்தொளிர்மெய்ப் பாதம்.

33

அடிமுடியென் றென்றினின்றென் றுய்ந்தறிய வொண்ணு
தடிமுடியென் றுயிரண்டு மைக்கியமாம் பாதம்.

34

தன்னையார் மெய்யாத் தரிசித்தா ரன்னவர்மெய்
தன்னினும்வே றுகாமெய்த் தத்துவமாம் பாதம்.

35

தானேமெய்த் தானமாத் தானேமெய்த் தானியாத்
தானே யொளிரிதயத் தத்துவமாம் பாதம்.

36

அருளுக்கூ ணுக வகந்தைமதி யற்றுங்
கிருளற் றொழியவிளங் கேகான்ம பாதம்.

37

நடத்தியெனைத் தானே நபாதியெனும் பாழைக்
கடத்தியமெய்ஞ் ஞானவருட் கண்மணியாம் பாதம்.

38

எல்லாமொன் ருக வியல்சொருப ஞானமா
நல்லாங் கிதயத்து நண்ணலுற்ற பாதம்.

39

ஆன்றவருட் பார்வைசே ராட்சியா லென்னகத்துப்
பூன்றவியற் காட்சியாப் புக்கவொளிப் பாதம்.

40

கட்டுப்பா டற்றவருட் காட்சியாற் சிந்தைக்கு
மட்டுப் படாமவுன வாழ்வான பாதம்.

41

சைத்தியவாழ் வானவுண்மைச் சாவாம் பிரமாதப்
பைத்தியத்தைக் கொல்லநல்ல வைத்தியமாம் பாதம்.

42

தோற்றத்திற் பற்பலபோற் சுட்டப் படினுமுண்மைத்
தேற்றத்திற் ருனென்ருத் திர்சொருபப் பாதம்.

43

தன்னைநா னுகத் தடுமா றியவறிவூ
டென்னைத்தா னுநன் கிலக்கியமெய்ப் பாதம்.

44

களியோங்கு மோகவகக் கார்விடுபட் டுள்ளம்
வெளிவாங்கி லன்றி விளங்கலரும் பாதம்.

45

ஙிறைவான மோனத்தே நீச மனப்புன்
குறையான வொற்கங் குலைவித்த பாதம்.

46

உள்ளமா வுள்ள வுணர்வாந்தன் னுண்மையையவ்
வுள்ளத்தி லன்றிமற் றோரவொண்ணுப் பாதம்.

47

வெற்றறிவாந் தன்னையவ் வெற்றறிவே கொண்டன்றிக்
கற்றறிந்து யாருங் கலங்கவொண்ணுப் பாதம்.

48

தானேநா னுகத் தழைத்தொளிர்சற் போதவருள்
வானேயா வென்னை வளைத்தபெரும் பாதம்.

49

மோனமே ஞான முடிபென் றறிஞர்சொல்லம்
மோனமே தன்சொருப முத்தியாம் பாதம்.

50

பந்தமே யோர்கற் பனையா வொழியத்தன்
சொந்தசொரு பத்திலென்றும் பந்தமற்ற பாதம்.

51

ஊனமன மின்றியுயிர்க் கோர்குறையு மில்லையென்றவ்
வூனமனங் கெட்டாங் கொளிர்சொருபப் பாதம்.

52

தன்னுழப்பாற் ருனதனைச் சாதிக்க முற்படுமத்
தன்னிழப்பா லன்றித் தலைப்படாப் பாதம்.

53

தொலைவிலா வுண்மையாத் துன்று சொருப
நிலையிலன்றி நீச்சுநிலை காண்டலரும் பாதம்.

54

மாட்டி மனத்தைத்தன் மாட்டே சொருபநிலை
காட்டிக் கொடுத்தவருட் கண்ணன பாதம்.

55

கேவல வுண்மைக் கிளர்ச்சியால் யானகத்து
நாவலோ நாவலென்ற ஞானவெற்றிப் பாதம்.

56

கோச வகந்தை குலைந்தவகத் தற்புதமெய்ந்
நேசவுணர் வாக நிலாவுசிவ பாதம்.

57

முனைப்பற் றெளிர்சொருப மூதறிவா மோனந்
தனைப்பற்றி லன்றித்தற் சாரவொணுப் பாதம்.

58

பொய்யாந்தற் போத வொழிவே பரமார்த்த
மெய்யாந்தற் பேரு விளங்கலுறும் பாதம்.

59

தீன வகந்தைச் செருக்கற்றுங் கென்னகத்து
மோன வருள்வெளியா முற்றலுற்ற பாதம்.

60

தானேதன் னுலறியத் தக்கபெருந் தத்துவமாத்
தானேதற் றேரிலன்றித் தானவிராப் பாதம்.

61

ஆனந்தந் தானே யகந்தைமனப் பாழ்கெடலாற்
றனந்த மற்றெளிர்மெய்த் தன்மையாம் பாதம்.

62

அந்த ரியாமியா வாண்டென்னை யேகான்ம
சொந்த சொருபமாத் தோய்ந்தொளிர்மெய்ப் பாதம்.

63

வெற்றறிவே சுத்தவருள் வித்தையாய் நானெனதென்
மற்றுறவாம் பாச மயக்கறுத்த பாதம்.

64

உட்டொளையில் லாச்செறிவா முண்மைப் பரத்திலருட்
கட்டளையா லென்னறிவைக் கட்டியமெய்ப் பாதம்.

65

மண்டிக் கிடக்குமகப் பேயொடுதான் சேர்ந்துமனத்
தொண்டுக் குடியிருக்க வொப்பாத பாதம்.

66

அறிவாந் தனையவ் வறிவா லறிந்தால்
அறிவான தானே யமுதமாம் பாதம்.

67

உறப்புணரத் தக்க துசாவா லுளத்தே
மறப்பற் றெளிர்சொருப மாண்பான பாதம்.

68

மருவலுற்றார்க் கென்றும் மனத்தினின்று மாறாத்
திருவருட்காப் பாகச் சிறந்தொளிர்மெய்ப் பாதம்.

69

ஜகத்திற் கலங்கியவென் சஞ்சலநோய் தீர
அகத்திற் கிளர்சிவசாந் தானுபவப் பாதம்.

70

புத்தியைத்தன் மாட்டுப் பொருத்திக்காப் பிட்டுவிடிற்
புத்திசற் போதமாப் பொங்குறுமெய்ப் பாதம்.

71

ஒருவாத மெய்யன்ப ருள்ளத்துத் தானே
குருவாகத் தன்சொருபங் கூட்டுவிக்கும் பாதம்.

72

வித்தைவடி வாகவொளிர் மெய்யருளாற் றன்சொருப
சத்தையடை வித்த சதாசிவமாம் பாதம்.

73

யானெனுந்தன் னுண்மையியல் யாதென் றறியிலந்த
யானகன்று மோன வியற்பரமாம் பாதம்.

74

சிக்கெனவென் சித்தத்தைச் சிற்பரத்திற் சேர்த்தலாற்
பொய்க்கனவை மாயமாப் போக்கியமெய்ப் பாதம்.

75

தேறுற் றவராற் றிளைத்தலுறச் சற்றுந்தான்
வேறற் றொளிர்சொருப மெய்யான பாதம்.

76

கடவதா மொன்றுக் கடைப்பிடித்துக் காணக்
கடவ சொருபவியற் கைவல்யப் பாதம்.

77

கழிப்பினுமற் றெல்லாங் கழிக்கவொணு வுண்மைச்
செழிப்பமாந் தன்சொருபச் செம்பொருளாம் பாதம்.

78

தனைக்கண்ட வென்னையந்தத் தானேநா னுக
நுனிக்கலுறக் கண்டகுரு நோக்கமாம் பாதம்.

79

சுத்தவறி வாகத் துலங்குவிசும் பொன்றுண்டேல்
அத்தகைய தோற்றத் தழகியமெய்ப் பாதம்.

80

தன்னையன்றி மற்ரென்றுந் தன்றிருமுற் ரேன்றவொண்ணு
அன்னவென்றி யாலகிலந் தான்கடந்த பாதம்.

81

அனர்த்தக் குலத்துக்கோ ராசயமாம் பாச
மனத்தைக் கடிந்துபர வாழ்வளித்த பாதம்.

82

கோசவகப் பாசங் குலைதலே சுத்தசிவ
நேசவருட் பத்தியா நெஞ்சிலொளிர் பாதம்.

83

தரிசித் தவரைமுற்றத் தன்னுருவாக் காட்டி
யிரசித்த லுற்றபே ரின்பவியற் பாதம்.

84

அன்பறிவா வுள்ளவென் னுண்டவனை நானியற்பே
ரின்பமுறக் காட்டியெனக் கீந்தவருட் பாதம்.

85

துங்கமெய்ஞ் ஞான சொருபப் பரமார்த்த
மங்கலவாழ் வாக மலர்ந்ததிருப் பாதம்.

86

மோனஞா னுனுபவ முத்தித் துலக்கவியல்
வானமா வென்னுள் வளர்சொருபப் பாதம்.

87

என்னே ரிலாதேற் கெளிவந் தருள்சுரந்த
தன்னே ரிலாத தயாசொருபப் பாதம்.

88

தன்னை யறிந்தா ரறிவைமுற்றத் தற்பரமாந்
தன்னிலே மோன சமாதிசெய்யும் பாதம்.

89

தனிக்கே வலசொருபத் தன்மையாற் றன்னை
நினைக்கரிதா மோன நிறைவான பாதம்.

90

எனக்கிறையா வுள்ளத் தெழுந்தருளி மோக
மனக்குறையை மாற்றியொளிர் மாநிறைவாம் பாதம்.

உ

ஸ்ரீ ரமணாநுபூதி

செய்யுள் முதற் குறிப் பகராதி

ஸ்ரீரமணாநுபூதி

அநுபந்தம்

நூலகத்துச் சேர்க்கவேண்டிய செய்யுட்களின் முதற் குறிப்பகராதி

III. (குருவருட் குதூகலம்)

IV. (மெய்யகம்)

V. (பாதானுசந்தானம்)

பிழையும் திருத்தமும்

65-ஆம் பக்கத்தில் 350—என்பதை 320—என்று திருத்தி வாசிக்க.